அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 27 | ஆகஸ்ட் 2023 திருவள்ளுவர் ஆண்டு 2054




## இரத்தத்தில் தோய்ந்தது செஞ்சோலை!

## அக்கினி

## கர்மா

## இராவணன் தமிழ் மன்னரா? சிங்கள மன்னரா?

## சிங்கள பௌத்த தேசபக்தியும் இனவாத எரியூட்டலும்

# புதிய வரலாறு எழுதப்பட்டது!!

அம்முக்குட்டி



பெண்கள் வெறும்
உணர்வற்ற கற்கள்
குடும்பத்தை காக்கும்
வேலிகள்..
அடிமைகளாய் வீட்டினுள்
முடங்கி
காலத்தை கழித்திடல்
கட்டாய சட்டமாய் அன்று

தாயக தேசத்தில் - எம்
சூரியப்புதல்வனின்
வரலாற்றில்
பெண்களும்
பெருமைக்குரியவராய்
உலகமே வியந்து பார்க்கும்
விவேகமும்வீரமும்
அஞ்சா நெஞ்சினராய்
உருவாக்கிய பெருமை
எம் தேசத் தலைவனுக்கே!!

ஆகஸ்ட் 18இல்
இருள் கிழித்து சூரியன்
உதித்திடும் பொழுதினில்
மங்கையர் பலர் கூடி
சத்தியதீயினால் புடம்
போட்டு
சபதமெடுத்து ஒன்றாகினர்

சிறுமலைக்காடு அன்று
சிறகைவிரித்தது!
பூவையர் வீரம்கண்டு
பூரித்துப் போனது!
சூரியனின் புதல்விகள்
அத்தியாயம்
ஆரம்பமானது!!

கடலிலும் தரையிலும்
காவியமாகினர்!
நினைக்கவே முடியாத
சாதனைகள் படைத்தனர்!
மண்ணோடு மண்ணாக
வரலாற்று நாயகிகள்
புதைந்து போனாலும்,
நலிவடைந்த சூழலிலும்
நம்பிக்கையோடு
தடைகளைத் தகர்த்து
இன்றும் வாழ்கிறார்கள்!
சூரியப் புதல்வன் தந்த
ஒளிக்கதிரின்
வழிகாட்டலில்



எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 27
ஆகஸ்ட்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| தற்கொலைக்கு... | 06 |
| 13 ஐ வைத்து விளையாட்டு... | 09 |
| பாரிய கட்சிகள்... | 12 |
| இராவணன் தமிழ்.... | 16 |
| ஈழப் போர்க்கால இசையின்... | 19 |
| செஞ்சோலை.... | 22 |
| கர்மா... | 24 |
| இரத்தத்தில் (கவிதை)... | 26 |
| சிங்கள பௌத்த... | 28 |
| சந்திரயான்- 3.... | 32 |
| கல்வியில் பெற்றோர்களின்.... | 34 |
| காற்றில் கரைந்த... | 36 |
| ரயில் பயண காதல் (கவிதை).... | 40 |
| புலவர்... | 41 |
| வலை (தொடர் கதை)... | 42 |




## திருக்குறள்

**குறள் 12:**

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை”

**விளக்க உரை:**

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.















மில்லரின் பெருவெடிப்பையும் வடமராட்சியின் விமானக் குண்டுவீச்சுகளையும் கண் முன்னே கொண்டு வந்து விட்டது சூரியப் புதல்வா கவிதை.

ஜூலைக் கலவரத்தில் வீடு வாசல்களை இழந்து உடுத்த துணியுடன் ஊருக்கு வந்தவர்களில் நாங்களும் அடக்கம். வாகனங்களுடன் எம்மவர்களைக் கொழுத்தியதையும், துரத்தித் துரத்தி வெட்டியதையும் மறக்கத்தான் முடியுமா?

**- குமார் குமாரசாமி குடும்பத்தினர், ரொறன்ரோ.**

இலவம்பழம் என்ற கட்டுரைத் தலைப்பு முதலில் குழப்பமாக இருந்தது. இலவங்காய் பழுப்பதில்லையே. கட்டுரையை வாசிக்கும் போதுதான் இல்லாத ஒன்றை இருப்பதாக எங்களுக்கு பூச்சுற்றுகிறார்கள் என்று புரிந்தது. தலைப்பு சரிதான்.

இந்த 13 ஐ வைத்து இன்னும் ஒரு நூறு வருடங்களை ஓட்டப் போகிறார்கள். நாங்களும் இப்படி கையறு நிலையில் நிற்கத்தான் போகிறோம். நினைக்கையில் வலிக்கிறது.

**- பேரின்பநாயகி முத்துக்கிருஷ்ணன் நெதர்லாந்து.**

குட்டிமணியைப் பற்றிய பதிவுகள் இத்தனை வருடங்கள் கடந்தும் உயிரே போவதுபோல் வலிக்கின்றன.

சிங்களத் துரோகிகளுக்கு எங்கள் இனத்தை தாரை வார்த்துக்கொண்டே இருக்கப் போகின்றோமா? உலகம் முழுவதும் சிதறிக் கிடக்கும் எங்கள் இனம் எப்போது ஒன்றாகச் சேர்வது? ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு அடிமை நான். நெல்லை க பேரனின் மறைவு ஒரு பெரிய இழப்புத்தான்.

**-கந்தவேள் சுவாமிநாதன் லிவப்பூல், இங்கிலாந்து.**

நிறையக் கட்டுரைகள் வருகின்றன. கதைகள், கவிதைகள் குறைவாக வருகின்றன என்பது என்னுடைய அபிப்பிராயம்.

பத்திரிகை நல்ல தரமாக இருந்தாலும் என்னைப் போன்றவர்களுக்காக கொஞ்சம் கதைகளும், குட்டிக் கதைகளும் போட்டால் என்ன?

**- மாலதி சபேசன் ஜேர்மனி.**

மலையக மக்கள் படும் அவலத்தை இதைவிட அழகாக யாரும் சொல்லிவிட முடியாது. மாலினி! உங்களுக்கு ஒரு பெரிய வாழ்த்து. தொடர்ந்தும் எழுதுங்கள். மனிதப் புதைகுழிகளில் பெண் போராளிகளின் உடைகளைக் கண்டதும் மனது ரணமாக வலிக்கிறது. சரணடைந்த பிள்ளைகளை என்ன சித்திரவதை செய்தார்களோ? தலைமை இல்லாமல் தத்தளிக்கிறோம் நாங்கள்.

**- ஜெயதேவ் ஜெகதீசன் கேன்ஸ், பிரான்ஸ்**




சினம்கொள் கவிதை அருமை. வலை அடுத்த மாத தொடருக்காக காத்துக் கிடக்கிறோம்.

தொடர்கதையுடன் சிறுகதை ஒன்று அல்லது இரண்டு போடலாமா? எழுநிலம் பத்திரிகையைப் பார்க்க எனக்கும் எழுத வேண்டும் என்ற உத்வேகம் வருகிறது. மனம் நிறைந்த பாராட்டுகள்.

தொடரட்டும் உங்கள் பணி.

**-பிருந்தா தேவ், லாஸ்ஏஞ்சல்ஸ்.**

இந்தமுறை ஜூலைக் கலவரம் பற்றிய தகவல்கள் பெரும்பகுதி இடத்தைப் பிடித்து விட்டன. இனி 13 ஐ வைத்து சிங்களத் தலைமைகள் விளையாடத் தயாராகி விட்டன.

இளையவர்களுக்கு பழைய வரலாற்றை எடுத்து உரைப்பதும் நடப்பு நிகழ்வுகளை உலகறியச் செய்வதும் அவசியம்.

அதே சமயம் ஒரு சிவில் அமைப்பாக நாங்கள் ஒன்று சேர வேண்டாமா? அடுத்த கட்டமாக மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று வழிகாட்டும் ஒரு முக்கியமான கருவியாக எழுநிலம் உருவாக வேண்டும் என்பது என்னுடைய அவா. தயவு செய்து கருத்தில் எடுங்கள்.

**- சச்சிதானந்தன், மெல்பேர்ண்.**

மனிதப் புதைகுழிகள் வெளிவருவது நல்லதுதான். புதைக்கப்பட்ட உண்மைகளில் கொஞ்சமாவது செவிடர்களாக வேஷம் போடும் உலகநாடுகள் காதில் ஒலிக்கட்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் வீட்டுக்கு வீடு அந்தரித்துக் கிடக்கிறோம். இன்னும் எத்தனை மனிதப் புதைகுழிகள் வெளிவருமோ? வீடியோவாகவே போட்டுக் காட்டினாலும் எந்தச் சிங்களவனுக்கும் தண்டனை கிடைக்கப் போவதில்லை. நாங்கள் கத்தியைத் தூக்கினால்தான் உண்டு.

**ஊரவன், தாயகம்.**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# தலையாய பிரச்சனை

## ஆசிரியர் பக்கம்

தமிழர் தாயகப்பிரதேசமான வடக்கும் கிழக்கும் கடுமையான வரட்சியைச் சந்தித்துள்ளன. குறிப்பாக வடபகுதி குடிநீருக்கே தவிக்கும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது. நீர்ப்பற்றாக் குறையால் பயிர்ச்செய்கையும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதால் மக்கள் நிவாரணத்தை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மழையின்மையால் மட்டும் வரட்சி ஏற்பட்டிருக்காது. எமது நிலத்தடி நீருக்கு என்ன நடந்தது? மழை நீரைத் தேக்கி வைக்கும் எந்த நீண்டகாலத் திட்டமும் இல்லாமல், மழை நீர் வீணாக கடலில் கலக்க விட்டதன் விளைவைத்தான் நாம் இப்போது அனுபவிக்கிறோம்.

நிலத்திற்கு கீழ் உள்ள சுண்ணாம்புப் பாறைகளின் இடையில் நிலத்தடி நன்னீர் ஓடுகிறது. கடலுக்கு அடியிலுள்ள சுண்ணாம்பு பாறைகளினுள் கடல்நீர் உள்ளது. மழைநீர் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் போது நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருக்கும். யாழில் கண்டமேனிக்கு குழாய்க்கிணறுகளை அமைத்து நீரை உறிஞ்சியதும், உறிஞ்சிக் கொண்டிருப்பதும், மழைநீரைத் தேக்கிவைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததும் நிலத்தடி நீர் மட்டத்தை குறைத்துவிட அந்த இடத்தினை நிரப்ப உவர் நீர் உட்புக ஆரம்பித்து விட்டது.வலிகாமத்தின் பல நன்னீர்க் கிணறுகள் உவராவதன் காரணம் இதுதான்.

இனப்பிரச்சனை தீர்க்கப்பட்டு தாயகம் விடுவிக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பிரச்சனைக்கு ஒரு விரைந்த தீர்வைக் காண நாம் தவறுவோமேயானால் எமது மண் உவர் நீராகி மக்கள் வாழத் தகுதியற்ற பூமியாகிவிடும். தண்ணீரின் பெறுமதி அளவிட முடியாதது. நன்னீர் அளவுக்கதிகமாக நுகரப்படும் போது குடிநீர் கிடைக்காது, பயிர்கள் கருகிவிடும், வாழவும் முடியாது. பொருளாதாரத்தை ஈட்ட முடியாது. தேசம் வளமிழந்து போகும். இறுதியில் நாடிருந்தும் அங்கு வாழ முடியாமற் போய்விடும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சியிலும் குழாய்க்கிணறுகள் ஏராளமாக அமைக்கப்படுகின்றன. கிளிநொச்சியின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து 30 அடிக்கும் குறைவான உயரத்திலேயே உள்ளது. நிலத்தடி நீரை குழாய்க்கிணறுகள் மூலம் கண்டபடி உறிஞ்சி எடுப்பதும் சிக்கனமற்ற தண்ணீர் பாவனையும் விரைவில் கிளிநொச்சியை உவர்ப் பிரதேசம் ஆக்கிவிடும். ஏற்கனவே கரையோரப் பிரதேசங்கள் உவராவதை காணக்கூடியதாக உள்ளது.

எமது மக்கள் எத்தனையோ பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தவர்கள். எழுந்திருக்கும் தண்ணீர்ப் பிரச்சனையை தமது சொந்தப் பிரச்சனையாகக் கருதி ஒன்றுபட்டு விரைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு கட்டுப்பாடுகள் போடப்பட்டிருந்தாலும் இன்னமும் அவை நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றிற்கு கடுமையான கட்டுப்பாடுகள் போடப்பட்டு நிலத்தடி நீரை உறிஞ்சுவதைக் குறைக்க வேண்டும். குளங்கள், நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு மழை நீர் சேகரிக்கப்பட வேண்டும். வீட்டுத் தோட்டங்களுக்குரிய நீர் ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு மூலம் ஓரளவு தீர்க்கப்பட முடியும்.

எல்லோரும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சொட்டு நீர்ப்பாசன முறைபற்றிய அறிவு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும். இளையோர் விவசாயத்தில் ஆர்வம் காட்ட வேண்டும்.நீர்ப்பிரச்சனையைப் போக்குவதிலும் அவர்கள் தமது தொழில் நுட்ப அறிவையும் ஆற்றலையும் செலவிட வேண்டும். நீண்ட காலத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதீத இரசாயன உரங்களின் பாவனையும் நிலத்தடி நீர் மாசுபட ஒரு காரணம். இதனால் இரசாயன உரப் பாவனையைக் கட்டுப்படுத்தி சேதனப்பசளையின் பாவனையை ஊக்குவிப்பதன் மூலம் மண் மலடாவதைத் தவிர்க்கலாம். இதன்போது நீர்ப் பயன்பாடும் குறைக்கப்படலாம். நிலத்தடி நீருடன் திண்மக் கழிவுகள் சேருவதும் நிலத்தடி நீரின் மாசுபாட்டிற்கு பிரதான காரணமாகவுள்ளது.இதனைத் தடுக்க முறையான மலசலகூடங்களை அமைப்பதும் அவற்றைப் பேணுவதும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

மாதிரிப் பண்ணைகளை அமைப்பதானது நீர்ச்சிக்கனம், உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு, பொருளாதார மேம்பாடு என்று எல்லாவற்றிற்குமான ஒரு தீர்வாக உள்ளது. மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று விரைந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் வருங்காலத்தில் தண்ணீர்ப் பிரச்சனை ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுப்பதைத் தவிர்க்க முடியாது.



பாரி

# தற்கொலைக்கு தூண்டுவது எது?

நீண்டகாலப் போரினால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் எமது தாயகப் பிரதேசத்தில்தான் உளவள நிலையங்களும், தற்கொலைத் தடுப்பு மையங்களும் இயங்கி மக்களுக்கு உதவியிருக்க வேண்டும். ஆனால், துரதிஷ்ட வசமாகவோ அல்லது திட்டமிட்ட வகையிலோ இவை எதுவுமே தமிழர் தாயகப் பகுதியில் இல்லை. சிறிலங்காவின் ஏனைய பகுதிகளில் இவ்வாறான நாற்பதிற்கும் மேற்பட்ட மையங்கள் இருந்தும் சிங்களப் பகுதிகளில் கல்வி கற்க சென்ற எமது மாணவர்களுக்கு இவை எதுவும் உதவ முடியாமல் போனதன் விளைவு, மாணவச் செல்வங்களில் சிலரை நாம் இழந்து நிற்கிறோம்.

மாணவர்களின் மன அழுத்தத்திற்கு நாம் எல்லோருமே பொறுப்பு ஏற்கவேண்டும். தற்கொலை என்பது கணப்பொழுதில் முடிவெடுத்து




செய்யப்படும் விடயமல்ல என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். தாம் மன அழுத்தத்தால் தவிக்கிறோம் என்பதை பலதடவைகள் தமது செய்கைகளின் மூலம் உணர்த்தியிருப்பார்கள் இவர்கள். தமக்கு மனநலம் சார்ந்த உதவி தேவைப்படுகிறது என்பதன் வெளிப்பாடே இந்த செய்கைகள்.

அவற்றைக் கவனித்து அவர்களுக்கு தேவையான உதவியைப் பெற்றுக் கொடுக்கத் தவறியதும், கவனித்தாலும் மனநலம் சார்ந்த ஆலோசனை பெற்றால் ‘பைத்தியம்’ என்றுவிடுவார்களோ என்று கவலையீனமாக இருந்ததும் இந்த உயிர்கள் பறிபோனதற்கு ஒரு வகையில் காரணியாகிறது. இதற்கு சமுகத்திலுள்ள அனைவருமே பொறுப்பேற்க வேண்டும்.

நமது பிள்ளைகளின் மன அழுத்தத்திற்கு சிறு வயதிலேயே அடிக்கல் நாட்டப்பட்டு விடுகிறது. பெற்றோரின் விருப்பங்களாக இவை பிள்ளைகளின் மேல் திணிக்கப் படுகின்றன. தமக்குக் கிடைக்காத, தான் விருப்பப்பட்ட ஒன்றை பிள்ளைகள் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், அயலவர் அல்லது தமக்குத் தெரிந்தவர் பிள்ளைகளை விட நமது பிள்ளை ஒருபடி மேலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களை ‘படி படி’ என்று எந்த நேரமும் வற்புறுத்துவதும் பிள்ளைகளை எப்போதும் ஒரு அழுத்த நிலையிலேயே வைத்திருக்கிறது.

அண்மைக்காலமாக அவை அனைத்தும் அதிகரித்திருப்பதை காண முடிகிறது. புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் வருகையால் அவர்கள் போன்றதொரு வாழ்க்கையை வாழ வேண்டும் அல்லது நாங்களும் புலம்பெயர் தேசத்திற்குச் சென்று விடவேண்டும் என்ற பேரவாவுடன் ஆரம்பக் கல்வி கற்கும் வயதிலேயே அவர்கள் ஆங்கில மொழிவழிப் பாடசாலைகளில் சேர்க்கப்படுகிறார்கள் அல்லது கட்டாயமாக ஆங்கிலம் படிக்க நிர்ப்பந்தப்படுத்தப் படுகிறார்கள். இங்கேயே பிள்ளைகளுக்கான அழுத்தம் ஆரம்பமாகி விடுகிறது.



> பாலியல் சீண்டல்கள், காதல் தோல்வி, உயர் கல்வியின் அழுத்தம், தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத மனோபாவம், பரீட்சை பயம், சமுக தொடர்பின்மை, சகிப்புத்தன்மை அற்ற நிலை, தவறான வீடியோ விளையாட்டுகள் என்பனவற்றுடன் வீட்டுச் சூழலைக் கடந்து பல் கலைக்கழகம் என்ற ஒரு புதிய உலகத்தினுள் பிரவேசிப்பதை தாங்கிக் கொள்ள முடியாமை என்று பலவிதமான மனவுளைச்சலை எமது பிள்ளைகள் சந்திக்கிறார்கள்.

தரம் ஐந்தினை குழந்தைகள் எட்டி விட்டால் போதும்.அந்தக் குழந்தைகளின் வீட்டில் எல்லோருமே ஒரு பெரிய பதற்றத்துடன் இருப்பதைப் பார்க்க முடியும். தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்காக பல இடங்களில் விசேட வகுப்புகளுக்கு அனுப்பப் படுவார்கள். அந்த வருடம் முழுவதுமே 'பரீட்சை வருகிறது படி படி' என்று பெற்றவர்கள் தம்மையும் வருத்தி அந்தக் குழந்தைகளையும் வருத்துகிறார்கள்.

இந்தப் பரீட்சையில் வெற்றி பெறா விட்டால் வாழ்க்கையே இல்லை என்னுமளவுக்கு அந்தக் குழந்தை தள்ளப் படுகிறது. இதற்கிடையில் அடுத்தவர் குழந்தையுடன் ஒப்பிட்டு, தமது பிள்ளையை கடிந்து கொள்வதும், கொஞ்சம் குறைந்து விட்டார் என்று எண்ணினால் உடனே வேறொரு 'ரியூசன்' ஒழுங்கு செய்வதும் நடக்கும்.

இதனால் குழந்தைகளிற்கிடையில் நட்பும் ஒற்றுமையும் வளருவதற்குப் பதிலாக பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் வளருவதைப் பார்க்க முடிகிறது. விளையாட்டாக கழிய வேண்டிய பிள்ளைகளின் பருவம் மூடிய சுவர்களினுள் புத்தகங்களுடன் கழிவது வேதனையானது. இதனால்தானோ என்னவோ அந்த வயதிலேயே அதீத கண்டிப்புடன் இருக்கும் பெற்றோரில் இருந்து மனதளவில் அவர்கள் சற்றுத் தள்ளிப் போவதையும் பார்க்க முடிகிறது. பரீட்சையில் வெற்றி பெற முடியா விட்டால் பரவாயில்லை, இதையும் தாண்டிய ஒரு அற்புதமான வாழ்க்கை இருக்கிறது என்றுசொல்லி வளர்க்கப்படாததன் விளைவு அவர்களால் தோல்வியைத் தாங்க முடிவதில்லை.

அண்மையில், 'இலங்கையில் ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள்' என்ற தலைப்பிலான ஒரு முகநூல் பதிவு எல்லோர் மனங்களையும் உலுக்கியிருக்கும்.'ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந்தது, ஒருவருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்' என்பதாக அந்த செய்தி தொடர்ந்தது. இதைவிட அழகாகஅண்மைய நிலையை எடுத்துரைக்க முடியாது.

பல்கலைக்கழகத்தில் நுழைவதுதான் எமது ஒரே இலட்சியம் என்ற நோக்கோடு வளர்க்கப்படுவதனால் வயது ஆக ஆக பிள்ளைகளின் சுமையும் அதிகரிக்கின்றது. சமுகச் சீர்கேடுகளான போதைவஸ்துகள், கசிப்பு போன்ற குடி வகைகள் ஒருபுறம், அதீத கண்டிப்புப் காட்டுவதாக எண்ணி மாணவர்களை அடித்துத் துன்புறுத்தும் ஒரு சில ஆசிரியர்கள் இன்னொரு புறமுமாக இவற்றைக் கடந்து கல்வி நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர் எமது மாணவர்கள்.

உண்மையாகவே மாணவ நலனுக்காகப் பாடுபடும் நல்லாசிரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள்தான் மாணவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்து வழிகாட்டுகின்றனர். ஆயினும், அந்த ஆசிரியர்களின் நியாயமான கற்பித்தல் முறைக்கு மதிப்பளிப்போர் குறைவாகவே உள்ளனர்.

மாணவ மாணவியரிடம் தகாத முறையில் பாலியல் சீண்டல்களில் ஈடுபடும் ஆசிரியர்கள் சிலரினாலும் மாணவர்கள் வெளியில் சொல்ல முடியாமல் தமது மன உளைச்சலை தமக்குள்ளே பொத்திப் பொத்தி வைத்திருந்து தம்மை வருத்துகின்றனர். தமது பிள்ளைகளின், உறவினரின் அல்லது அயலவரின் நடவடிக்கையில் ஏற்படும் மாற்றத்தை அவதானித்து உடனே தீர்க்க முயன்றால் பிள்ளைகள்



இவ்வாறு மன உளைச்சலில் அவதிப்பட வேண்டியதில்லை.

எல்லாவற்றிலும் முக்கியமானதாக, நாம் நமது பிள்ளைகள் சொல்ல வருவதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். எதுவாயினும் எங்கள் பெற்றோரிடம் சொல்லலாம் என்ற நம்பிக்கை, துணிச்சல் பிள்ளைகளுக்கு எழ வேண்டும். அவர்கள் என்ன படிக்க விரும்புகிறார்கள், என்னவாக விரும்புகிறார்கள் என்பதை பிள்ளைகளுடன் பேச வேண்டும். அவர்களுக்காக நாங்கள் முடிவெடுப்பதும், மற்றவர்கள் முன்னால் கௌரவத்திற்கு காட்டுவதற்காக என்று பிள்ளைகள் விரும்பாத பாடங்களை பெற்றோரே தெரிவு செய்வதும் பின்னாளில் மேற்படிப்பை அவர்கள் தொடர முடியாமல் தவித்து மன உளைச்சலுக்குள்ளாக காரணமாகின்றன.

**“புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் வருகையால் அவர்கள் போன்றதொரு வாழ்க்கையை வாழ வேண்டும் அல்லது நாங்களும் புலம்பெயர் தேசத்திற்குச் சென்று விடவேண்டும் என்ற பேரவாவுடன் ஆரம்பக் கல்வி கற்கும் வயதிலேயே அவர்கள் ஆங்கில மொழிவழிப் பாடசாலைகளில் சேர்க்கப்படுகிறார்கள் அல்லது கட்டாயமாக ஆங்கிலம் படிக்க நிர்ப்பந்தப்படுத்தப் படுகிறார்கள். இங்கேயே பிள்ளைகளுக்கான அழுத்தம் ஆரம்பமாகி விடுகிறது.”**



பல்கலைக்கழகம் ஒரு மாயப் பிம்பமாக மாணவர்கள் மனதில் எழுப்பப்படுகின்றது. மிகக் கடினமாக உழைத்து பல்கலைக்கழகம் சென்றுவிட்டால், அதன் பின் கஷ்டப்படத் தேவையில்லை என்ற எண்ணப்பாங்கு வளர்க்கப்பட்டு விடுகிறது. தரப்படுத்தலைத் தாண்டி ஒவ்வொரு தமிழ் மாணவனும் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

அங்கு சென்றுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற எண்ணத்துடன் படித்து பல்கலைக்கழகம் புகுந்த பலரால், மேற்படிப்பிற்கு இன்னும் அதிகமாக கஷ்டப்பட்டு படிக்க வேண்டியிருக்கும் என்பதை அனுபவரீதியாகப் பார்த்து சீரணிக்க முடிவதில்லை. அவர்களில் சிலர் விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டு விடுகிறார்கள்.



பாலியல் சீண்டல்கள், காதல் தோல்வி, உயர் கல்வியின் அழுத்தம், தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத மனோபாவம், பரீட்சை பயம், சமூக தொடர்பின்மை, சகிப்புத்தன்மை அற்ற நிலை, தவறான ‘வீடியோ’ விளையாட்டுகள் என்பனவற்றுடன் வீட்டுச் சூழலைக் கடந்து பல்கலைக்கழகம் என்ற ஒரு புதிய உலகத்தினுள் பிரவேசிப்பதை தாங்கிக் கொள்ள முடியாமை என்று பலவிதமான மனவுளைச்சலை எமது பிள்ளைகள் சந்திக்கிறார்கள்.

இலங்கையில் 10 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளில் 39% ஆனோர் மனவுளைச்சலில் அவதிப் படுவதாக புள்ளிவிபரங்கள் சொல்லுகின்றன. சிறுவயதிலிருந்தே பிள்ளைகளின் திறன்களைக் கண்டறிந்து வளர்த்துவிடல், விளையாட்டு, சமூக சேவைகளில் ஈடுபடுத்துதல் என்பன கட்டாயமாக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளை செவிமடுப்பதும் அவர்கள் விரும்பும் கல்வியைத் தொடர அனுமதிப்பதும் அவர்கள் நிம்மதியான, சந்தோசமான வாழ்க்கையைத் தொடர வழிவகுக்கும்.

எல்லாவற்றிலும் முக்கியமானதாக அவர்களை வெற்றி – தோல்வி இரண்டையும் ஏற்று வாழப் பழக்க வேண்டும். கைவிட்டுப் போன ஒன்றை எண்ணி மன உளைச்சலுக்கு ஆளாகாமல், இன்னும் வாழ வேண்டிய ஒரு அற்புதமான உலகம் உங்கள் முன்னே விரிந்து கிடக்கிறது, அங்கே அவர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கக் கூடிய ஆயிரமாயிரம் வழிகள் இருக்கின்றன என்று சொல்லி வளருங்கள். அவர்களை ஒரு கொதிகலன் போல கொதிநிலையில் வைத்திருப்பதை தவிர்ப்போம்.

தற்கொலை ஒருபோதுமே எதற்கும் தீர்வாகாது. இவ்வளவு பிரச்சனைகளைக் கடந்து வந்தவர்கள் நாங்கள்.. இன்னமும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருப்பவர்கள். சமூகமாக நின்று எதிர்கொண்டு, எங்கள் இளைய தலைமுறையினரைப் பாதுகாப்போம்.



# 13 ஐ வைத்து விளையாட்டு காட்டும் ரணில்

இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய கையோடு தனது தேசிய நல்லிணக்கத் திட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து ஆராய்வதற்கு ஜூலை 26 நாடாளுமன்ற கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதில் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய எந்த விடயத்திலும் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில், இவ்வாரம் நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் குறித்து விசேட அறிக்கையொன்றை வெளியிடயிருப்பதாக அவரின் ஐக்கிய தேசிய கட்சி கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

ஜனாதிபதியின் இத்தகைய அறிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பதே வழமையாகும். ஆனால், இத்தடவை ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து அறிவிப்பு வந்திருக்கிறது.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து மற்றைய சகல அதிகாரங்களையும் எவ்வாறு பரவலாக்கம் செய்வது என்பது குறித்து விளக்கம் அளிப்பார். 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்துவதுடன் தொடர்புடைய சகல யோசனைகளும்





அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையின் முன்னைய எந்தவொரு ஜனாதிபதியையும் விட கூடுதலாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும் ஜனாதிபதியாக விக்கிரமசிங்க விளங்குகிறார். அவர் பதவிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் இரு தடவைகள் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களை ஒத்திவைத்து புதிய கூட்டத் தொடர்களை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். அவரை சில அரசியல் அவதானிகள் 'நாடாளுமன்ற ஜனாதிபதி' என்று நகைச்சுவையாக வர்ணிப்பதுண்டு.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு தனது அரசாங்கம் இரு வருடங்களில் கட்டங் கட்டமாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழாவில் வைத்து விக்கிரமசிங்க செய்த அறிவிப்பு தென்னிலங்கையில் சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் சக்திகளின் கடுமையான எதிர்ப்பை கிளப்பிய பிறகு இரு தடவைகள் அவர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உரைகளை நிகழ்த்தினார்.

ஒன்று இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்தன்று (பெப்ரவரி 4) மாலை தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை. மற்றையது நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய (பெப்ரவரி 8) கொள்கை விளக்க உரை. இரண்டு உரைகளிலுமே அவர் 13ஆவது திருத்தம் குறித்து வாய் திறக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் விக்கிரமசிங்க உரையாற்றிக் கொண்டிருந்தபோது வெளியே ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய பௌத்த பிக்குமார் 13 ஆவது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தியதைக் கண்டோம்.

**" அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்க்கட்சிகள் எப்போதும் ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்லாத – சிங்கள அரசியல் சமுதாயத்தின் குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் அரைகுறைத் தீர்வொன்றுக்கு தமிழர்களின் பிரதிநிதிகளினால் இணங்கமுடியாது என்பதே யதார்த்த நிலை. "**

இப்போது அவர் சிங்கள தேசியவாத சக்திகளின் எதிர்ப்பைக் குறைக்கும் ஒரு தந்திரோபாயமாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் இல்லாமல் அந்தத் திருத்தத்தை பலவீனப்படுத்தும் யோசனையை முன்வைத்துவிட்டு அது குறித்து சபையில் விசேட உரையாற்றவிருக்கிறார். நாடாளுமன்ற கட்சிகளின் மகாநாட்டில் உரையாற்றியபோது இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் குறிப்பாக 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் முழுப்பொறுப்பும் அதிகாரமும் நாடாளுமன்றத்துக்கே உள்ளது என்று கூறிய இரு வாரங்களுக்குள் அவரின் இந்த கருத்து வருகிறது.

இந்த இரு வாரங்களில் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட சிங்கள அரசியல் கட்சிகளினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தனது முயற்சிகளுக்கு முன்னால் வரக்கூடிய சவால்களின் பாரதூரத் தன்மையை ஜனாதிபதிக்கு மீண்டும் உணர்த்தியிருக்கும். 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் குறித்து விக்கிரமசிங்க பேசத்தொடங்கிய பிறகு கடந்த ஏழு மாதங்களில் அந்தத் திருத்தத்துக்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு முன்னரையும் விட அதிகமாகியிருக்கிறது.

ஆனால், அது பற்றி எதையும் கூறாமல் ஐக்கிய தேசிய கட்சியின் கடந்த வாரத்தைய அறிக்கை தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்ற வேறுபட்ட அபிப்பிராயங்கள் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு இடையூறாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது.

இது விடயத்தில் அந்தக் கட்சி தமிழ்க்கட்சிகளை குறைகூறுவது இது முதற்தடவையல்ல.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றபோது மெய்நிகர் வழியாக உரையாற்றிய ஜனாதிபதி தமிழ்க்கட்சிகள் ஒத்துழைப்பதற்கு தயங்குவதன் காரணமாக தன்னால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வைக்காண முடியாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதுபோக இடைப்பட்ட காலத்தில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்புகளின்போது அவர்களின் நிலைப்பாடுகள் குறித்து தனது அசௌகரியத்தை அவர் வெளிக்காட்டி வந்திருக்கிறார்.

இனப்பிரச்சினை திகதி குறிப்பிட்டு குறுகிய கால அவகாசத்திற்குள் அரசியல் இணக்கத்தீர்வை காணக்கூடிய ஒன்று அல்ல. ஆனால், விக்கிரசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு தீர்வைக் காண்பதற்கு திகதிகள் குறித்து அடிக்கடி பேசுகிறார். முதலில் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு





குறித்து பேசிய அவர் இறுதியாக இணைக் கப்பாட்டை காண்பதற்கு ஜூலை 31ஆம் திகதியையும் குறித்தார். இவ் வாறாக திகதிகள் குறிப்பதன் மூலமாக தன்னை ஒரு பெருந்தத்தன்மைக்கு ஏன் ஜனாதிபதி உட்படுத்துகிறார் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைக்கும் அவரது அவசர அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு வசதியான முறையில் பல தசாப்தங் களாக தீர்வு காணப்படாமல் இருக்கும் சிக்கலான இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்க் கட்சிகளினால் நடந்துகொள்ள முடியாது.

அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்க் கட்சிகள் எப்போதும் ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அர சியல் அபிலாசைகளை நிறைவேற்று வதற்கு போதுமானதல்லாத – சிங்கள அரசியல் சமுதாயத்தின் குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் அரை குறைத் தீர்வொன்றுக்கு தமிழர்களின் பிரதிநிதிகளினால் இணங்கமுடியாது என்பதே யதார்த்த நிலை.

தமிழ்க்கட்சிகள் மத்தியில் காணப்படும் வேறுபட்ட கருத்துக்கள் தனது முயற்சி களுக்கு ஒரு இடையூறாக இருப்பதா கவும் அந்தக் கட்சிகள் தன்னுடன் ஒத் துழைக்கத் தயங்குவதாகவும் குற்றம் சாட்டும் விக்கிரமசிங்க இனப்பிரச் சினையின் வரலாற்றில் இதுகால வரை யில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந் தமைக்கு பிரதான காரணம் சிங்கள பௌத்த மேலாதிக்கப் போக்கும் தென் னிலங்கை கட்சி அரசியலுமே என் பதை தெரியாதவரல்ல. இந்த நூற் றாண்டின் தொடக்கத்தில் அத்தகைய தீர்வு முயற்சியொன்றின் தோல்விக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வேளையில் அவரும் கூட பெருமள வுக்கு பொறுப்பாக இருந்தார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான தனது விருப்பத்துக்கு தடையாக இருக்கும் சக்திகளையும் விக்கிரமசிங்க தெளிவாக அறிவார். அதனால் அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்க்கட்சிகள் ஒத்து ழைக்காமல் இடையூறாக இருப்பதாக அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டு எந்த அடிப்படையும் அற்றது என்பது மாத்திர மல்ல உண்மையில் இடையூறாக இருந் துவரும் சக்திகளிடம் இருந்து தன்னை தனிமைப்படுத்த அவர் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடுமாகும்.

> **இனப்பிரச்சினைத் தீர்வுக்கு காலங்காலமாக முட்டுக்கட்டையாக இருந்துவரும் தென்னிலங்கை சக்திகளையும் ஜனாதிபதியும் அவரது கட்சியும் குற்றஞ் சாட்டியிருந்தால் அவர்களின் முயற்சிகளில் ஒரு நேர்மையின் சாயல் இருக்கிறது என்று நம்பமுடியும்.**

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு காலங்காலமாக முட்டுக்கட்டையாக இருந்துவரும் தென்னி லங்கை சக்திகளையும் ஜனாதிபதியும் அவரது கட்சியும் குற்றஞ் சாட்டியிருந்தால் அவர்களின் முயற்சிகளில் ஒரு நேர்மையின் சாயல் இருக்கிறது என்று நம்பமுடியும்.

தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை, ஜனாதி பதி முன்னெடுக்கும் முயற்சிகள் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய உருப்படியான அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும் என்ற முழுமையான நம்பிக்கையில் அவருடன் பேச்சுவார்த்தைக ளுக்கு செல்லவில்லை. இதுவரையான சந்திப் புக்களில் காணப்பட்டிருக்கக் கூடிய இணக்கப் பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அரச இயந்திரத்தை வழிக்குக் கொண்டு வரமுடியாத வராகவே அவர் இருக்கிறார்.

ஆனால், அதேவேளை சிங்கள தேசியவாத சக்திகளின் நெருக்குதல்கள் காரணமாக இனப்பி ரச்சினை தீர்வு தொடர்பிலான தனது முன்னைய நிலைப்பாடுகளில் தான் செய்யும் தளர்வுகளுக்கு தமிழ்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கிறார்.

என்றாலும், அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒத் துழைக்கவில்லை என்ற பழி தங்களுக்கு வந்துவி டக்கூடாது என்பதற்காகவே பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதாக தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக கூறுகிறார்கள். உருப்படியான எந்த முன்னேற்றமும் இல்லாமல், பழியைக் காரணம் காட்டி எவ்வளவு காலத்துக்கு இந்தத் தலைவர்கள் இந்தப் போக்கில் செல்லமுடியும் என்ற ஒரு கேள்வி எழுகிறது.

தமிழர்களுக்கு எவற்றைக் கொடுக்கக்கூடாது என்பதில் சிங்கள அரசியல் சமுதாயத்திற்குள், பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஒரு கருத்தொருமிப்பு காணப்படுகிறது. ஆனால், தமிழ் மக்களுக்குத் தேவையானதை கேட்பதில் தமிழ் அரசியல் சமுதாயம் ஒருமித்து நிற்கமு டியாமல் முன்னென்றும் இல்லாத அளவுக்கு சிதறுண்டு போயிருக்கிறது. அது விடயத்தில் தமிழ்க்கட்சிகள் மீது குற்றஞ் சாட்டுவதற்கான அருகதை தமிழ் மக்களுக்கு இருக்கமுடியுமே தவிர ஜனாதிபதிக்கோ அல்லது சிங்கள கட்சிக ளுக்கோ கிடையாது.



# பாரிய கட்சிகள் சரிவில்:



# தேர்தல்கள் நான்குமுனை மோதலாக மாறும்

திசராணி

கடந்த வாரம், விக்கிரமசிங்க நிர்வாகம் ஜப்பானுடனான இலங்கையின் முறிந்த உறவுகளை மீட்டெடுப்பதில் மும்முரமாக இருந்தது. சுதந்திரம் பெற்றதில் இருந்து, டோக்கியோவுடனான கொழும்பின் தொடர்புகள் கோத்தாபய – மகிந்த ராஜபக்ச நிர்வாகம் ஜப்பானிய நிதியுதவியுடனான இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை ஒருதலைப்பட்சமாகவும் முறையற்ற விதத்திலும் நிறுத்தும் வரை நட்பாகவும் ஆக்கபூர்வமாகவும் ஒப்பீட்டளவில் சிக்கலற்றதாகவும் இருந்தன.

ஜப்பான் முதன்முதலில் பணிநீக்கம் குறித்து ஊடக அறிக்கைகள் மூலம் கேள்விப்பட்டதாக கூறப்படுகிறது.பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் இந்த முடிவு, சீனாவை நோக்கிய ஆட்சியின் தீவிர மையத்தின் விளைவாக பரவலாகக் கருதப்பட்டது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க ஜப்பானை தொடர்ந்து கவர்ந்து செல்வது அவரது வெளியுறவுக் கொள்கைக்கும் அவரது முன்னோடியின் கொள்கைக்கும் இடையே உள்ள பரந்த இடைவெளியைக் குறிக்கிறது. பெய்ஜிங்கின் உணர்வுகளுக்கு எரிச்சலூட்டும் வகையில் எதையும் கூறக்கூடாது என்பதில் விக்கிரமசிங்க கவனமாக இருக்கிறார்.

ஆனாலும் அவர் மெதுவாக இலங்கையை சீனாவின் சுற்றுப் பாதையில் இருந்து வெளியேற்றுகிறார் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் கடந்த வார விஜயம் இந்தப் புதிய பாதையில் ஒரு மைல்கல்லைக் குறிக்கிறது. இந்தோ–பசிபிக் பகுதியைச் சுற்றி பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட டோக்கியோ தலைமையிலான முன்முயற்சியில் இலங்கை ஒரு முக்கிய பங்காளியாக உள்ளது' என்று ஹயாஷி கூறினார். அத்துடன் 'அதிகரித்த முறையில் உறுதியான சீனாவை எதிர்கொள்வது' (ஏ பி – 29.7.2023).

கடந்த வாரம், ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலான இரட்டை அதிகார இயக்கவியல், இலங்கையின் வெளிநாட்டு உறவுகளிலும் பரவியது.ஓய்வுபெற்ற அட்மிரலும் பேராசிரியரும் மற்றும் இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவருமான ஜயநாத் கொலம்பகே, கொழும்பின் அனுமதியின்றி தலிபான்களுடன் ஒரு 'அதிகாரபூர்வ' கலந்துரையாடலைக் கொண்டிருந்தார் (கொலம்பகே ஜனாதிபதி கோத்தாபயவால் அவரது வெளியுறவுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்). காபூலில் உள்ள வெளிவிவகார அமைச்சு சந்திப்பு பற்றிய செய்தியை ருவீட் செய்யாமல் இருந்திருந்தால் (கொலம்பகே இரண்டு தலிபான் அதிகாரிகளுடன் இலங்கைக் கொடியுடன் போஸ் கொடுக்கும் படத்துடன்) கொழும்பு தனது தூதுவரின் கோமாளித்தனங்களை அறியாமல் இருந்திருக்கலாம்.

பொதுவாக உலகின் பெரும்பாலான நாடுகளைப் போன்றே இலங்கை, தலிபான் அரசாங்கத்தை அங்கீகரிக்கவில்லை.தலிபான்கள் தங்கள் பிராந்தியங்களில் உள்ள தூதரகம் / தூதரகத்தை கையகப்படுத்த அனுமதித்த ஒரு சில நாடுகளில் சீனாவும் உள்ளது. தூதுவர் கொலம்பகே கொழும்பின் ஆணையை மீறச் செய்தது மற்றும் தலிபான் பிரதிநிதிகளை நடத்துவது எது?அவர் அறியாதவராக இருந்தாரா அல்லது கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள அவரது உண்மையான எஜமானர்களுக்காக செயற்படுகிறாரா?





எப்படியிருந்தாலும்,இந்தத் தவறு ரணில் விக்கிரமசிங்கவின் மற்றும் அவரது ராஜபக்ச ஆதரவாளர்களின் பாதையின் அத்தியாவசியமான இணக்கமின்மையின் மற்றொரு நிரூபணமாக இருந்தது. 2022 மே மற்றும் ஜூலை மாதங்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்சவும் ஒருவரையொருவர் அரசியல் பிழைப்புக்காகவும் ஆதாயத்திற்காகவும் பயன்படுத்திக் கொண்டனர். அந்த சந்தர்ப்பவாதக் கூட்டணி தேர்தலில் நிலைத்திருக்க முடியாது.

'தற்போதைக்கு, தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக (ரணில் விக்கிரமசிங்கவுக்கு) ஒரு சிறிய ஒப்பந்தத்தை வழங்கியுள்ளோம்' என்று பசில் ராஜபக்சவின் விசுவாசியும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார ஜூலை மாத இறுதியில் பொதுஜன பெரமுன ஆதரவாளர்களின் கூட்டத்தில் கூறினார்.'ஆனால் விரைவில் எதிர்காலத்தில் பொதுஜன பெரமுன அரசாங்கம் அமைக்கப்படும்.'என்று குறிப்பிட்டிருந்தார்.

கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தொடர்ச்சியான வாக்காளர் மற்றும் மாவட்ட அளவிலான கூட்டங்களின் போது இரு தரப்புக்கும் இடையிலான முரண்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் அப்பட்டமாக வெளிச்சத்திற்கு வந்தன. ஒரு வேடிக்கையான மாற்றத்தில் பசில் ராஜபக்சவின் மறுசீரமைப்பு உந்துதல், பொதுஜன பெரமுனவில் உள்ள ரணில் மற்றும் ராஜபக்ச ஆதரவு தரப்பினரின் எதிர்காலத்திற்கான தங்கள் எதிர்ப்புத் திட்டங்களை முன்வைப்பதற்கான ஒரு பொது மேடையாக மாறியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி விக்ரமசிங்கவிற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டும் என பண்டாரவளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்றில் அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். இதன்போது உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நாங்கள் சிதைக்க மாட்டோம் என அங்கு கூடியிருந்த விசுவாசிகளுக்கு உறுதியளித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட மாநாட்டில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து ஆட்சி அமைக்கும் என தெரிவித்தார்.அதே கூட்டத்தில் பேசிய ராஜபக்சவின் சகோதரியின் மகன் நிபுண



ரணவக்க, யார் ஜனாதிபதி வேட்பாளர், யார் ஜனாதிபதியாக வருவார்கள் என்பதை நாங்கள் பார்த்துக்கொள்வோம். தேர்தலில் வெற்றி பெற்று பொதுஜன பெரமுன ஆட்சியை அமைத்து காண்பிப்போம்...என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில், புவிசார் அரசியல் நிலைமை இலங்கைக்கு மிகவும் நெருக்கடியானதாக மாறிவருகிறது. வேர்ஜீனியாவின் வில்லியம் மற்றும் மேரி பல்கலைக்கழகத்தின் எயிட் டேட்டா ஆய்வுத் திட்டத்தின் படி, சீனா தனது புதிய கடற்படைத் தளத்தை அமைக்க விரும்பும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் உள்ளது.

அம்பாந்தோட்டை 'சீனாவின் மிகப்பெரிய துறைமுக முதலீடு' என்று அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இந்த முக்கியமான விடயத்தில் சீனாவின் முடிவானது, இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதைப் பொறுத்தே அமையும். வெளிப்படையாக எங்களுக்கு, தேசிய மற்றும் சாதாரணமானவற்றை விட அதிகமானவை ஆபத்தில் உள்ளன.

உடைந்த அரசியல் சமூகம் பிளவுபட்ட வாக்காளர்கள் – இன்று, இலங்கையின் அரசியல் உள்ளுறுப்பு ஒற்றுமையின்மை, மற்றும் பல விரோதமான முரண்பாடுகளால் வகைப்படுத்தப்படுகிறது.இந்த நிலை அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் பொதுவானது. விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்சவுக்கும் இடையிலான இடைவெளி விரிவடைவதால், பொதுஜனபெரமுன ஒருமுறை உடைந்து, மீண்டும் முறிவடையும். 2015 அல்லது 2019 இல் இருந்ததைப் போலல்லாமல், வெளியில் எதிர்க்கட்சியிடம் அரசாங்கத்திற்கு எதிரான ஒற்றுமை இல்லை.பொதுஜன பெரமுன மற்றும் ஜே. வி . பி / என் பி பி ஆகியவை விக்கிரமசிங்க நிர்வாகத்திற்கும் ராஜபக்சக்களுக்கும் எதிரெதிராக உள்ளன.

இந்தப் போக்குகள் தொடர்ந்தால், வரவிருக்கும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள், தெளிவான வெற்றியாளர்களையோ அல்லது அறுதிப் பெரும்பான்மையையோ உருவாக்க முடியாத கட்டமைப்பு ரீதியாக நான்கு முனை மோதல்களாக மாறும்.

ஆளும் மற்றும் ஆளப்படுபவர்கள், அரசியல் வர்க்கம் மற்றும் வாக்காளர்களுக்கு இடையேயான இடைவெளி எப்போதும் அதிகமாக இருந்ததில்லை. கல் உப் சுட்டிக்காட்டியபடி, 2021 வரை, இலங்கையர்களின் தேசிய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பெரும்பான்மைக்குக் கீழே சென்றதில்லை. ஆனால் 2022 ஆம் ஆண்டில், அது வெறும் 37% ஆக இருந்தது. )

இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் பொலிசியின் சமீபத்திய (ஜூன்) கருத்துக் கணக்கெடுப்பின்படி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி / என்.பி.பிக்கான தேர்தல் ஆதரவு குறைந்துள்ளது. இருவரும் இப்போது தலா 23% என்ற அளவில் சம நிலையில் உள்ளனர்.ஐ.தே.க .மற்றும் பொதுஜன பெரமுன ஆதரவும் தலா 9% என்ற அளவில் உள்ளது.முன்னொரு போதுமில்லாத வளர்ச்சியாக 'மற்றவர்கள்' என்ற உருவமற்ற வகையை ஆதரிக்கும் வாக்காளர்கள் 28% ஆக அதிகரித்துள்ளது.

வெற்றிகரமான ஜனநாயக நாடுகளில், இத்தகைய பரவலான பொதுவான ஏமாற்றம் தலைமைத்துவ புதுப்பித்தல் மூலம் தீர்க்கப்படுகிறது.கட்சிகள் செல்வாக்கற்ற தலைவர்களை மிகவும் பிரபலமான (அல்லது குறைந்தபட்சம் செல்வாக்கற்ற) தலைவர்களுடன் மாற்றுகின்றன.ஆனால் அத்தகைய புதுப்பித்தல் உள்கட்சி ஜனநாயகத்தின் இருப்பைச் சார்ந்தது. இலங்கை ஒரு ஜனநாயக கலாசாரம் இல்லாமல் இயங்கும் ஜனநாயக நாடாகும். எமது அரசியல் கட்சிகள் எதேச்சதிகாரத்தின் கோட்டைகளாக இருக்கின்றன, அங்கு தலைவரின் (மற்றும் அவரது உறவினர்கள்) அதிகாரம் உள்ளது. இலங்கைக் கட்சித் தலைவர்கள் தங்கள் ஆளுகைக்குள் குட்டி





கொடுங்கோலர்களாக இருப்பதால், அவர்களும் 'சர்வாதிகாரப் பொறி' க்கு ஆளாக நேரிடும். ஏனெனில் அவர்கள் பக்கச்சார்பான குரல்களையும் மகிழ்ச் சிகரமான கருத்துக்களையும் மட்டுமே கேட்கிறார்கள்.அவர்களின் சுயநல ஆத ரவாளர்கள் கடைசியாக அவர்களிடம் சொல்வது என்னவென்றால், அவர்கள் உலகளவில் பிரபலமானவர்கள் அல்ல.

2019 இல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஆதரித்த 6.9 மில்லியன் வாக்காளர்களில் பெரும்பாலோர் அந் தத் தொகுதிக்குள் தொடர்கின்றனர் என்ற அடிப்படையில் ராஜபக்சக்களும் ரணில் விக்கிரமசிங்கவும் செயற்படு வதாகத் தெரிகிறது. கருத்துக் கணிப்பு நம்பகத்தன்மை அற்றதாக இருக்கும் அதே வேளையில், பொதுஜன பெரமுன வாக்காளர்களில் பெரும்பாலோர் பொது ஜன பெரமுனவுடன் இல்லை என்று கருதுவது நியாயமானது.

அதாவது 2024ல் ராஜபக்சக்களுக்கு அதிகாரத்திற்கான பாதை இல்லை. 2020 இல் பொதுஜன பெரமுன பாரா ளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் வெற்றி பெற்றது போல், 2024 ஜனா திபதி தேர்தலில் பொதுஜன பெரமுன வாக்குகளால் வெற்றி பெறுவதே அவ ரது உத்தியாக இருந்தால் ரணில் விக்ரம சிங்கவிற்கு இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ரணில் சார்பு மற்றும் ராஜபக்ச சார்பு வழிகளில் ஒரு புதிய பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகத் தெரிகிறது. இது குடும்பத்தின் அரசியல் வாய்ப்புகளை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும். ஆனால் மகிந்த ராஜபக்ச உயிருடன் இருக்கும் வரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ரணில் சார்பு அணியா னது ராஜபக்சவின் காலடியில் இருந்து கம்பளத்தை இழுக்க முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தளர்ச்சியானது பசில்/நாமல் தளத்தை விட மகிந்த அடிப்படையாகவே இருக்கும் – நிமல் லான்சா தளமாக இருக்கட்டும். மேலும் பொதுஜன பெர முனவின் சில துர்நாற்றங்களுடன் கூட் டணி அமைத்து (முட்டை இறக்குமதி சர்ச்சையின் போது, லான்சா ஒரு உயர் அரசாங்க அதிகாரியை 'அப்படிப்பட்ட அதிகாரிகளின் வீடுகளுக்கு ஆட் களை அனுப்பி அவர்களை தாக்குவதே சரியான செயல்' என்று கூறினார்.) விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தி யின் அடிப்படை மற்றும் அந்த அந்நிய இரண்டும் கெட்டான் நிலையிலுள்ள வாக்காளர்களிடம் முறையிடுவதற்கான எந்த வாய்ப்புகளையும் தடுக்கும்.

ஏமாற்றம் என்பது ஒரு தேசத்தை எதிர் பாராத இணைவழிகள் மற்றும் அறிய முடியாத பாதைகள் வழியாக வழிநடத் தும் ஒரு தீவிரமான விடயமாக இருக் கலாம்.2023 ஜனவரியில் ஜனநாயக ஆட்சி மீதான சி.பி.ஏ.யின் நம்பிக்கைக் கணிப்பீட்டின் பிரகாரம் பதிலளித்தவர்க ளில் 92.2%மானோர் பெரும்பாலான அர சாங்க எம்.பி.க்கள் நெருக்கடிக்கு முன் வாழ்ந்ததைப் போலவே அவர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறையை வாழ்கிறார்கள் என்று ஒப்புக் கொண்டனர்.பதிலளித்தவர்களில் 88.4% மானோர் பெரும்பாலான எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நெருக்க டிக்கு முன்பு வாழ்ந்ததைப் போலவே அவர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறையை வாழ்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அனைத்து 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முழு அரசியல் வர்க்கத்தின் மீதும் வெறுப்பு, கோபம் மற்றும் அவமதிப்பு உணர்வை தூண்டும் முக் கிய காரணிகளில் ஒன்றாக இந்தக் கருத்து இருக்க லாம்.இந்த ஏமாற்றத்தையே தேசிய நெருக்கடிக்கு சமய தீர்வை முன்னிறுத்துபவர்கள் – மிகிந்தலை விகாரையின் பிரதமகுரு போன்றவர்கள் – சுரண்ட முயற்சிக்கின்றனர். தேசிய நெருக்கடிக்கு இரா ணுவத் தீர்வைக் கனவு காண்பவர்களும், 'தோல் வியடைந்த மற்றும் செல்வாக்கற்ற ஜனநாயக ஆட்சியிலிருந்து' மக்கள்-தேசபக்தி விலகலைக் கனவு காண்பவர்களும் இந்த ஏமாற்றத்தைத்தான் என்றாவது ஒரு நாள் பரிந்துரைக்கலாம்.

> **பொதுவாக உலகின் பெரும்பாலான நாடுகளைப் போன்றே இலங்கை, தலிபான் அரசாங்கத்தை அங்கீகரிக்கவில்லை. தலிபான்கள் தங்கள் பிராந்தி யங்களில் உள்ள தூதரகம் / தூதரகத்தை கையகப்படுத்த அனுமதித்த ஒரு சில நாடுகளில் சீனாவும் உள்ளது. தூதுவர் கொலம்பகே கொழும்பின் ஆணையை மீறச் செய்தது மற்றும் தலிபான் பிரதிநிதிகளை நடத்துவது எது? அவர் அறியாதவராக இருந்தாரா அல்லது கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள அவரது உண்மை யான எஜமானர்களுக்காக செயற்படுகிறாரா?**





**கறுப்பு ஜூலை மற்றும் தவறான தீர்வுகளின் நீடித்த பிரச்சனை:**

சிறுதொகையினரின் வேலையாக கொலை, எரித்தல் மற்றும் சூறையாடுதல் ஆகிய களியாட்டம் இருந்தது. ஆனால், 'பிரச்சனையின்' தன்மை பற்றிய அவர்களின் கருத்தும், சிறந்த 'தீர்வு' பற்றிய அவர்களின் கருத்தும்,பிறகும் மேலாதிக்கமாகவே இருந்தது.

சிங்கள-தமிழ் பிளவைக் குணப்படுத்தும் நோக்கில் மனந்திரும்புதல் மற்றும் நல்லிணக்கச் செயல்களுக்குப் பதிலாக, அரசாங்கமும் சமூகமும் தமிழர்களுக்கு எதிராக இன்னும் கடினமான போக்கைக் கடைப்பிடித்தன. 6 வது திருத்தத்தில் தொடங்கி, ஒவ்வொரு தீவிர நடவடிக்கையும் கலவரக்காரர்களின் செய்தியை வலுப்படுத்தியது, மிதவாத தமிழர்கள் மற்றும் சிங்களவர்களை ஓரங்கட்டியது, மேலும் புலிகள் மற்றும் பெருகிய முறையில் இனவாத ஜே.வி.பி.யை பலப்படுத்தியது. போராடிக் கொண்டிருந்த கிளர்ச்சியை முழு அளவிலான போராக மாற்றி புலிகளின் ஆதிக்கத்திற்கு வழி வகுத்தது வெறும் கறுப்பு ஜூலை மட்டுமல்ல.

அரசியல் உணர்வு மற்றும் புத்திசாலித்தனம், சாதாரண இரக்கம் மற்றும் கண்ணியம் ஆகியவை இல்லாததால் அது அதன் பின்விளைவாக இருந்தது. கொஞ்சம் நிதானமும் இருந்தாலே நெருக்கடியை சரிசெய்வதில் வெகு தூரம் சென்றிருக்கும். அதற்குப் பதிலாக அரசாங்கம் வெளிச் செயற்பாட்டாளர்களை குற்றம் சாட்டியது, அரசியல் கட்சிகளைத் தடைசெய்தது, தமிழர்களின் அதிருப்தியை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதில் சகிப்புத்தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடித்தது.

மிதவாத தமிழர் விடுதலை கூட்டணி வெற்றிகரமான முறையில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது. முதலில் ஆயுதமேந்திய எதிர்ப்பிற்கும் பின்னர் புலிகளுக்கும் பாதை தெளிவாக இருந்தது.

2011 எகிப்தியப் புரட்சி குறித்து யாஸ்மின் எல் ரஷிடி கூறுகையில், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் [ஆர்ப்பாட்டக்காரர்கள்] ஒரு சர்வாதிகாரியின் வீழ்ச்சிக்காக அங்கு இல்லை; அடிப்படைத் தேவைகள் இல்லாததால் அவர்கள் அங்கு இருந்தனர் [இருட்டில் சிரிப்பு - எகிப்து மாற்றத்தின் இசைக்கு]. அதேபோன்று, இலங்கையின் அரகலய பற்றாக்குறைகளால் உந்தப்பட்டது.

அது சாதாரண வாழ்க்கையை சாத்தியமற்றதாக்கியது.எதிர்கட்சிகள் நம்புவது போல், நூறாயிரக்கணக்கான மக்கள் அமைப்பு ரீதியான மாற்றத்திற்காக வெளியே வரவில்லை. ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்சவும் நம்புவது போல ஜனநாயக அமைப்பைத் தூக்கி எறியும் முயற்சியும் அரகலய அல்ல.

பிரச்சனைகளைப் பற்றிய தவறான புரிதல் தவறான தீர்வுகளுக்கு வழிவகுக்கிறது. கறுப்பு ஜூலையைப் போலவே அரகலயவும் சிலரது நம்பிக்கை மற்றும் சிலரது அச்சத்திற்கு மாறாக, பொது ஆர்ப்பாட்டங்கள் அரகலயா 2.01 இல் விளையாது. மீண்டும் மீண்டும் ஒரு அரசியல்-பொருளாதார முறிவு தேவைப்படும், அது வாழ்க்கையை நரகமாக மாற்றும் வகை.

இதைப் புரிந்து கொள்ள இயலாமை, எதிர்க்கட்சிகளை கூச்சலிடவும், அரசாங்கத்தை முட்டுக்கட்டையாகவும் மாற்றியுள்ளது.விருது பெற்ற ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவின் இலக்கு மற்றும் மிருகத்தனமான கைது, பிந்தைய தவறுகளை விளக்குகிறது.

விடயம் உடுவரகெதரவின் தொழில் அல்லது அவரது தொழில் நெறிமுறைகள் பற்றியது அல்ல. அமைதியான கருத்து வேறுபாட்டிற்கான அரசியலமைப்பு உரிமையைப் பயன்படுத்தும் எந்தவொரு இலங்கையரும், அவருடைய தொழில் எதுவாக இருந்தாலும், அவ்வாறு நடத்தப்படக்கூடாது.ஜனநாயக எதிர்ப்பின் இத்தகைய சகிப்புத்தன்மை அதிக தேர்தல் ஏற்புக்கான பாதையும் அல்ல. இது வெறுமனே வாக்காளர்களின் அதிருப்தியை அதிகரிக்கும் மற்றும் அந்த 'மேலே உள்ள எதுவும் இல்லை' என்ற நெடுவரிசையை உயர்த்தும்.

நாகொட வைத்தியசாலையில் இதயநோயாளியான தனது தந்தைக்கு மருத்துவ அலட்சியம் ஏற்பட்டிருக்கலாம் என ஆசிரியை ஒருவர் முகநூல் பதிவில் எழுதிய போது, களுத்துறை பொலிசார் அவரது வீட்டிற்கு வந்து கேள்விகளால் துன்புறுத்தியுள்ளனர். ஒரு சத்திர சிகிச்சை நிபுணர் செயற்பாட்டில் உள்ள சிறுநீரகத்தை செயலிழந்த சிறுநீரகத்துடன் அகற்றியதன் விளைவாக ஒரு சிறு குழந்தை இறந்த சம்பவம் பற்றி, பொலிசின் பதில் சிறந்ததாக இல்லை.

ஒரு பாடகர் தேசிய கீதத்தில் ஒரு வார்த்தையை தவறாக உச்சரித்தது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.ஆனால், ராஜாங்கனை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெறாமல், வில்பத்து வலயத்தில் ஆரலங்கா இசை நிகழ்ச்சியை நடத்துவது பற்றி எந்த விசாரணையும் கூட யோசிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

2023 ஆம் ஆண்டானது இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட 200 வது ஆண்டு



நிறைவைக் குறிக்கிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அடிப்படை குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்கு எட்டவில்லை.

எம்.எம்.டி.ஏ.உயிரற்ற நிலைக்கு மெதுவாக மூச்சுத் திணறுகிறது. பணவீக்க வீதம் குறைந்தாலும், வாழ்க்கைச் செலவு அதிகமாகவே உள்ளது. அரசு சீருடை அணிந்த குண்டர் சட்டத்திலும், எதிர்க்கட்சிகள் வெறித்தனமான கூச்சல்களிலும் ஈடுபடுகின்றன. இந்த இரட்டை தோல்விகளால் உருவாக்கப்பட்ட வெற்றிடத்தில், மக்கள் ஏமாற்றம், தீவிரவாதம் மற்றும் சீர்குலைவு வளர்ந்து வருகிறது.



கனுஷியா புஷ்பகுமார்

# இராவணன் தமிழ் மன்னரா? சிங்கள மன்னரா?

இலங்கை மன்னன் இராவணன் இயக்கர் குலத்தை சேர்ந்த சிங்களவர். இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக் கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள். இந்த ஒருகருத்து சிலரை புன்னகைக்க வைத்தது. இன்னும் சிலரை சிந்திக்க வைத்தது.

'இலங்கையின் பூர்வீகம் தமிழ் என்பது பொய் என எடுத்துரைக்கும் வகையில் வரலாற்று புராதன சின்னங்கள் காணப்படுகின்ற போது இராணவனை தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும்' – இது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்து.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை [11/08] இடம்பெற்ற இலங்கை மன்னன் இராணவன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர,

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராணவன் இந்தியாவுக்கு விமானத்தில் சென்று சீதையை கடத்தி வந்ததாக குறிப்பிட்டால், பெரும்பாலானோர் நம்புவதில்லை. எமது வரலாற்றில் இன்றும் உயிர் துடிப்பாக உள்ள விடயங்கள் வியப்புக்குரியாக உள்ளது.

மன்னராட்சி காலத்தில் சிங்கள பொறியியலாளர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்று சின்னங்கள் மற்றும் தொல்பொருள்



சின்னங்கள் எடுத்துக்காட்டுகின்றன.இவ்வாறான நிலையில் இராவணன் விமானத்தில் சென்று சீதையை கொண்டு வந்ததாக குறிப்பிடுவதை மறுக்க முடியாது என்று குறிப்பிடுகிறேன்.

இராவணன் இயக்கர் குலத்தை சேர்ந்த சிங்களவர்.இராணவன் தமிழர் என்று குறிப்பிட்டுக் கொண்டு இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள்.

தமிழ் பூர்வீகம் என்பது பொய் என்பதை எடுத்துரைக்கும் வகையில் இலங்கையில் சின்னங்கள் காணப்படுகின்ற போது இராணவனை



தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும்.மகாவம்சத்தில் இராணவன் சிறந்த தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இரா வணனின் படை கொடியில் சிங்கம் சின்னம் உள்ளது.

இந்தியா இராவணன் மீது இன்றும் அச் சம் கொண்டுள்ளதால் தான் வருடாந்தம் அவரது உருவத்தை எரிக்கிறார்கள். ஆகவே, இராணவன் சிங்கள தலைவர்' எனத் தெரிவித்தார்.

உண்மையிலேயே, இலங்கை மன்ன னான இராவணன் பற்றிய நோக்குகள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேறு பட்டுக் காணப்படுகிறன.

ஆரிய ஆதிக்கத்தின் விளைவால், கம்பன் கற்பனைப் பாத்திரங்களான இராமனைத் தெய்வம் என்றும் தமிழ் மன்னனான இராவணனை அரக்கன் என்றும் சித்திரித்து இராமாயணத்தைப் படைத்தார்.

இதனால் இராமனே நமக்கு தெய்வமா னார். தமிழ் மன்னனான இராவணனை அரக்கனாக நாம் பார்க்கிறோம்.எவ்வாறா யினும், இது தொடர்பில் நாம் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துக்களை கேட்ட றிந்தோம்.

இது தொடர்பில் அரசியல் ஆய்வாளர், சட்டத்தரணி ஜோதிலிங்கத்திடம் வின விய போது, அவர் மாறுபட்ட கருத்தை முன்வைத்தார்.

அவர் கூறியதாவது,

'இராவணன்' சிங்கள மன்னன் என்பதையும் தமிழ் மன்னன் அல்ல என்பதனையும் நிரூபிக்க வரலாற்று ரீதி யாக நிரூபிக்க சான்றுகள் எதுவும் இது வரையில் இல்லை.

இராவணன் என்பவர் ஒரு தமிழ் மன் னன் என்பது கூட மத ரீதியான ஒரு கருத்து மாத்திரமே. இதற்கு வரலாற்று ஆதாரங்கள் எதுவும் கிடையாது, எது சரி? எது பிழை? என்பதை எங்களால் நிரூபிக்க முடியாது.ஆய்வு ரீதியில் உள்ளவர்கள் எவராலும் இது தொடர் புபட்ட விவாதங்களை முன்வைக்க

**"ஈழத்து நூல்களில் இராவணன் தமிழ் மன்னராகவே சித்தரிக்கப்பட்டுள்ளான். உலகம் முழுவதும் இராவணன் ஒரு தமிழ் மன்னன் என்ற அடையாளம் நிலவும் சூழலில், கடும் பௌத்த தேசிய வாதத்தை பேசக்கூடிய சரத் வீரசேகர நாட்டில் மீண்டும் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடிய வகையில் பல்வேறு கருத்துகளை கூறிவருகிறார்."**

முடியாது. ஒரு மூலத்திலிருந்து தான் தமிழ் மற்றும் சிங்களம் என்பன ஆரம்பித் தன என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இதனை கள ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். திராவிட மொழிக்கும், சிங்கள மொழிக்கும் பல தொடர்புகள் உண்டு. இது கிட்டத் தட்ட ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல ஆய்வுகளில், உடல் வடிவங்கள் ஒத்த அமைப்பைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றன.இவ்வாறு, தமிழ் மற்றும் சிங்களம் என்பன ஒரே மூலத்திலிருந்து வந்தவை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்ட கருத்து ஒத்துப் போகிறது.

இதேவேளை, பௌத்தம் இந்து மதத்தின் இணை மதம் என இந்தியாவில் இன்னும் கருத்துக்கள் பல நிலவி வருகின்றன.இந்நிலையில், பௌத்த மதம் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டமையால் ஒரே மூலம் என்பதனால் பாராளுமன்றில் கூறப்பட்ட கருத்து கிட்ட தட்ட ஒத்துப்போகிறது.

பௌத்தம் வட இந்தியாவிலிருந்து ஆரம்பிக்கப் பட்டது.ஆரம்பகாலத்தில் தமிழ் பௌத்தம் என்பது 'மஹாஜன பௌத்தம்' என பார்க்கப்பட்டது.

இராவணனின் கதைகள் பூர்வீகமானவை, நம்பிக் கையின் புராணக்கதைகள் அதற்கான சான்றுகள் எதுவும் இல்லை.



விஜயனின் வருகை கூட ஒரு புராணக்கதை யாகவே பார்க்கப்படுகிறது. ஆரம்ப வரலாற்றில் விஜயன் தன்னுடைய 700 தோழர்களுடன் இலங் கைக்கு வந்ததாக கூறும் மகாவம்சம் அவர் இலங் கையில் இருந்த சிங்களப் பெண்ணை திருமணம் செய்ததாக கூறுகிறது.

அவ்வாறெனில் இராவணன் சிங்கள மன்னனாக இருக்கலாம். எவ்வாறாயினும் இலங்கை மன்னன் எனக்கூறப்படும் இராவணன் தமிழ் மன்னனா? அல்லது சிங்கள மன்னனா? என்பதனை நிரூபிக்க எந்த விதமான வரகலாற்று ஆதாரங்களும் இல்லை என்பதே என்னுடைய கருத்து – என தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பில் கொழும்பு பல்கலைக்க ழகத்தின் பொருளியல் துறை பேராசிரியரான முத்து கிருஷ்ணா சர்வானந்தனிடம் வினவிய போது, பெயருக்காகவும், புகழுக்காகவுமே இவ்வாறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.பாராளு மன்றத்தில் பதிவு செய்யக்கூடிய கருத்துக்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய முடியாது.

ஆரம்பகாலத்தில் இராவணன் புஷ்பக விமானத் தில் இந்தியாவிலிருந்து சீதையை இலங்கைக்கு அழைத்து வந்ததாக புராணக்கதைகள் தெரிவிக் கின்றன. எனினும், அவற்றுக்கான சான்றுகள்

> இராவணன் என்பவர் ஒரு தமிழ் மன்னன் என்பது கூட மத ரீதியான ஒரு கருத்து மாத்திரமே. இதற்கு வரலாற்று ஆதாரங்கள் எதுவும் கிடையாது, எது சரி? எது பிழை? என்பதை எங்களால் நிரூபிக்க முடியாது. ஆய்வு ரீதியில் உள்ளவர்கள் எவராலும் இது தொடர்புபட்ட விவாதங்களை முன்வைக்க முடியாது. ஒரு மூலத்தி லிருந்து தான் தமிழ் மற்றும் சிங்களம் என்பன ஆரம்பித்தன என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை கள ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். திராவிட மொழிக்கும், சிங்கள மொழிக்கும் பல தொடர்புகள் உண்டு. இது கிட்டத் தட்ட ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எதுவும் இல்லை. சரத் வீரசேகர பாராளு மன்றத்தில் தெரிவித்த கருத்து உண் மையெனில், இலங்கை ஏன் இன்னும் தொழில்நுட்ப ரீதியாக பின்தங்கியுள்ளது.

இராவணனின் புஷ்பக விமானம் அவ் வளவு தொழில்நுட்பங்களைக் கொண்டு அமைக்கப்பட்டதெனின், நம் நாட்டில் தொழில்நுட்பத்துறையானது பாரிய வளர்ச்சியைக் கண்டிருக்க வேண்டும்.


நாட்டு மக்கள் பிச்சை எடுக்க வேண் டிய நிலை ஏற்பட்டிருக்காது. பிரதான ஊடகங்களின் முதல் பக்கங்களில் இந்த செய்தி வந்திருந்ததை பார்த்தேன். இவ் வாறு தங்களுடைய பெயரையும் புகழை யும் ஈட்டுக்கொள்வதற்கே இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து மக்களை திசை திருப்பி வருகின்றன.

நாம் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும், இவ்வாறான கருத்துக்களை காதில் வாங்கிக்கொள்ளாது புறக்கணிப் பதே சிறந்தது – என அவர் தெரிவித்தார்.

இராவணன் தமிழ் மன்னரா சிங்கள மன்னரா என்ற கோணத்தில் கடந்த சில நாட்களாக இலங்கையில் தமிழ், சிங்கள தரப்புகள் கருத்துகளை முன்வைத்து வருகின்றன.

என்றாலும், ஈழத் தமிழர்களின் வர லாற்றிலும் தென்னிந்திய வரலாற்று நூல்களிலும் இராவணன் ஒரு தமிழ் மன்னராகவே அடையாளப்படுத்தப்பட் டுள்ளான்.

ஈழத்து நூல்களில் இராவணன் தமிழ் மன்னராகவே சித்தரிக்கப்பட்டுள்ளான். உலகம் முழுவதும் இராவணன் ஒரு தமிழ் மன்னன் என்ற அடையாளம் நிலவும் சூழலில், கடும் பௌத்த தேசிய வாதத்தை பேசக்கூடிய சரத் வீரசேகர நாட்டில் மீண்டும் இன முரண்பாடு களை தோற்றுவிக்கக்கூடிய வகையில் பல்வேறு கருத்துகளை கூறிவருகிறார். தமிழ் தலைவர்களும் வரலாற்று ஆய் வாளர்களும் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளனர்.





# தன்னம்பிக்கை

வாழ்க்கை எனக்கு
வண்ணமலர் சோலையில்லை!
நான்
செல்கின்ற பாதை
கற்களும் முட்களும்
நிறைந்த
ஒற்றைவழிப்பாதை!

சென்றிடும் பாதையில்
கண்டதெல்லாம்.
தோல்விகளும்
துரோகங்களுமே!


ஆனாலும்,
அத்தனை துயரத்திலும்
அழுது,
அடம்பிடித்து எழுந்து .
அன்னையாய்
தோழியாய்
அரவணைத்து,
அகமகிழ்ந்து
புதையுண்டு போகாமல்
தலைநிமிர்ந்து
நான் வாழ
கற்றுத்தந்தது
தன்னம்பிக்கை!!

எத்தனை ஆயிரம்
துயர்வரினும்..
சூரியனைக்கண்ட
பனிபோல
ஓடிவிடும்
தன்னம்பிக்கை
துணையிருந்தால்!!

தன்னம்பிக்கையோடு
நடவுங்கள்.
நாளைய விடியல்
நம்கையில்.

கலை

# ஈழப் போர்க்கால இசையின் பிதாமகர் கண்ணன்




# துண்டுமழையிலும் தேனிசை பொழிந்த இசைவாணர்

**ஐங்கரன்**

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில்ஈழ விடுதலைப் போராட்டம் தேசிய மயப்படுத்தப்பட்டு எழுச்சியடைந்த போது ஈழத்து இசைப்பாடல்கள் விடுதலைப் பாடல்களாக, போரிலிருந்து பிறந்த பாடல்களாக பரிணமித்தன. இந்தப் பரிமாணத்திலும் இசைவாணர் கண்ணனின் பங்களிப்பு மிக்க கனதியானதாகும்.

ஈழத்தில் கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நடிகமணி, வி.வி. வைரமுத்து, போன்ற ஒரு சில கலைஞர்களே. அந்த வரிசையில் இசையையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துவருபவர் கலைஞர் கண்ணன் அவர்கள்.

கால மாற்றங்களினால் அள்ளுண்டு அழிந்து போகாமல் அவற்றை அனுசரித்து மக்களின் தேவைகளை, போராளிகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவற்றை எல்லாம் உள்வாங்கி, நல்லதோர் இசைஅமைப்பாளராக மேலெழுகின்றார் இசைவாணர் கண்ணன்.

அவர்களுடைய ஆளுமையின் இன்னுமொரு பரிமாணமே,போராட்டச் சூழலிற் குண்டுகள் பொழிய மானிடம் மரணிக்க, மக்களின் கூக்குரல்களுக்கு மத்தியில் குருதிதோய்ந்த மண்ணில் பல அற்புதமான பாடல்களை உருவாக்கியுள்ளார். எந்த வித தொழில் நுட்ப வசதியும் இன்றி மிகக்குறைந்த வாத்தியங்களையும், மிகக் குறைந்த கலைஞர்களையும் வைத்துக்கொண்டு தமிழ் மண்ணின் மணம் கமழ, மக்கள் மனதைப் பிசைந்து, இசைந்து உணர்வையும், புத்தியையும் உயிர்ப்பிக்கும் இசையைக் கண்ணன் அவர்கள் போர்க்கால இசையாக தமிழ் மண்ணுக்கு தந்துள்ளார்.

## வட மாகாண சபை கீதம் :

வடமாகாணசபைக்கான கீதம் அப்போதைய முதலமைச்சர் சி. விக்னேஷ்வரனால் அக்டோபர் 2018இல் வெளியிட்டு வைக்கப்பட்டது. வடமாகாணத்தின் பெருமை, தகமை, அறிவு, எழில், பலம் போற்றும் விதமாக அமையப் பெற்ற இக் கீதத்தை முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளரும் கவிஞருமாகிய கலாபூஷணம் கீழ்க்கரவை கி. குலசேகரம் இயற்றியுள்ளார்.


பாடலுக்கான இசையினை ஈழத்தின் முன்னணி இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் அவர்களே வழங்கியுள்ளார். பல கலைஞர்களின் உழைப்பில் உருவான கீதத்தை முதலமைச்சர் வாழ்த்தி கௌரவப்படுத்தியுள்ளார்.

## நாச்சிமார் கோவிலடி மைந்தன்:

இசைவாணர் திரு கண்ணன் அவர்கள் ஈழத்தில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் என்னும் இடத்தில் 1943.03.29 ல் பிறந்தவர். இவர் தனது ஆரம்ப இசைப்பயிற்சியைப் புலவர் சண்முகரட்ணம் அவர்களிடமும் நாதஸ்வர வித்துவான் கோவிந்த பிள்ளை அவர்களிடமும் பெற்றார். பின்னர் சிதம்பரம் கிருஸ்ணமூர்த்தி அவர்களிடமும் வேலணை சங்கீத பூஷணம் இராஜலிங்கம் அவர்களிடமும் வாய்ப்பாட்டினை முறையாகக் கற்றுத் தேர்ந்தார்.

இளம் வயதில் தனது பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு முழு நேரமும் தன்னை இசையில் ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினார். இசைக்குழு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் ஆழப்பதிந்து விட்டது. அவருடைய எண்ணத்திற்கமையச் சூழலும் உருவாகியது. அறுபதுகளிற் தென்னிந்தியக் கலைஞர்களின் வருகை அரசாங்கத்தால் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் தென்னிந்தியக் கலைஞர்கள் குழுவாகச் சென்று இலங்கையில் முகாமிட்டு நிகழ்ச்சிகளை நடத்த முடியாத சூழ்நிலை உருவாகியது. இச்சூழல் கண்ணன் அவர்களுக்கு மிகச் சாதகமாக அமையவே அவரும் இசைக்குழுவை உருவாக்கி தீவிரமாக முயற்சி செய்தார்.

பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஈழத்து மெல்லிசை அமைப்பாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. கொழும்பில் இருந்தபடியே இசைக்குழுவையும் நடாத்தினார். நேசம் என்பவரும் இணைந்து கொண்டதால் அவரது இசைக்குழு கண்ணன் 'நேசம்இசைக்குழு' என்ற பெயரைப் பெற்றது.





ஈழத்து மெல்லிசைப்பாடல்கள், பொப் இசை, றொக் இசை, ஆங்கில இசை, தென்னிந்தியத் திரைஇசை, பக்திப் பாடல்கள் போன்றவை இவரது இசைக் குழுவால் இசைக்கப்பட்டன.

ஆக்கிரமிப்பு இராணுவத்தால் தமிழ் மண் அவதிப்பட்ட காலங்களிலும், ஈழத்தின் போர் மேகங்களில் இருந்தும் தேனிசை மழையாய் பொழிந்தவர் இசைவாணர் கண்ணன் ஆவார்.

## மண் சுமந்த மேனியர் :

1985ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலாசாரக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகத்திற்கும், 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்ற கவிதா நிகழ்விற்கும் கண்ணனே இசை அமைத்தார். இவ்விரு நிகழ்வுகளும் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய சாதனையைப் புரிந்தவை. இதற்குக் கண்ணனுடைய இசையும் மிகமுக்கிய காரணம் ஆகும்.

யாழ்ப்பாணத்தை விழித்தெழச் செய்த 'மண் சுமந்த மேனியர்' குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்டு சிதம்பரநாதன் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டது. 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' கவிதா நிகழ்வில் இடம் பெற்ற பாடல்கள் கவிஞர் சேரனின் வரிகளாகும்.

1983 இல் இடம்பெற்ற கொடூரமான இனக்கலவரத்தின் அழிவுகள், இழப்புகள், துயரங்கள் ஆகியவற்றையும் சித்தரிப்பனவாக இந்த இரு நிகழ்வுகளும் யாழ்ப்பாண மக்களின் வாழ்நிலைப் போராட்டங்களையும், அவற்றின் வலிகளையும் சுமந்து இருந்தன.

இந்நிகழ்வுகளுக்கு இசை அமைப்பதற்குக் கண்ணன் அவர்கள் உபயோகப்படுத்திய இசைக்கருவிகள் ஒரு ஹார்மோனியம், ஒரு வயலின், ஒரு தபேலா ஆகியவை மட்டுமே. 1985 ற்கு முன்னர் அமைத்த இசைகளை விட இவை சற்று வித்தியாசமாகவே அமைந்து இருந்தன.

## எங்கள் மண்ணும் இந்த நாட்களும்:

தமிழிசையை அடிப்படையாகக் கொண்டு நாட்டாரியற் கூறுகளையும் அவற்றுடன் இணைத்து அவசியம் ஏற்படின் மேலைத் தேசஇசை உத்திகளையும் கையாண்டு யாழ்ப்பாணக் கலாசாரப் பின்னணியையும் இணைத்துத் தனது கற்பனைகளைப் புகுத்தி மண்வாசனையுடன் அவரது தனித்துவமான ஆளுமையில் எங்கள் மண்ணும் இந்த நாட்களும் பாடல்கள் உயிர்பெற்று எழுந்தன.

யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் இவ்விரு நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது போல இக்காலத்தில் யாழ்ப்பாணத்துப் புல்லும் விடுதலைக்கவி பாடியது. அவற்றைப் பாடும் போது பாடகர்களும், நடிகர்களும் வெளிப்படுத்திய உணர்வலைகள் யாழ்ப்பாணத்தை அதிரச் செய்தன.

## விடுதலைக் குரல்கள் :

இதன்பின்னர் 1986 ஆம் ஆண்டு தமிழ் ஈழ மாணவர் சார்பாகக் குருபரனால் வெளியிடப்பட்ட விடுதலைக் குரல்கள் என்ற ஒலிப்பேழைக்கான பாடல்களை ஈழத்துக் கவிஞர்களான வ.ஐ.சஜெயபாலன், உ.சேரன் ஆகிய இருவரும் எழுதியிருந்தனர். இவற்றிற்கான இசையை இசைவாணர் கண்ணன் அவர்கள் அமைத்திருந்தார். அதில் இருந்து வ.ஐ.ச.ஜெயபாலனின் ஒரு பாடல்.

*என் மனத் துன்பம்*
*தாயின் பாடலில்*
*கண் வளராயோ செல்வா*
*தந்தையர்கள் தமிழ்*
*ஈழமண் மீட்டிட.*

எனும் பாடல் ஈழத்தின் எட்டுத்திசை எங்கும் ஒலித்தது.

இதே ஆண்டில் [1986 இல்] சி.மௌனகுருவின் 'சக்தி பிறக்குது' என்ற நாடகத்திற்கும் கண்ணன் இசையமைத்து இருந்தார். இந்த நாடகம் பெண்களின் பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. பரதமும் நாட்டுக்கூத்தும் இணைந்ததொரு நாட்டிய நாடகம் இது. இதற்கான நெறியாள்கையும் நாட்டுக்கூத்து அமைப்பும் சி.மௌனகுருவினுடையது. 'சக்தி பிறக்குது' நாடகத்தின் நடன அமைப்பு செல்வி சாந்தா பொன்னுத்துரை அவர்களுடையது.

1987 இல் மீண்டும் சிதம்பரநாதனின் நெறியாள்கையில் கண்ணனின் இசை அமைப்பில் ஈழத்து மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் 'புதியதொரு வீடு' மேடையேறியது. இது யாழ்ப்பாணத்து மீனவ மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்தரிக்கின்றது

## வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்:

*வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம் -கடல்*
*வீசுகின்ற காற்றில் உப்பின் ஈரம்*
*தள்ளிவலை ஏற்றிவள்ளம் போகும் - மீன்*
*அள்ளி வர நீண்ட நேரம் ஆகும்..*

என்ற பாடலை அறியாத தமிழர் யாரும் இருக்க முடியாது. கடலின் அலையோடு இசையை லாவகமாக மீட்டிய இசைவாணர் கண்ணன் அவர்களின் தாயகப்பற்றினை வெளிக்காட்டிய சாட்சியமே இதுவாகும்.

*எங்கள் துயர் தெரியாது*
*என்னவென்று புரியாது*
*இங்கு இருந்து பாடுகின்ற*
*எங்கள் குரல் கேக்காது .*

எனும் வரிகள் ஈழத்தின் போர்க்கால வரலாற்றுப் பதிவாக அமைகிறது.

1990களில் ஈழ விடுதலைப் போராட்டம் எழுச்சியடைந்த போது ஈழத்து இசைப்பாடல்கள் விடுதலைப் பாடல்களாக, போரிலிருந்து பிறந்த பாடல்களாக பரிணமித்தன. இந்தப் பரிமாணத்திலும் கண்ணனின் பங்களிப்பு மிக்க கனதியானதாகும்.

1990 இல் இந்த இசை போர்க்கால இசையாக மாற்றம் பெறுகின்றது. கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இசைப்பணி புரிந்த கண்ணன் அவர்கள் இக்காலத்தில் தனது இருப்பிடத்தை வன்னிப்பகுதிக்கு மாற்றிக் கொண்டார்.

1990 ஆம் ஆண்டின் பின் போராட்டக் களத்திலும் போராளிகளே கவிஞராக இருந்தும் பாடிய ஏராளமான பாடல்களுக்குக் கண்ணன்இசையமைத்துள்ளார்.

## விடுதலைப் பாடல் எழுச்சி:

1993ம் ஆண்டு, யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவர்கள் வழங்கிய புகழேந்திப் புலவரின்





'நளன் தமயந்தி' கதையைத் தழுவி ஆங்கில மொழியில் வழங்கப்பட்ட இயல், இசை, நடனம் என முப்பரிணாமங்களும் கொண்ட அரியதொரு மேடையாற்றுகைக்கு மேற்கத்தேய, கீழைத்தேச மற்றும் ஹிந்துஸ்தானி கலவையாக ஒரு தனித்துவமான இசையை அமைத்துத் தந்தவர் கண்ணன் அவர்கள்.

இந்த மேடையாற்றுகையை நெறிப்படுத்தியவர்கள் மறைந்த கல்லூரி ஆசிரியை திருமதி நவரட்ணம் மற்றும் குழந்தை ம சண்முகலிங்கம் அவர்கள்.

இசைவாணர் கண்ணன் அவர்களின் இசைக்குழு ஈழத்தின் யாழ்ப் பாணத்தில் பிரபலமான ஒரு இசைக்குழுவாகும்.'கண்ணன் கோஷ்டி' என்று அக்காலத்தில் மக்களால் அழைக்கப்பட்டது. கர்நாடக இசை, பொப் இசை, மெல்லிசை, பக்தி இசை, திரையிசை, நாடக இசை என பல்திறமை கொண்ட 'இசைவாணர்' கண்ணன் என்பவரால் இக்குழு வழிநடத்தப்பட்டது.

## பள்ளி எழுந்திடுவீர்:

1986களில்தமிழீழ மாணவர் இயக்கத்தின் 'பள்ளி எழுந்திடுவீர்' எனும் சிதம்பரநாதன் அவர்களின் நாடகத்திற்கு கண்ணன் அவர்களே இசை அமைத்திருந்தார்.

நாடகப் பாடல்களுக்கு மெட்டமைத்து, நாடகங்களுக்கு இசையமைப் பது என்பதன் நீட்சியாக யாழ். நாடக அரங்கக் கல்லூரி மேடையேற்றிய கோடை, புதியதொரு வீடு, பொறுத்தது போதும்,சக்தி பிறக்குது, சங்காரம்,கூடி விளையாடு பாப்பா, மண் சுமந்த மேனியர், அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும், உயிர்த்தெழுந்த மனிதர் கூத்து, மாற்றம், பள்ளி எழுந்திடுவீர், ஆருக்கெடுத் துரைப்பேன், போன்ற புகழ் பெற்ற நாடகங் களுக்கு கண்ணன் இசையமைத்து இருந்தார்.

'மண் சுமந்த மேனியர்' பாடல்கள் எல்லாம் தமிழர் உள்ளங்களை உலுக் கியெடுத்த காலத்தின் தேவை கருதிய பாடல்களாகும்.

நாடகங்களுக்கு மட்டுமல்லாது நடனக் கலைஞர்கள் சுப்பையா மாஸ்டர், வேல் ஆனந்தன், ஆகியோரின் நாட்டிய நாடகங்களுக்கும் கண்ணன் இசையமைப்பு செய்துள்ளார்.

'1996' என்ற வெளிவராத குறும் படத்திற்கான இசையமைப்பும் கண் ணனுடையதே. அண்மையில் முள்ளிவாய்க்கால் பேரழிவினை நினைவு கூறும் முகமாகக் குளோபல் தமிழ் ஊடக நிறுவனம் தயாரித்த, சோமிதரன் தொகுத்த 'காலத்துயர்' என்ற விவரணப் படத்தில் ஈழத்துக் கவிஞரான 'தேவ அபிரா' எழுதிய 'மூங்கிலாறே' என்ற அறிமுகப் பாடலுக்கும் கண் ணன் அவர்கள் இசையமைத்துள்ளார்.

## தீபச்செல்வனின் கவிதை பாடலாக:

இசைவாணர் கண்ணனின் இசையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் இளம் ஈழக்கவிஞரான தீபச் செல்வனின் கவிதை வரிகளைப் 'பூப்பூத்த நகரில் யார் வந்து புகுந்தார்' என்னும் பாடலாகவும் மாற்றியிருக்கின்றார்.

பல்பரிணாமம் கொண்ட ஒரு படைப்பாளியான தீபச் செல்வனின் மேற்குறித்த பாடல்கள் ஈழத்து இலக்கியத்தின் சிறப்பான சிருஷ்டியாக கருதப்படுகிறது. 'பூப்பூத்த நகரில் யார் வந்து' எனத் தொடங்கும் இந்தப் பாடலும் மக்கள் மத்தியில் நல்வரவேற்பைப் பெற்றது.

ஆயிரம் பாடல்களுக்கு மேல் இசையமைத்த கண்ணன் ஈழ மண்ணின் இசையமைபாளராகத் தடம் பதித்து ஈழத்து மெல்லிசை, பொப்பிசை, றொக்கிசை, ஆங்கில இசை, கர்நாடக இசை, ஈழத்துத் தமிழ்ச் சினிமா வின் இசை நாடக இசை, பக்தி இசை, போர்க்கால இசை என்று பல பரிமாணங்களிலும் அவரது புலமை விரிந்து ஆளுமை மிக்க வாழும் அற்புத கலைஞராக மிளிர்கின்றார்.



# முன்னோக்கி வா!

என் இனிய
பட்டாம்பூச்சியே!
எத்தனை சோகம்
சுமந்தாய்?
அத்தனை சுமைகளும்
தாண்டி
வாழ்வின்
எல்லை வரை பறக்கலாம்!

சிறையை உடைத்து
வெளியில் வா!
நீ தாண்டிய
மலையளவு
தடைகளை விட
இது ஒன்றும் பெரிதல்ல!

மனிதமற்ற மானிடரின்
வெறித்தனமான செயல்
பட்டுப்போன்ற
உன் மனதை
சுடு சொற்கள்எனும்
கருங்கல்லில்
உறவு எனும்
நூல் கொண்டு
கட்டியுள்ளனர்!

மறவாதே!!
உன் எண்ணங்கள்
உன் சிந்தனை
உயர்வானது.

உன் வாழ்க்கைக்கு
ஓர்
அர்த்தமுண்டு.
சிறையை உடைத்து
பறக்க
உன்னால் முடியும்.
பறந்து வா!!

உளி கொண்டு
செதுக்கச் செதுக்கவே
சிற்பம்உருவாகும்.

சிறைகளை உடை!
தடைகளைத் தகர்!
சுதந்திர காற்றை
சுவாசிக்க
உன்னுடைய உந்துதல்
அவசியம்.

நீ நீயாக இரு!
அத்தனை தடைகளும்
கால் தூசியாகும்!!

**அம்மு**



பவானி

# செஞ்சோலை

**2006** ஆகஸ்ட் 14 அதிகாலை விடியல் வழமைக்கு மாறான அமைதியுடன் காணப்பட்டது. ஏதோ துக்க நிகழ்வொன்று நடைபெறும் முன் தோன்றும் அசாதாரண அமைதி. இயற்கையும்நடக்கவிருக்கும் அனர்த்தத்தின் முன்னெச்சரிக்கை தந்ததோ என்னவோ.

வழமைபோல மக்கள் தம் அன்றாட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அங்கே, செஞ்சோலை சிறுவர் இல்லவளாகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி பயில்கின்றமாணவிகளுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சி2006 ஆகஸ்ட் 10ம் திகதி முதல் 10 நாட்களுக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.



2006 ஆகஸ்ட் 14 அன்று, தலைமைத்துவப் பயிற்சியின் 4வது தினத்திற்குரிய பயிற்சிப் பட்டறைக்குச் செல்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர் பிள்ளைகள். எப்போதும் போல மாணவிகள் கலகலப்பும் சிரிப்புமாகபயிற்சிக்கு ஆயத்தமாகினர். காலை 7.30 மணியளவில் ஒலியைவிட வேகமாக, பேரிரைச்சலுடன் வந்தநான்கு கிபிர்விமானங்கள் பொழிந்த குண்டுமழையில் செஞ்சோலை வளாகமே செந்நிறமாகியது.

சிரித்து மகிழ்ந்து, நாளைய எதிர்காலத்தின் கண்மணிகள் சிந்திய இரத்த வெள்ளத்தில் சதைப்பிண்டங்கள் சிதறுண்டு கிடந்தன. அழுகுரல்கள்மட்டுமேகேட்டன. அந்தக்கணத்தை விபரிக்க எம்மிடம் வார்த்தைகளில்லை. 17 ஆண்டுகள் கடந்தும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாதது பள்ளிச் சிறுமிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் கொடூரத் தாக்குதல்.

இதன்போது இரண்டு பணியாளர்கள் உட்பட 61 மாணவிகள் என 63பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.155 இற்கும் மேற்பட்டமாணவிகள் படுகாயமடைந்தனர். இதில் மூவரின் கால்கள் துண்டிக்கப்பட்டதுடன், ஒரு மாணவி கண் ஒன்றையும் இழந்திருந்தார்.

பள்ளிச் சிறுமிகள் கொல்லப்பட்ட செஞ்சோலைப் படுகொலை நினைவு நாளை வலியுடன் நினைவு கூருகிறோம். காயப்பட்ட மாணவிகளில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததால் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் மனித நேயமற்ற சிறிலங்கா அரசு மூவரையும் கைது செய்து விசாரிக்க முடிவு செய்தது. பின் அவர்களை திருப்பி வன்னியிலுள்ள அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி, வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பியது.

அதில் ஒரு மாணவி சிகிச்சை பலனின்றி இறந்தார். மீளவும் இரு மாணவிகளையும் கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அதன் பின் அவர்கள் பற்றிய தகவல் எதுவும்தரப்படவில்லை. ஆனால் மாணவிகளின் பெற்றார் ஒழுங்குபடுத்த பட்ட இடத்தில் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். செஞ்சோலையில் குண்டு வீசிய அன்று சிறிலங்கா அரசு செய்திகளில் விடுதலைப் புலிகளின்பயிற்சி முகாமை தாக்கியதாக செய்தி வெளியிட்டது. இதனை விடுதலைப்புலிகள் அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை.




அத்துடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், இலங்கை போர்நிறுத்த கண் காணிப்பு குழு,யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு ஆகியன அது புலிகளின் பயிற்சி முகாமல்ல என்பதை திட்ட வட்டமாக தம் அறிக்கைகளில் சுட்டிக் காட்டினர்.ஆனால் அதனை நிராகரித்த சிறிலங்கா அரசு 2004 இலிருந்து கண்கா ணிப்பதாகவும் அதுபயிற்சி முகாம் தான், தவறான இலக்கல்ல என்றும் கூறியது.

செஞ்சோலை மீதான தாக்குதல் இலங்



கையரசின் நாகரீகமற்ற காட்டுமிராண் டித்தனமான செயலையே காட்டுகிறது என தமிழ்நாடு சட்டமன்றம்தீர்மானம் நிறைவேற்றியது. யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமையமைப்பு இது முதலுதவி பயிற்சி நடைபெற்ற இட மெனவும் இங்கு பயிற்சி பெற்றவர்கள் சிறுவர்களேயன்றி போராளிகள் அல்லர் என்றும் கூறினர்.

ஐக்கிய நாடுகள் சபைசெய்தியாளர் கள் கூறுகையில் இங்கு முதலுதவி பயிற்சிமுகாமே நடைபெற்றது. இதில் 15-18வயதுக்குட்பட்ட கிளி/முல்லை மாவட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் உயர்தர மாணவிகளே பங்குபற்றினர் எனக் கூறினார்.தமிழ் தேசியக் கூட்ட மைப்பு இது கொடூரமானதும் மனிதா பிமானமற்றதுமான இனப்படுகொலை எனக் கூறியது.

சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த யுனிசெப் அலுவலக ஊழியர்கள் உடன டியாக சம்பவ இடத்திற்கு சென்று, மாண விகளை சிகிச்சைக்கு அனுப்புவதில் முன் நின்றனர். இதன் நிர்வாக இயக்கு னர் வெனிமேற் கருத்துக்கூறுகையில் இந்தக்குழந்தைகள் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் என்றார். அந்த நிறு வனத்தின் ஊழியரான வான் கெர்ப்பன் அவர்கள் இவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தார்கள் என்பதற்கான எந்த ஆதாரமுமில்லை என்றார்.

போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவரான சுவீடன் இராணுவத்தில் ஓய்வு பெற்ற அதிகாரியுமான உல்ஃபா என்றிக்சன் கூறும் போது தனது ஊழி யர்கள் இறந்தவர்களை எண்ணி முடிக் கவில்லை என்றும், சம்பவ இடத்தில் போராளிகளின் முகாம்கள் அல்லது ஆயு தங்களின் எந்த அடையாளத்தையும் காணவில்லை என்றார்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பாடசாலை மாணவிகள் தான் என்பதை கிளி/முல்லை மாவட்டங்களின் கல் விப்பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தினர். இம் மாணவிகளில் பெரும்பாலான மாணவிகள் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். இதில் 400மாண விகளில் தலைமைத்துவ முதலுதவிக்கு தெரிவாகிய மாணவிகளே இவர்கள்.

இவர்களுக்கான பயிற்சி நெறி2006 ஆகஸ்ட்11தொடக்கம் 2006 ஆகஸ்ட்20 வரை நடைபெற இருந்தது. இதனை கிளிநொச்சி கல்வி வலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட "WOMAN'S REHABILITATION AND DEVELOPMENT' (CWRD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

அன்று 17 வருடங்களுக்கு முன் எழுந்த எம் குழந் தைகளின் கதறல்கள் எவர் காதிலும் கேட்கவில்லை. இன்று வரை இது மக்கள் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்திய காயமாகும்.அரசன் அன்று கொல்வான்.தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள்.

அன்று எம்பிஞ்சுக் குழந்தைகள் தலையில் குண்டு போட்ட சிறிலங்கா அரசுக்கு விமானியாக செயல்பட்டது உக்ரைன் நாட்டு விமானிகளாகும்.

அன்று நாம் அனுபவித்த அதே வேதனையை அனுபவிக்கும் போது தெரியும் எம் வலியின் கனம். ஆனால் நாம் அங்கு பாதிக்கப்படும் பொதுமக்கள் மீது ஆழ்ந்த மன வருத்தம்கொண்டுள்ளோம். எனினும் 2009 இல் எம் மீது குண்டுமழை பொழிந்த போது அத்தனை நாடுகளும் கோமாவில் இருந்தீர்களா? இன்று தான் விழித்துக் கொண்டீர்களா?

உலகின் போரின் போது பாதிக்கப்படுவது அப்பாவி மக்களே. போர்ச் சூழலில் வாழ்ந்த எமக்கு அதன் தார்ப்பரியம் புரியும். எனினும் ஏதோ சில அரசுக ளின் சுயநலனுக்காக அப்பாவி மக்கள் கொல்லப்பட் டும்,காயமடைந்தும், ஊனமுற்றும்,காணாமலும் போகிறார்கள். அன்றைய காலகட்டத்தில் எம் தமிழீழ மக்களுக்காய் ஒரு சொட்டு கண்ணீர் விட மறந்து போனது உலகநாடு.

இதே உக்ரைன் நாட்டைச் சார்ந்த பெண் விமானியே எங்கள் மீது குண்டு வீசி இனப்படு கொலைக்கு வழிவகுத்தவர். அன்று அவர்கள் செய் தது நியாயமானது என்றால் இன்று இரஷ்யா செய் வதும் நியாயமானதே.

உக்ரைன் தொடர்பான காணொளிகள் பார்க்கும் போது மனதைநெருடினாலும், எங்களுக்கு இழைக் கப்பட்டதை எண்ணினால்.? ஏனெனில்

இன்று நாம் யுத்த பூமியின் வடுக்களாய் வாழ்கி றோம்.

**'ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்**
**வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்'**

செஞ்சோலையில் தம் இன்னுயிர்களை ஈகம் செய்த அனைவருக்காகவும் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திப்போம்.



# கர்மா



**கோ.ராஜ்குமார்**
(தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்)



திருகோணமலையை ஆக்கிரமிக்க ராவணன் சிங்களவன் ஆக்கப்பட்டான். ஆனால் எதிர்காலத்தில் வல்வெட்டித்துறை மீது ஆக்கிரமிப்பு நடத்த பிரபாகரனையும் சிங்களவன் என்பார்கள் சிங்களவர்கள். சிங்கள கர்மா ஒரு போதும் விலகாது.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2367 நாள் இன்று. வவுனியா நீதி மன்றத்தின் முன் ஏ–9 வீதியில் இப் பந்தலில் இப்போராட்டத்தில் பயணிக்கிறோம்.

செஞ்சோலை வளாகம் அனாதை இல்லத்தின் அழிப்பின் 17வது ஆண்டு நினைவு தினம் இம் மாதமாகும். சிங்கள குண்டுவீச்சினால் 16 முதல் 18 வயதுக்குட்பட்ட 61க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகொலை செய்யப்பட்டதும் மற்றும் 130 மாணவிகள் பலத்த காயமடைந்ததும் இன்றைய நாள். இவை அனைத்தும் ஆகஸ்ட் 14, 2006 அன்று ஒரு திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடந்தன.

நாங்கள் அவர்களுக்கு வணக்கம் செலுத்த விரும்புகிறோம். ஆகஸ்ட் 14 அன்று அந்த நாளை நாங்கள் நினைவில் கொள்கிறோம். இந்த மாணவர்களை நாங்கள் மதிக்கிறோம். இன்று அவர்களை நினைவில் கொள்ள விரும்புகிறோம்.

இராவணன் சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன் திருகோணமலையை தளமாகக் கொண்ட தமிழ் சைவ மன்னன் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இராமாயணத்தின் சமஸ்கிருத இந்துக் கதையில் ராவணன், திராவிட மற்றும் தமிழ் சின்னமாக பரவலாக கொண்டாடப்படுகிறார். ஈழத்தின் அரசனாகவும், சிவ பக்தனாகவும் போற்றப்படும் இராவணன், திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரத்தின் மூல, பழமையான கோவிலைக் கட்டியதாக ராமாயணம் சொல்லுகிறது.

ராவணன் விகாரை கட்டவில்லை, சிவன் கோவிலை கட்டினான் என்று தெற்கில் உள்ள மக்களுக்கு நாம் தாய்மார்கள் கூற விரும்புகிறோம். இவர் ஒரு சைவத் தமிழ் மன்னர். இந்த ஈழத் தீவின் ஆதி பழங்கால மக்கள் தமிழர்கள் என்று ராவணனின் இருப்பு கூறுகிறது.

இங்கு, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன சிங்களவர்கள் வெள்ளைத் தோல் ஆரியர்கள் என்று கூறியதையும் எமது சிங்கள சகோதரர்களுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

திருகோணமலையை ஆக்கிரமிக்க, சிங்களவனுக்கு ராவணன் சிங்களவனானான், ஆனால் எதிர்காலத்தில் வல்வெட்டித்துறையை ஆக்கிரமிக்கும் போது தேசிய தலைவர் பிரபாகரனை சிங்களவன் என்று சிங்களவர்கள் சொல்வார்கள்.

சிங்கள மதகுருமார்கள், உளவு முகவர்கள், பொலிஸ், இலங்கை இராணுவம், தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம் மற்றும் மஹாவலி திட்டத்தினால் தாங்க முடியாத துன்பம்,





உளவியல் வலியை தமிழர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

இயற்கைக்கு ஒரு விதி உள்ளது, அதாவது ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும் எதிர் எதிர்வினை உள்ளது. விஞ்ஞானி சார் ஐசாக் நியூட்டன் கூட தனது ஆராய்ச்சியில் அதை நிரூபித்தார். மத ரீதியாக பல மகான்கள் 'கர்மா' என்று குறிப்பிட்டுள்ளனர். கர்மா என்பது 'இந்த வாழ்க்கையில் நீங்கள் செய்யும் அனைத்து நல்ல, மற்றும் கெட்ட காரியங்கள் அனைத்தும் உங்கள் எதிர்கால வாழ்க்கை எவ்வளவு நல்லது அல்லது கெட்டது என்பதை நிர்ணயிக்கும்'.

தமிழ் மக்களை ஆக்கிரமிப்பவர்களையும் ஒடுக்குபவர்களையும் கர்மா கவனித்துக் கொள்ளும்.இலங்கையின் நிதிச் சரிவு கர்மாவின் ஒரு முனை மட்டுமே. சிங்களவர்கள் தமிழர்களுக்கு செய்த கர்மாவிற்கு இன்னும் பல விளைவுகளை காண்போம்.

இந்த தீவின் நில உரிமையை சீனர்களும் இந்தியர்களும் கைப்பற்றுவதை இப்போது காண்கிறோம். இந்த இரண்டு எதிரிகளுக்கும் இந்த தீவு ஒரு போர்க்களமாக எதிர் காலத்தில் இருக்கும். இறுதியில் தீவு முழுவதும் சாம்பலாகிவிடும். கடந்த 75 வருடங்களாக சிங்களவர்கள் தமிழர்களுக்கு செய்த கர்மாவின் ஒரு பகுதி இது.

சிங்களவர்கள் தங்கள் கர்மாவுற்கு பரிகாரம் தேட வேண்டுமானால், தமிழர்கள் தங்களை ஆளட்டும் என விட்டுவிடுங்கள். செக் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளாக மாறுவதற்கு முன்னாள் செகோல்ஸ்வாக்கியா செய்தது போல் ஒரு இணக்கமான தீர்வுக்கு வாருங்கள்.

புலம்பெயர் தமிழர்களின் பலம் குறித்து தமிழர்களாகிய நாம் பெருமை கொள்கிறோம். அவர்கள் அனைவரும் பல வழிகளில் வலிமையானவர்கள். அவர்கள் அரசியல், அறிவியல், நிதி, தொழில்நுட்பம், பாதுகாப்புத் துறை மற்றும் நிதியில் வலுவானவர்கள். அவர்கள் ஒன்றிணைந்து ஒரு பொது வாக்கெடுப்புக்கு குரல் கொடுத்தால், தமிழர்கள் தங்கள் புதிய தாயகத்தின் விடியலை மிக விரைவில் காண்பார்கள்.




"புலம்பெயர் தமிழர்களின் பலம் குறித்து தமிழர்களாகிய நாம் பெருமை கொள்கிறோம். அவர்கள் அனைவரும் பல வழிகளில் வலிமை யானவர்கள். அவர்கள் அரசியல், அறிவியல், நிதி, தொழில்நுட்பம், பாதுகாப்புத் துறை மற்றும் நிதியில் வலுவானவர்கள். அவர்கள் ஒன்றிணைந்து ஒரு பொது வாக்கெடுப்புக்கு குரல் கொடுத்தால், தமிழர்கள் தங்கள் புதிய தாயகத்தின் விடியலை மிக விரைவில் காண்பார்கள்."

கடந்த 3200 வருடங்களாவது தமிழர்கள் இந்தத் தீவின் உரிமையாளர்கள் என்பதை காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்கள் நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். சிங்களவர்களின் வரலாறு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் சிங்கள மொழியின் உருவாக்கத்தின் அடிப்படையில் தொடங்கியது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்களால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டவர்கள் நம் தமிழ் சகோதரர்கள். எனவே மலையகத் தமிழர்களை விட சிங்களம் சுமார் 500 ஆண்டுகள் மூத்தது.

கிபி 140அளவில் கிரேக்க புவியியல் அறிஞர் புகழ்பெற்ற உலகப் படத்தை வரைந்தார். இதில் இலங்கைத் தீவை 'தப்ரபேன்' என்று குறிப்பிட்டதுடன் அவரது படத்தில் குறிப்பிட்டுள்ள இடங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

தமிழர்களை அழிக்க விரும்புபவர்கள் சிங்களவராகவோ அல்லது தமிழர்களாகவோ இருக்கலாம், ஆனால் கர்மா உங்களை ஒருபோதும் விடாது.

பொழில்



# இரத்தத்தில் தோய்ந்தது செஞ்சோலை!

வரலாறு மறக்குமோ?
வலிகள்தான் தொலையுமோ?
வள்ளிபுனத்து செழுமைநிலம்
நிணமும் சதையும்
தூவப்பட்டு
செந்நீரால் குளித்த
வரலாறு மறக்குமோ?
வலிகள்தான் தொலையுமோ?
செஞ்சோலைப் படுகொலை
நினைவுகள் அழியுமோ?

கொரோனாவில் போயிருந்தால்
கொடிய நோய் வந்ததென்று
காலம் கடந்தானும்
மனது கொஞ்சம் ஏற்றிருக்கும்.

சுனாமி வாரிச் சென்றிருந்தால்
இயற்கையின் சீற்றம் என்று
அழுதாலும்
ஆற்றியிருப்போம் எம்மனதை.

ராட்சசன் ராஜபக்ச
ஏவி விட்ட விமானங்கள்
கொத்தாகக் குண்டுவீசி
பள்ளிக் குழந்தைகளை
பாடையில் ஏற்றியதை
உலகம் மறக்கலாம்
மகிந்தவை
நாங்கள் மன்னிக்கலாமா?



சதைத் துண்டங்களாய்
பிய்த்துபோய் கிடந்தார்கள்
அந்தப் பிஞ்சுகள்!
தலையில்லா கால்களில்லா
கைகளில்லா குவியலிடை..
என்மகவும் இருக்கிறதா
என்று
ஏங்கியழுது தேடிய
பெற்றவர் வலி..!!
எப்படிக் கடந்து போகும்?

மரண ஓலத்தில் குளித்தது
வள்ளிபுனம் அன்று!!

இடம்பெயர்ந்து தவித்தவர்க்கான
மனிதநேயக் கூடங்களுக்கு
பரிவோடு இடம்தந்து
அரவணைத்த இடம்
வள்ளிபுனம்!
செஞ்சோலை
சிறுவர் இல்லத்தையும்
தன்னகத்தே கொண்டது
ஒரு தவறா?

பலபலவென்று விடிந்த
அன்றைய காலைப்பொழுது
அகாலமாய்ப் போனது
எங்கள் குழந்தைகளுக்கு!



# இரத்தத்தில் தோய்ந்தது செஞ்சோலை!

*பக்குவமாய் பின்னலிட்டு*
*நெற்றிக்குத் திலகமிட்டு*
*பள்ளிச்சீருடையில்*
*அன்றைய*
*பட்டறைப் பயிற்சிக்கு*
*தயாராகினர் சிறுமிகள்*

*அகம் நிறைந்த கனவுகள்*
*சுமந்தவர்கள் இவர்கள்.*
*தமதிடத்தைத் தரமுயர்த்தும்*
*எதிர்காலச் சிற்பிகளாய்*
*தலைமைத்துவம் பயில*
*பயிற்சிப் பட்டறைக்கு*
*வந்தவர்கள்*
*சிங்களத்தின் குண்டுவீச்சால்*
*குதறுண்டு போயினர்.*
*அத்தனை பாடசாலைகளும்*
*பரிதவித்துப் போயின!*
*வருங்கால தலைமைகளை*
*உருவாக்கவென*
*தேர்ந்தெடுத்து தெரிவுசெய்து,*
*பெற்றவர் அனுமதி பெற்று*
*கருத்தரங்கில்*
*கலந்து கொண்ட மாணவச்*
*செல்வங்கள் இவர்கள்!!*

*உக்ரேனின் பெண் பிசாசு*
*விமானி வடிவத்தில்*
*வந்து*
*கிபிர் குண்டுகளை வீசியதாக*
*பத்திரிகைகள் பத்தியாய் எழுதின.*
*என்ன பயன்?*
*மகிந்தவிற்கும் இன்னமும்*
*மரணம் வரவில்லை.*
*கொலைஞர்கள் யாரும்*
*தண்டிக்கப்படவுமில்லை.*

*ரஷ்ய குண்டுவீச்சில்*
*உக்ரேன் பள்ளிகள்*
*பற்றி எரிந்தனவாம்!*
*குழந்தைகள் குமரியர்*
*கொல்லப்பட்டனராம்!*
*கூக்குரல் அழுகுரல்*
*அங்கு விண்ணை முட்டுகிறதாம்!!*

*உற்றுக் கேளுங்கள்*
*உலக மக்களே!*
*செஞ்சோலை கூக்குரலும்*
*அதனுள் இருக்கலாம்!*

**14/08/2006 அன்று, தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள செஞ்சோலை வந்திருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளில் சிங்கள இனவாத அரசின் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 61 மாணவிகளினதும் காயப்படுத்தப்பட்ட, அங்கவீனமாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவியரினதும் நினைவாக எழுதப்பட்டது.**



# சிங்கள பௌத்த தேசபக்தியும் இனவாத எரியூட்டலும்

இலங்கையில், சிங்கள–பௌத்த 'தேசபக்தியை' தூண்டிவிடுவதற்கு அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் பிக்குகள் அடங்கிய ஒரு குழு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆகஸ்ட் 18 ஆம் திகதி குருந்தியில் நடக்காதது ஒரு திகிலூட்டும் நிகழ்வு. இந்த எரியூட்டு – அரசியல் ஆகஸ்ட் 16 அன்று, பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில [ஒரு காலத்தில் கோத்தாபய ராஜபக்சவை விளாடிமிர் புடின், ஜவஹர்லால் நேரு, பிடல் காஸ்ட்ரோ, மகாதீர் முகமட் மற்றும் லீ குவான் யூ ஆகியோரின் கலவையாகக் கருதியவர்] ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி, தமிழ் அரசியல்வாதிகள் ஆகஸ்ட் 18 அன்று குருந்தியில் கோவிலைக் கட்டத் திட்டமிடுவதாக அறிவித்தார்.

'சிங்களவர்களே விழித்துக்கொள்ளுங்கள், குருந்தியைக் காப்பாற்றுங்கள்' என்று சிவப்பு எழுத்துக்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கலிங்க மாகனின் நவீனகால சந்ததியினரிடமிருந்து தாய்நாட்டின் இன்றியமையாத பகுதியைக் காப்பாற்ற, போதுமான அளவு சிங்களவர்களைத் தூண்டி அவர்களை ஆகஸ்ட் 18 அன்று குருந்தியில் ஒன்றுசேர்க்க வைப்பது வெளிப்படையானது.

ஆகஸ்ட் 18 அன்று கோவில் கட்டும் திட்டம் பற்றி கம்மன்பில கூறிய கதை அப்பட்டமான பொய். தொல்பொருள் திணைக்களம் விதித்திருந்த நிபந்தனைகளின் கீழ், குருந்தியில் இந்து சமய விழாவை நடத்துவதற்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தமிழர்கள் குழுவொன்றுக்கு அனுமதியளித்துள்ளது. அவ்வளவுதான். ஆனால் சிங்கள பௌத்தர்களை ஆத்திரப்படுத்தும் திட்டம் வெற்றி பெற்றிருந்தால் உண்மைகள் பொருத்தமற்றதாக இருந்திருக்கும்.

ஆயிரக்கணக்கான சிங்கள–பௌத்தர்கள் குருந்தியில் இறங்கியிருந்தால், அவர்கள் தமிழர்களின் நீதிமன்ற அனுமதியுடன் தொல்பொருள் திணைக்களம் அனுமதித்திருந்த சமய நிகழ்வுகளை நடத்துவதைத் தடுக்க முயன்றிருந்தால், வன்முறை வெடித்திருக்கலாம்.



சமூக ஊடகங்களின் இந்த யுகத்தில், தமிழர்களால் தாக்கப்பட்டனர் என்ற இரத்தத்தை உறைய வைக்கும் கதைகளைக் கொண்ட வதந்திகளின் சுனாமி தொடர்ந்து வந்திருக்கும். பிக்குகள் தலைமையிலான கும்பல் கிழக்கிலும் தெற்கிலும் தாய்நாட்டிற்காக கொல்லவும், எரிக்கவும் தயாராக தோன்றியிருக்கும்.

அதிர்ஷ்டவசமாக அந்த திட்டம் தோல்வியடைந்தது. சில சிங்களவர்கள் வந்திருந்தனர், ஆனால் நிலைமை கைமீறிச் செல்ல போதுமானதாக இல்லை. குருந்தி விகாரையின் 'பிரதான பொறுப்பாளர்' கல்கமுவ சாந்தபோதி தேரரைத் தடுத்து, ஒரு சம்பவத்தைத் தூண்டுவதைத் தடுத்து, பொலிஸார் ஆக்கப்பூர்வமான வகிபாகத்தை



ஆற்றினர். பொலிஸ்காரர்ஒருவர் பிக்கு விடம் பொலிசில் புகார் செய்யுமாறும், நீதித்துறை உதவியை நாடுமாறும் ஆலோசனை கூறியுள்ளார்.

அதனால்இந்தத்தடவை அசம்பா விதம் தடுக்கப்பட்டது.

குருந்தி ஒரு தனியான சம்பவம் அல்ல. ஆனால் வடக்கு மற்றும் கிழக் கில் பரவியிருக்கும் சங்கிலித்தொடரின் மிக முக்கியமான இணைப்பாகும். உதா ரணமாக, புராதன பொரலுகந்த விகாரை அமைந்துள்ள இடத்தில் புதிய நிர்மாணப் பணிகளை தற்காலிகமாக நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தர வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த வாரம் பிக்குகள் குழுவொன்று பெரிய குளத்தில் நிலாவெளி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குருந்தியைப் போன்று, பிக்குகள் பொலிசில் முறைப்பாடு செய்யவில்லை, நீதித்துறை உதவியை நாடவில்லை அல்லது புத்தசாசன அமைச்சுக்குத் தெரிவிக்கவில்லை. அவர்கள் வீதியை கைப்பற்றினர், உண்மையில், போக்கு வரத்துக்கு இடையூறாக, கோஷங்களை எழுப்பினர்.

இந்நிகழ்வு தமிழர்கள் பெரும்பான் மையாக வாழும் பகுதியில் (538 தமிழ்க் குடும்பங்கள் மற்றும் 2 சிங்கள குடும்பங் கள்) இடம்பெற்றதால், ஒரு 'சம்பவம்' விரைவில் சாத்தியமாகும். நல்ல வேளை யாக தமிழ் குடியிருப்பாளர்கள் அதற்கு எதிர்வினை ஆற்றவில்லை, அதே சமயம் பொலிசார் நாகரிகமாக ஆனால் உறுதியாக நடந்து கொண்டனர்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், 1962 ஆம் ஆண்டின் பல்கலைக்கழ கங்கள் ஆணைக்குழு (மூன்று சிங்கள பௌத்த உறுப்பினர்களைக் கொண்டது) அதன் அறிக்கையில், 1958 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இத்தகைய மோசமான முறையில் வெடித்த இன மற்றும் மத உணர்வுகளைத் தூண்டு வதற்கு அரசியல் பிக்குகள் பெரிய அளவில் பொறுப்பாளிகள்' என்று கூறி யது. 1956ல் இருந்து 1958 வந்தது; 1952 இல் டட்லி சேனநாயக்கவிடம் மோசமாக தோற்று 1953 ஹர்த்தாலின் மூலம் பொருத்தமற்றதாக ஆக்கப்பட்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க மாபிதகம புத்தரக்கித்த தேரருடன் மேற் கொண்ட பேரம் கொலையிலும் குழப் பத்திலும் முடிந்தது.

அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, புத்த மதத்தையும் தொல்லியல் துறையையும் ஆயுதமாக்கும் புதிய அலையுடன், 1956 மீண்டும் வரப்போகிறதா?

## அழிவிலிருந்து அழிவு வரை

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொல்பொருள் பாரம்பரிய முகாமைத் துவத்திற்கான தனது பணிக்குழுவை அமைத்தபோது (அவரது பௌத்த ஆலோசனை சபைக்கு வழங்கிய வாக் குறுதிக்கு மதிப்பளித்து) அவர் நாட்டின் மிகவும் இன-மத ரீதியாக வேறுபட்ட மாகாணத்தில் தொல்பொருளியல் ஒழுங் கமைக்கப்பட்ட ஆயுதமயமாக்கலுக்கு களம் அமைத்தார். கிழக்கில் உள்ள 'பண்டைய பௌத்த நினைவுச்சின்னங்க ளை' அடையாளம் காண அதிரடிப்படை சுற்றிச்சுற்றி வந்தது.

ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் மாகா ணத்தின் சிங்கள உரிமையின் சான்றா கப் போற்றப்பட்டது. பல இடங்களில், பழங்கால இடிபாடுகள் அடையாளம் காணப்பட்டவுடன், துறவிகள் இடம்பெ யர்ந்து, மறுசீரமைப்பு என்ற போர்வையில் புதிய கட்டுமானத்தைத் தொடங்கி னர். இந்த இடிபாடுகள் பெரும்பாலும் சிங்கள-பௌத்தர்கள் அல்லாதோர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் அமைந்திருந்ததால், கலவரம் மற்றும் மோதலுக்கான கதவுகள் மேலும் திறக் கப்பட்டன.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி யாக இருந்தபோது, பிக்குகள் மற்றும் அவர்களது அரசியல்வாதிகளின் ஆத ரவாளர்களுக்கு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தால்சட்டமின்மை விதிமுறை, அதி காரம் எல்லாமென சுதந்திரமான கரம் இருந்தது. உதாரணமாக, 2018 இல், முல்லைத்தீவு நீதவான் குருந்தியில் பிக்குகள் குழுவினால் மேலும் கட்டு மானங்களைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பித்திருந் தார்.கோத்தாபய ஜனாதிபதியின் கீழ், இராணுவம் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதன் மூலம் இந்த உத்தரவு வெற்றுப் பார்வையில் மீறப்பட்டது.

சன்னா ஜயசுமன உட்பட பல அமைச்சர்கள் கலந் துகொண்ட புதிய மதக் கட்டிடம் 2022பெப்ரவரியில் திறந்து வைக்கப்பட்டது. கிழக்கில் ஆட்சியானது தனது பிளவுபடுத்தும் பெரும்பான்மை-மேலா ண்மைவாத நிகழ்ச்சி நிரலுக்கு முன்னுரிமை அளித்தாலும்,எல்லா இடங்களிலும் சாதாரண வாழ்க்கை வாழ முடியாததாக மாறியது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன்,அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் 2000 க்கும் மேற்பட்ட கொள்க லன்களுக்கு பணம் செலுத்துவதற்கு டொலர்கள் இல்லாததால் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

கோத்தாபய ராஜபக்சவெளியேறியவுடன், தண் டனை விலக்கு இல்லாமல் போனதுடன் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஒரு வகையாக திரும்பி யது. முல்லைத்தீவு நீதிவான் 2022 இல் குருந்தியில் மேலும் கட்டுமானங்களைத் தடைசெய்து மற்று மொரு உத்தரவைப் பிறப்பித்தார். வடக்கு மற்றும் கிழக்கின் ஏனைய பகுதிகளில், பொதுமக்களின் எதிர்ப்புக்களை எதிர்கொண்ட இராணுவத்தினர், மரக்கன்றுகளை நட்டு, புத்தர் சிலைகளை நிறுவி சிங்கள-பௌத்தத்திற்கு காணிகளை உரிமை கொண்டாடும் பல முயற்சிகளிலிருந்து பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



உதாரணமாக, 2023 பெப்ரவரியில் யாழ்ப்பாணம், அச்சுவேலியில் இராணுவம் ஒரு பழைய அரச மரத் தின் கீழ் புதிய புத்தர் சிலையை வைத்த முயற்சி; 2023மார்ச்சில் கச்சத்தீவில் கடற்படை மரக்கன் றுகளை நட்டு புத்தர் சிலையை கட்ட முயற்சி; மற்றும் 2023 ஜூன் மாதம் மன்னாரில் உயிலங் குளத்தில் இராணுவம் அரசமரத்தை நட்டு விகாரை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

(இறுதி நகைச்சுவை என்னவென்றால் தாழ்த் தப்பட்ட தமிழர்களுக்கு புத்தரின் போதனையான ஜாதியற்ற சாசனத்தை போதித்திருந்தால், ஒரு தமிழ்-பௌத்த சமூகத்தை அமைதியான முறை யில்உருவாக்கியிருக்கலாம். ஆனால் இந்த பகுதி யில் உள்ள பல கோயில்கள் சியாம் நிகாயாவைச் சேர்ந்தவை. அவைகொவிகம சாதிக்கு வெளியே சிங்களவர்களை கூட அர்ச்சனை செய்ய அனும திக்காது.)



இந்த அரசியல் பிக்குகள் மற்றும் அவர்களின் அரசியல் ஆதரவாளர்களின் நடத்தையில் ஒரு முறை உள்ளது. அவர்கள் சட்டப்பூர்வ வழிகளைத் தவிர்ப்பதாகத் தெரிகிறது, சட்டத்திற்குப் புறம்பான போராட்டங்கள் மற்றும் கூட்டங்களை விரும்புகின்றனர், மேலும் சாத்தியமான இடங்களில் அரசியல் அழுத்தத்தை விரும்புகிறார்கள். நீதிமன்றங்கள் தங்களுக்கு விரும்பத்தகாத உத்தரவுகளை வழங்கும்போது, அவை நீதித்துறைக்கு எதிராக இனவாத அவதூறுகளைப் பயன்படுத்துகின்றன. ஓய்வுபெற்ற அட்மிரல் சரத் வீரசேகரபாதுகாப்பாகஅவரது பாராளுமன்ற சிறப்புரிமை கொத்தளத்துக்கு பின்னால், வெளிப்படையாகக் கூறியிருந்தார் , மற்றவர்கள் சூழ்ச்சிகளைப் பயன்படுத்துகின்றனர். தூண்டுதல் அவர்களின் விளையாட்டு. எரித்தல் அவர்களின் குறிக்கோள். எரியூட்டும் வார்த்தைகள் அவர்களின் ஒளிப்பிளம்பு. அவர்களின் இறுதி அதிகாரம்

அவர்களின் மூலோபாய புத்தகத்தில், சிங்கள-பௌத்தத்திற்காக குறைந்தபட்ச அதிகாரப்பகிர்வுக்குக் கூட எதிர்ப்புடன் வடக்கு மற்றும் கிழக்கை மீட்டெடுப்பது [இது புத்தர் போதித்ததற்கு எதிரானது] பிணைக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாகஇந்த சமாந்தரமான பிரபஞ்சத்தில், சிங்கள-பௌத்தர்கள் என்றென்றும் துன்புறுத்தப்படுகிறார்கள், எந்தவொரு சமூகமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றால் அது அவர்களேஎன்பதாகஇனப்பிரச்சினையின் இருப்பை ஒப்புக்கொள்ள மறுப்பதும் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட கடந்தகால தவறுகளை மறுப்பது, குறைத்து மதிப்பிடுவதும் நடக்கிறது.

1818 கிளர்ச்சியைத் தோற்கடிக்க ஆளுநர் பிரவுன்ரிக் என்ன செய்தார் அல்லது செய்யவில்லை என்பது இன்று நாம் தமிழர்களுடன் எவ்வாறு தொடர்பு படுத்துகிறோம் என்பதில் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது.

ஓய்வுபெற்ற அட்மிரல் சரத் வீரசேகரவின் கறுப்பு ஜூலையின் கொடூரத்தை குறைத்து மதிப்பிடும் முயற்சி, குறிப்பாக இந்த மனநிலையை வகைப்படுத்தும் நகைச்சுவையான அறியாமை அல்லது தீங்கிழைக்கும் உண்மைகளை மறுப்பது போன்றவற்றுக்கு ஒரு உதாரணம். அவர் தனது கட்டுரையில், 'இறந்த 350 பேரில் 50 பேர் சிங்களவர்கள் என்று சர்வதேசஜூரர்கள் ஆணைக்குழு அறிவித்தது' என்று தவறாகக் கூறி கறுப்பு ஜூலையின் கொடூரத்தை அகற்ற முயற்சிக்கிறார்.

இல்லை.. சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுஅவ்வாறு செய்யவில்லை. 1983 டிசம்பரில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவின் மறுபரிசீலனை எண். 31 இன் பக்கம் 25 இல் இந்த விடயத்தைப் பற்றிய அதன் ஒரே அறிக்கையில் கூறியது இதுதான்: 'இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை பற்றிய சாசனத்தின் கீழ், கொலை நோக்கத்தை அழிக்கும் நோக்கத்தில், முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ, ஒரு தேசிய, இன, அல்லது மதக் குழு இனப்படுகொலைச் செயல்களாகக் கருதப்படுகிறது. தமிழர்கள் மீதான சிங்களக் கலவரக்காரர்களின் வன்முறை இனப்படுகொலைச் செயல்கள் என்ற முடிவுக்கு ஆதாரங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன'.

கறுப்பு ஜூலை இல்லாவிட்டால், ஆயுதமேந்திய தமிழர் கிளர்ச்சி ஒரு முழு அளவிலான போராக வளர்ந்திருக்காது. 40 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசியல் பிக்குகளும் அவர்களின் அரசியல்வாதி ஆதரவாளர்களும் மற்றொரு எரியூட்டல் அபாயத்திற்கு தயாராக உள்ளனர். எதிர்காலத்தை இடிபாடுகளாக மாற்றும் விடயத்தில் கூட கடந்த கால அழிவுகள் சேமிக்கப்பட வேண்டும்.

## தேசபக்தி தீயும் தேசிய சாம்பலும்:

ஹிட்லர் ஒரு தேசபக்தராகவும், அவரது எதிரிகள் இரண்டாம் உலகப் போரின் உண்மையான கெட்டவர்களாகவும் இருந்த ஒரு இருண்ட இடமான ராஜபக்ச மாற்று பிரபஞ்சத்தின் மிகவும் தீவிரமான முடிவில் கோத்தாபய ஆதரவாளர்கள் வசித்து வந்தனர். கோத்தாபய ராஜபக்சவை 'ஹிட்லரைப் போல்' இருக்குமாறு கேட்ட வெண்டருவே உபாலி தேரர் மற்றும் மெய்ன் காம்ப்பின் பெருமைமிக்க ரசிகர்களான தெஷார ஜயசிங்க [எரிவாயு குப்பிகள் வெடித்தபோதும், எரிவாயு தட்டுப்பாடு ஆரம்பமான போதும் லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் தலைவர்] முக்கிய உதாரணங்கள்.

தங்கள் சொந்த தீவிரவாதத்தால் கண்மூடித்தனமாக, ஹிட்லரின் 'தேசபக்தி' ஜேர்மனிக்கு [உலகின் மற்ற பகுதிகளுக்கு ஒருபுறம் இருக்கட்டும்]: அழிவு, தோல்வி, ஆக்கிரமிப்பு மற்றும் பிரிவினை செய்ததை அவர்கள் பார்க்கவில்லை. ஜனாதிபதி கோத்தாபய ஆட்சியானது முன்னொருபோதும் இல்லாத மக்கள் எழுச்சியில் முடிவடைந்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை, கதாநாயகர் -தலைவர் நிலத்தடி பதுங்கு குழியில் சிறிது நேரம் ஒளிந்து கொண்டு பின்னர் ஒரு இரகசிய சுரங்கப்பாதை வழியாக தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஓய்வுபெற்ற அட்மிரல் வீரசேகரவின் கருத்துக்களைப் பின்பற்றி, பெரும்பாலான கோத்தாபய -அபிமானிகள் இன்னும் உலகம் பற்றிய தங்களின் சிதைந்த பார்வையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இரண்டாம் உலகப் போரில், சரணடைந்த ஜேர்மானியர்களை பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படைகள் எப்படி நடத்தினார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களில் பெரும்பாலோர் சித்திரவதை செய்யப்பட்டு இறந்தனர் மற்றும் பட்டினியால் இறந்தனர். ஹோலோகாஸ்ட் மறுப்பு, நவ-நாஜி ஆதாரங்களில் இருந்து எந்த ஒரு சாதா



ரண வரலாற்றுப் புத்தகத்திலிருந்தும் அவர் இந்தத் தகவலைப் பெற்றிருக்க வேண்டும்,

சித்திரவதை மற்றும் பட்டினி – மற்றும் துப்பாக்கிச் சூடு மற்றும் வாயுவால் மக்களை மரணத்திற்கு உட்படுத்துவது நாஜிக்கள் கொள்கையாகச் செய்தது, மற்றும் குறிப்பாக கிழக்கு முன்னணியில். ஒபரேஷன் பார்பரோசாவைத் தொடங்குவதற்கு முன், ஜேர்மன் ஓ.கே.டபிள்யூ மூன்று இரகசிய மற்றும் குற்றவியல் உத்தரவுகளை வழங்கியது. பார்பரோசா ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கில் உள்ள ஒவ்வொரு அதிகாரியையும் ஜேர்மனியர்களுக்கு விரோதமான மனப்பான்மை கொண்டதாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபர் மீதும் எந்த சம்பிரதாயமும் இன்றி மரணதண்டனை [களை] நிறைவேற்றவும், மற்றும் 'குற்றவாளிகள் என்றால்' மீண்டும் கூட்டு நடவடிக்கைகளை எடுக்கவும் அனுமதித்தது.



ஜேர்மனிக்கு எதிரான செயல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த அரங்கில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்த ஜேர்மன் வீரர்கள் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர். இரண்டாவது உத்தரவு, ரஷ்யாவில் துருப்புக்களின் நடத்தைக்கான வழிகாட்டுதல்கள் இந்த நடவடிக்கையை 'ஸ்லாவிக் மக்களுக்கு எதிரான ஜேர்மானியர்களின் பழைய போர்,சொல்லப்போனால் இன அழிப்புப் போர், மஸ்கோவிட்-ஆசிய அலைக்கு எதிராக ஐரோப்பிய கலாசாரத்தை பாதுகாத்தல் மற்றும் யூத போல்ஷிவிசத்தை விரட்டியடித்தல்' என்று அடையாளம் கண்டுள்ளது.

இறுதியாக, கொமிஷர் உத்தரவு சோவியத் இராணுவத்துடன் இணைக்கப்பட்ட அரசியல் ஆணையர்களை கொலை செய்ய கட்டாயப்படுத்தியது. மற்றும் எந்தவொரு போல்ஷிவைஸ் சிப்பாயும் சிறைபிடிக்கப்பட்டார். இறுதியில், ஹிட்லரின் தீவிரவாதம் ஜேர்மனியின் உண்மையான தேசிய நலன்களை மட்டுமின்றி அவரது சொந்த அரசியல் நலன்களையும் குருடாக்குவதாக இருந்தது.

முற்றுகையிடப்பட்ட ரஷ்ய முன்னணிக்கு வீரர்களை கொண்டு செல்வதை விட சாதாரண யூதர்களை அழிப்பு முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது. தீவிரவாதம் ஹிட்லருக்கு அதிகாரம் பெற உதவியது; அது அவரையும் அழித்தது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அரசியல் பிக்குகளின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் இருந்திருந்தால், 30 ஆண்டு கால யுத்தத்தை நாம் தவிர்த்திருக்க முடியும். அதேபோன்று, 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தத் தவறினால், வடக்கு மற்றும் கிழக்கை இன-மத அடிப்படையில் சீர்குலைக்கும் முயற்சிகள் புதிய மோதலுக்கு வித்திடலாம். ஆனால் 13வது திருத்தத்திற்கு எதிரான முழுமையான எதிர்ப்பின் மூலம் தங்களை மீண்டும் பொருத்தத்திற்குத் தள்ள முயற்சிக்கும் அரசியல் பிக்குகள், அவர்களின் கருத்தியல் தெளிவின்மையின் விளைவுகளை ஹிட்லரைப் போல குருடர்களாக உள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் ஓமரே கஸ்ஸப தேரர், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் 13 ஆவது திருத்தத்தைஎதிர்க்காவிட்டால், 'மீண்டும் கிராமத்திற்கு வருவோம்' என எச்சரித்துள்ளார் (அத்தகைய குண்டர்கள் பௌத்தம் அல்ல, பௌத்த எதிர்ப்பு). 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது நாட்டை பிளவுபடுத்துவதற்கு சமம் என பேராசிரியர் இந்துரகரே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதி என்பதால், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு ஒரு பிரிவினைவாத ஆவணம் என்று அர்த்தமா? 2017-ல் உயர் நீதிமன்றம் சமஷ்டி (13வது திருத்தத்திற்கு முன்னோடியாக இருக்கும் அதிகாரப் பகிர்வு மாதிரி) கூட பிரிவினைவாதத்திற்கு சமமானதல்ல என்று தீர்ப்பு வழங்கியது அவருக்குத் தெரியுமா? 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது என்று கூறியதன் மூலம், அரசியலமைப்புக்கு முரணான நிலைப்பாட்டை அவர் எடுக்கிறார் என்பது அவருக்குத் தெரியுமா?

கோத்தாபய ராஜபக்சவை படுகொலை செய்ய சதி செய்த குற்றச்சாட்டில் இருந்து சிவலிங்கம் ஆரூரனை இந்த ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்ததுடன் 17 வருட சிறைவாசத்தின் பின்னர் அவரை விடுதலை செய்தது. நீதிபதி நவரத்ன மாரசிங்க, மக்களின் நிலை என்னவாக இருந்தாலும் தனது தீர்ப்புகளை வழங்குவதாகவும், சாட்சியங்கள் இல்லாததால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

அவருக்கு எதிரான ஒரே 'ஆதாரம்' வற்புறுத்தலின் பேரில் செய்யப்பட்ட வாக்குமூலத்தை நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார்.இதுவே சிறந்த நீதியாக இருந்தது. ஆனால் முல்லைத்தீவு நீதவானின் இனம் குறித்து ஓய்வுபெற்ற அட்மிரல் வீரசேகரவின் ஆபத்தான கருத்துக்கள் எடுத்துக்காட்டுவது போல், பாமர மற்றும் காவி சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் நீதிபதிகளிடம் விரும்புவது கையாலாகத்தனத்தையல்ல, பக்கச் சார்பையும் தான். சிங்கள-பௌத்தர்களுக்காக எப்போதும் ஆட்சி செய்யும் நீதித்துறை ஒரு சிறந்த நீதித்துறை என்பது பற்றிய அவர்களின் யோசனையாகும். இந்த வகையான சிந்தனை எங்கு கொண்டு செல்ல முடியும் என்பதை இஸ்ரேலில் தற்போது என்ன நடக்கிறது என்பதன் மூலம் சிறப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நெதன்யாகுவின் புதிய அரசாங்கம் இஸ்ரேலிய நீதித்துறையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது 61 பாராளுமன்ற உறுப்பினர்களையும் எந்தவொரு உயர் நீதிமன்ற தீர்ப்பையும் அரசியலமைப்பிற்கு முரணானதெனஇரத்துசெய்ய இயலுமானதாகியுள்ளது.

இது பாலஸ்தீனியர்களுக்கு பாகுபாடு மற்றும் இடப்பெயர்வுக்கு மட்டுமல்ல, இஸ்ரேலில் ஜனநாயகதின் குடலை அகற்றுவதற்கும் மற்றும் மதச்சார்பின்மைக்குக் கூட கதவைத் திறக்கும். நோபல் பரிசு பெற்றவரும் யூதருமான டேனியல் கஹேன்மேன் கூறியது போல், 'இது 1948 க்குப் பிறகு இஸ்ரேலுக்கு ஏற்பட்ட மிக மோசமான அச்சுறுத்தலாகும்.' உயர்நீதிமன்றத் தலைவர் எஸ்தர் ஹயுட், 'நீதித்துறையின் மீதான கட்டுக்கடங்காத தாக்குதல், அது தாக்கப்பட்டு அடக்கப்பட வேண்டிய எதிரியைப் போல' ஜனநாயகத்திற்கு ஒரு 'மரண காயத்தை' கையாள்வதாகக் கண்டனம் செய்தார்.

> **2015ல் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றிருந்தால் இங்குதான் எங்களை வழிநடத்தியிருப்பார், கோத்தாபய அரகலயவை அப்புறப்படுத்தாமல் இருந்திருந்தால் எங்களை வழிநடத்தியிருப்பார். இப்போது அவர்களின் பின்தொடர்பவர்கள், எதிர்கால சக்தியின் ஒரு பகுதியை தங்களுக்கு உறுதி செய்ய, அதே பேரழிவு தரும் பாதையில் எம்மை வழிநடத்த விரும்புகிறார்கள்.**

2015ல் மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றிருந்தால் இங்குதான் எங்களை வழிநடத்தியிருப்பார், கோத்தாபய அரகலயவை அப்புறப்படுத்தாமல் இருந்திருந்தால் எங்களை வழிநடத்தியிருப்பார். இப்போது அவர்களின் பின்தொடர்பவர்கள், எதிர்கால சக்தியின் ஒரு பகுதியை தங்களுக்கு உறுதிசெய்ய, அதே பேரழிவு தரும் பாதையில் எம்மை வழிநடத்த விரும்புகிறார்கள்.

கேள்வி என்னவென்றால், இலங்கையில் எஞ்சியிருப்பதை மீண்டும் வீணாக்க இந்த எரியூட்டுவதில் ஆர்வமுள்ளோருக்கு நாம் அனுமதிக்கப் போகிறோமா?



# சந்திரயான்–3

## நிலவைப் பற்றி அறியாத 10 விடயங்கள்



இந்திய விண்வெளி நிறுவனமான இஸ்ரோவின் சந்திரயான்–3 விண்கலம் நிலவின் மேற்பரப்பில் சற்றுமுன்னர் தரையிறங்கியது.

இஸ்ரோவின் இந்த சாதனை முயற்சியைத் தான் உலகம் முழுவதிலும் உள்ள விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டுள்ளனர்.

சந்திரயான்–3 விண்ணில் ஏவப்பட்டதன் மூலம் நிலவின் மீதான மக்களின் ஆர்வம் அதிகரித்து வருகிறது. கடந்த சில நாட்களாக இணையத்தில் நிலவு தொடர்பான தேடல்கள் அதிகரித்துவருகின்றன.

சந்திரன் தொடர்பான உங்களுக்குத் தெரியாத பத்து விடயங்களை நாம் இங்கே பார்ப்போம்.

### 1. நிலா வட்டமாக இல்லை.பௌர்ணமி நாளில், சந்திரன் சரியாக முழு வட்டமாகத் தோன்றும்

ஆனால் உண்மையில் சந்திரன் ஒரு செயற்கைக்கோளைப் போல் பந்து போன்ற வட்டமானது அல்ல. அது தட்டையான உருவ அமைப்பைப் பெற்றுள்ளது.

ஆனால், நீங்கள் சந்திரனைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க முடியும்.இத்துடன், சந்திரனின் எடை அதன் வடிவியல் மையத்தில் குவிந்திருக்கவில்லை.நிலாவின் மொத்த எடையும் அதன் வடிவியல் மையத்திலிருந்து 1.2 மைல் தொலைவில் உள்ளது.


### 2. நிலவை ஒருபோதும் நீங்கள் முழுமையாகக் காணமுடியாது

பொதுவாக நீங்கள் சந்திரனைப் பார்த்தால், அதிகபட்சமாக அதன் மொத்த உருவத்தில் 59 சதவீதத்தை மட்டுமே உங்களால் பார்க்க முடியும்.

பூமியிலிருந்து பார்க்கும் போது நிலாவின் 41 சதவீதம் பரப்பு கண்களுக்குத் தெரியாது.

நீங்கள் விண்வெளிக்குச் சென்று அங்கிருந்து நிலாவின் 41 சதவீத நிலப்பரப்பில் இறங்கி நின்று பார்த்தால் அங்கிருந்து உங்களால் பூமியைப் பார்க்க முடியாது.

### 3. நீல நிலவுக்கும் (Blue Moon) எரிமலை வெடிப்புக்கும் இடையிலான தொடர்பு



1883 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் கிரகடோவா தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் காரணமாக அதனுடன் நீல நிலாவைத் தொடர்புபடுத்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்ததாக நம்பப்படுகிறது.

அந்த எரிமலை வெடிப்பு பூமியின் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான எரிமலை வெடிப்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது.உலக அளவில் கிடைத்துள்ள தகவல்களின்படி, அந்த எரிமலை வெடிப்பின்போது எழுந்த சத்தம் மேற்கு ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள பெர்த் நகர் வரை கேட்டது.

அதைத் தொடர்ந்து வளிமண்டலத்தில் அதிக அளவில் சாம்பல் பரவியது. சாம்பல் நிறைந்த இரவுகளில் சந்திரன் நீல நிறத்தில் தோன்றியது. இதற்குப் பிறகுதான், எரிமலை வெடிப்பையும், நீல நிலவையும் தொடர்புபடுத்தும் பழக்கம் ஏற்பட்டது.

### 4. நிலவில் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் ரகசிய திட்டம்

பனிப்போரின் உச்சகட்டத்தில் நிலவில் அணு ஆயுதத் தாக்குதல் நடத்தும் திட்டத்தை அமெரிக்கா தீவிரமாகப் பரிசீலித்த ஒரு காலம் இருந்தது.

அதன் நோக்கம் சோவியத் யூனியனை ஒரு அழுத்தத்தின் கீழ் கொண்டுவரும் வகையில் அமெரிக்க இராணுவத்தின் சக்தியைப் பற்றி பறைசாற்றுவதே ஆகும்.

இந்த ரகசிய திட்டத்தை 'நிலாவுக்கு மேற்கொள்ளப்படும் பயணங்கள் பற்றிய ஆய்வு' என்ற நோக்கில் 'Project A119' என்ற பெயரில் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### 5. நிலவில் ஏன் ஆழமான குழிகள் ஏற்படுத்தப்பட்டன?

ஒரு பாம்பு சூரியனை விழுங்குவதால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்று தென்கிழக்கு ஆசியாவில் ஒரு பழங்கால நம்பிக்கை உள்ளது.

சீனாவிலும் இதே போல் ஒரு பழக்கம் இருந்த நிலையில், கிரகணம் ஏற்படும் போது இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக சீன மக்கள் முடிந்தவரை சத்தம் போடுவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.இதே போல் நிலவில் உள்ள குழிகளில் ஒரு தவளை அமர்ந்திருகிறது என்றும் பழங்கால சீனர்கள் நம்பினர்.

ஆனால் நிலவில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள், அதாவது ஆழமான குழிகள், நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கோள்கள் மோதியதால் உருவானவை என்பது தான் உண்மை.

### 6. பூமியின் வேகத்தைக் குறைக்கும் நிலா

நிலா பூமிக்கு மிக அருகில் இருந்தால், அது அண்மைநிலை (Perigee) என்று அழைக்கப்படுகிறது.இந்த நேரத்தில், கடல் அலையின் வேகம் வழக்கத்தை விட கணிசமாக அதிகரிக்கிறது.

அப்போது, சந்திரன் பூமியின் சுழற்சி சக்தியையும் குறைக்கிறது. இதன் காரணமாக பூமி சுற்றும் கால அளவு ஒவ்வொரு நூற்றாண்டிலும் 1.5 மில்லி விநாடிகள் குறைகிறது.

### 7. நிலவிலிருந்து எவ்வளவு வெளிச்சம் கிடைக்கிறது?

சூரியன் முழு நிலவை விட 14 மடங்கு பிரகாசமாக இருக்கிறது.ஒரு பௌர்ணமியில் தோன்றும் ஒளியில் இருந்து சூரியனின் ஒளிக்கு சமமான ஒளியை நீங்கள் விரும்பினால், உங்களுக்கு 3,98,110 நிலவுகள் தேவைப்படும்.

சந்திர கிரகணம் ஏற்பட்டு, நிலா பூமியின் நிழலில் நுழையும் போது, அதன் மேற்பரப்பு வெப்பநிலை 500 பாரன்ஹீட் வரை குறைகிறது.மேலும், இந்த கிரகணம் 90 நிமிடங்களுக்கும் குறைவான காலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.

### 8. லியோனார்டோ டாவின்சி நிலவைப் பற்றி என்ன கண்டுபிடித்தார்?

சில நேரங்களில் நிலா ஒரு வளையம் போல் தெரிகிறது. இதை அர்த்தசந்திரா அல்லது பால்சந்திரா என்றும் அழைக்கிறோம். அத்தகைய சூழ்நிலையில், சந்திரனின் மையத்தில் சூரியன் பிரகாசிப்பது போன்ற ஒன்றைக் காண்கிறோம்.சந்திரனின் மற்ற பகுதிகள் மங்கலான பின்னணியில் மட்டுமே தெரியும். இதை வைத்துக்கொண்டு நாம் நிலவு சுருங்குவதாக நினைக்கிறோம்.

ஆனால், நிலா சுருங்கவில்லை என்பது மட்டுமின்றி விரிவடைவதும் இல்லை என்றும், அதன் ஒரு பகுதி மட்டுமே நம் பார்வையில் இருந்து மறைகிறது என்றும் உலகில் முதன்முதலாக லியோனார்டோ டா வின்சி கண்டுபிடித்தார்.

### 9. சந்திரனில் உள்ள பள்ளத்தின் பெயர்கள் எதனடிப்படையில் சூட்டப்படுகின்றன?

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையம் நிலவில் உள்ள பள்ளங்களுக்கு மட்டுமல்லாமல் விண்வெளியில் தெரியும் எந்த ஒரு பொருளுக்கும் பெயர் வைக்கும் பணியையும் மேற்கொண்டுவருகிறது. சந்திரனில் உள்ள பள்ளங்களுக்கு பிரபல விஞ்ஞானிகள், கலைஞர்கள் அல்லது ஆய்வாளர்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

அப்பல்லோ பள்ளம் மற்றும் மேயர் மாஸ்கோவின் ஸின் அருகிலுள்ள பள்ளங்களுக்கு அமெரிக்க, மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.


மேயர் மாஸ்கோவின்ஸ் என்பது சந்திரனின் கடல் பகுதி என்று அழைக்கப்படுகிறது.சந்திரனைப் பற்றி மனிதர்களுக்குத் தெரியாத மேலும் பல விஷயங்கள் உள்ளன.

அரிசோனாவின் லோவெல் அப்சர்வேட்டரி ஆஃப் ஃபிளாக்ஸ்டாஃப் (Lowell Observatory of Flagstaff) 1988 ஆம் ஆண்டில் சந்திரனைப் பற்றி ஒரு ஆய்வு நடத்தியது.இதில் பங்கேற்ற 13 சதவீதம் பேர் நிலவு பாலாடைக்கட்டியால் ஆனது என கருதுவதாக தெரிவித்தனர்.

### 10. நிலவின் மர்மம் நிறைந்த தென்துருவம்.

சந்திரயான்-3 செயற்கைக்கோள் சென்றடைய முயற்சிக்கும் நிலவின் தென் துருவப் பகுதி மிகவும் வியப்பை ஏற்படுத்தும் பகுதியாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவின் கூற்றின்படி, இந்த பகுதியில் பல ஆழமான குழிகளும் மலைகளும் உள்ளன என்றும், அவற்றைத் தாண்டி, சூரிய ஒளி பல பில்லியன் ஆண்டுகளாக அந்த நிலப்பரப்புகளை அடையவில்லை என்றும் தெரியவந்துள்ளது.






# கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்

நம்மையும் நாம் வாழும் சமூகத்தையும் சீர்திருத்துவதே கல்வி ஆகும். இன்றைய காலக்கட்டத்தில் கல்வி எனப்படுவது கட்டாயமான ஒன்றாகும். கல்வியின் அவசியம் பற்றி பல்வேறு அறிஞர்களும், பல்வேறு வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர். எனவே கல்வி கற்பதற்கு மாணவர்களை தயார்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பும் ஆசிரியர்களின் பங்களிப்பும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என நோக்குவோம்.

மாணவர்களின் அடிப்படைக் கல்வியும், வாழ்க்கைக் கல்வியும், ஒவ்வொரு வீட்டுச் சூழலிலிருந்தே ஆரம்பிக்கின்றது. எனவே கல்வியின் தேவையை ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டிய தேவை உள்ளது.

சில பெற்றோர்கள் ஆசியர்களை தங்களது பிள்ளைகள் முன்னிலையில் விமர்சனம் செய்வதால் ஆசிரியர் மீதான பிள்ளைகளின் பற்று குறைகின்றது. ஆசிரியர் தொடர்பான தவறான மதிப்பிடல் ஏற்படுகின்றது. இதன் விளைவு மாணவர்களை தவறான நடத்தைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான பிள்ளைகள் மீது ஆசிரியர்களின் அக்கறையும் குறைவாகவே காணப்படுகின்றது.

அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளை தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றனர். ஆசிரியருடன் தொடர்பில் இருக்கின்றனர். பிள்ளை கற்ற விடயங்களை பகிர்ந்து கொள்கின்றனர். பயிற்சி கொப்பியை பரிசோதிக்கின்றனர்.  நடைபெறாத பாடங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றனர்.இது தொடர்பில் ஆசிரியருடன் கலந்துரையாடுகின்றனர். இவ்வாறு பெற்றோர்களால் கண்காணிக்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலமே சிறப்பாக அமைகின்றது.

பாடசாலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்த்து பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர்களும் உள்ளனர். இதனால் பாடசாலைக்குரிய



முருகையா
தவமணி தேவி
(வட்ட கொட)





**எமது பிள்ளைகளின் கற்றல் சிறப்பாக அமைய வேண்டும் என போராடும் ஆசிரியர்களும் அதிகமாகவே காணப்படுகின்றனர். வகுப்பறை எனும்போது பல்வேறு பெற்றோர்களின் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களால் நிரப்பப்படுகின்றது. எனவே பிள்ளைகளின் கற்றல் உலகமானது எமது சமூகத்தோடு மிகவும் பொருத்தப்பாடு உடையதாகவே காணப்படுகின்றது.**

கலாசாரங்கள், விழுமியங்கள், மாணவர் ஒழுக்கம் என்பன பாதிக்கப் படுகின்றன. சில கிராமப்புற பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதித்து உறவினர் வீடுகள் அல்லது விடுதிகளில் தமது பிள்ளைகளை தங்க வைக்கின்றனர். இதனால் பிள்ளை பெருமளவு நடத்தை மாற்றங்களுக்கு உள்ளாகின்றது.

பெற்றோரின் தவறான உணவுப் பழக்கவழக்க முறைகளினாலும் பிள்ளைகள் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். பல தொற்றுநோய்களுக்கு சிறு வயதிலேயே ஆளாகும் நிலை ஏற்படுகின்றது. அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வேலைகளையும் சேர்த்து செய்வதனால் பிள்ளைகள் தமக்கு ஏற்படும் சவால்களை சுயமாக எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு கலாசாரம், மரபுகள் போன்றவற்றை கற்றுக் கொடுக்க மறந்து விடுகின்றனர். இதனால் தமது சமூக கட்டுப்பாடுகளை பிள்ளைகள் மீறும் நிலை ஏற்படுகின்றது.

எதிர்கால சந்ததியினரான எமது பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும்சட்ட திட்டங்களை கடைப் பிடிப்பவராகவும் உருவாக்க வேண்டியது பெற்றோராகிய எமது ஒவ்வொருவரினதும் பாரிய பொறுப்பு ஆகும்.

எமது பிள்ளைகளின் கற்றல் சிறப்பாக அமைய வேண்டும் என போராடும் ஆசிரியர்களும் அதிகமாகவே காணப்படுகின்றனர். வகுப்பறை எனும்போது பல்வேறு பெற்றோர்களின் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களால் நிரப்பப்படுகின்றது. எனவே பிள்ளைகளின் கற்றல் உலகமானது எமது சமூகத்தோடு மிகவும் பொருத்தப்பாடு உடையதாகவே காணப்படுகின்றது.

சமூகத்தில் பிள்ளைகள் கற்றுக் கொண்டவற்றையே பாடசாலையில் பிரதிபலிக்கின்றனர். தமது நண்பர்களையும் இதற்குள் இணைத்துக் கொள்கின்றனர். எனவே ஒரு ஆசிரியரினால் வெவ்வேறு மாணவர்களின் கற்றல் திறனை அறிந்து கொள்வது கடினம் இருப்பினும் தமது மாணவர்களின் கல்வியின் வளர்ச்சிக்கு பாரிய சவாலை எதிர்கொள்கின்றனர்.

நடத்தை குறைந்த பிள்ளைகளை பெற்றோர் உருவாக்கியுள்ளனர் என்றால் இவர்களை சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும் சட்டதிட்டங்களை பின்பற்ற கூடியவர்களாகவும் உருவாக்க ஆசிரியர்கள் பெருமளவு தமது பங்களிப்பினை செலுத்த வேண்டி உள்ளது எனலாம். இந்த உலகில் ஆசிரியர் எனும் போது மாணவர்களின் கல்விப் பாடத்தை மட்டுமல்ல வாழ்க்கைப் பாடத்தையும் கற்றுக் கொடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர். எமது பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்கின்றனர். நேர்மையை கற்றுக்கொடுக்கின்றனர். மாணவர்களுக்கு மதிப்பளிக்கின்றனர். மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பவர்களாக காணப்படுகின்றனர்.

ஒரு ஆசிரியராக மாணவர்களின் நல்ல நடத்தையை உறுதி செய்கின்றனர். மாணவர்களின் கற்றல் மற்றும் வேலைப் பழக்கத்தை வளர்க்க



பொறுமையாக உதவி செய்கின்றனர். பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றனர். தமது மாணவர்கள் ஒவ்வொருவரினதும் மீதான தனிப்பட்ட அக்கறை மற்றும் அவர்களின் கற்றல் ஆர்வத்தை தூண்டுகின்றனர். பாடசாலையின் அடிப்படை விதிகளுக்கும் மாணவர்களுக்கும் இடையே போராடும் போராளியாக மாறுகின்றனர். மாணவர்களின் பிறழ்வுகளின் போது அவர்களுக்கு சரியான வழிகளுக்கு இட்டுச் செல்கின்றனர். வகுப்பறையில் நேர்மையான கற்றல் திறன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றனர். மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றனர். மாணவர்களின் அறிவாற்றல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றுகின்றனர்.

எனவே பெற்றோர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ஆசிரியர்களுக்கு கரம் கொடுப்போம் சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவோம். ■



# காற்றில் கரைந்த தடா வழக்கறிஞர் சந்திரசேகர்

ஐங்கரன்

தமிழ்தேசிய ஆதரவாளரும், மேதகு பிரபாகரனின் நம்பிக்கை நட்சத்திரமாக தமிழகத்தில் செயல்பட்டவரும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வழக்கறிஞராக செயல்பட்டவருமான தடா சந்திரசேகரன் சென்னையில் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளரும், தமிழ்தேசிய சிந்தனையாளரும், நாம் தமிழர் கட்சி தடா சந்திரசேகரனுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தால் அவர் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் காலமானார்.

காற்றில் கரைந்த தடா சந்திரசேகர் என கண்ணீரில் சீமான் அஞ்சலி செலுத்தியுள்ளார். 'எங்களை பின் தொடரலாம், என் வாழ்வில் இழப்புகளும் சோதனைகளும் நிறையும் தருணங்களில் எல்லாம் நான் கொண்டிருந்த ஒரே ஒரு நம்பிக்கை மூத்தவர் இருக்கிறார் என்பது மட்டும்தான். அந்த நம்பிக்கையை தான் நான் இழந்து விட்டு அமர்ந்திருக்கிறேன். பொதுச்செயலாளர் மூத்தவர் சட்டத்தரணி நா.சந்திரசேகரன் அவர்களின் மறைவு, தமிழ்த் தேசியப் பேரினத்திற்கே ஏற்பட்ட பேரிழப்பு' என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சீமான் அஞ்சலி அறிக்கையில், 'எனது மூத்தவர் இல்லாத உலகில் இனி என்ன செய்வது எனப் புரியாமல் திசை காட்டியை இழந்த மாலுமிப் போல தவித்து இருக்கிறேன். தனித்திருக்கிறேன். நானும், மூத்தவரும், அண்ணனும் வெவ்வேறு கருப்பைகளில் கரு கொண்டாலும், இலட்சிய உறுதியில் ஒரே மனிதனாக உரு கொண்டவர்கள். என்னை நோக்கி வரும் சோதனை அம்புகளை எல்லாம் எதிர்கொண்டு கர்ணனின் கவசம் போல என்னை காத்து நின்றவர் அவர்தான். எனக்கு மட்டு மல்ல, என்னுயிர் அண்ணன் நம் தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன் அவர்களுக்கும், நம் தேசியப் படையான விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் அவர் வழக்கறிஞர் மட்டுமல்ல, நம்பிக்கைகளின் இருப்பிடம். நம் மூத்தவரும் அப்படித்தான்.

மனித வாழ்வில் எத்தனையோ இழப்புகள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு தாண்டி வருவதற்கு அளவற்ற மனவலிமை தேவைப்படுகிறது. என் வாழ்வில் இழப்புகளும் சோதனைகளும் நிறையும் தருணங்களில் எல்லாம் நான் கொண்டிருந்த ஒரே ஒரு நம்பிக்கை மூத்தவர் இருக்கிறார் என்பது மட்டும்தான். அந்த நம்பிக்கையை தான் நான் இழந்து விட்டு அமர்ந்திருக்கிறேன்.

நம் தேசியத் தலைவரின் தாய் தந்தையரான அம்மா பார்வதி அம்மாள் அப்பா வேலுப்பிள்ளை ஆகியோரை தமிழகத்தில் வைத்து பராமரித்து தன் தாய், தந்தையர் என பாதுகாத்தவர் அவர். கொடும் தடா சட்டத்தில் சிக்கிக்கொண்ட நம் சொந்தங்களை எல்லாம் மீட்டு வெறும் சந்திரசேகராக இருந்த நமது மூத்தவர் தடா சந்திரசேகராக மாறிய கதை நம் இனத்திற்கான விடுதலை வரலாற்று பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன' என்றார்.

தடா சந்திரசேகரனின் மறைவு தமிழ்தேசிய ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலரை அதிர்ச்சியடைய வைத்து உள்ளது. அவரது மறைவுக்கு பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து உள்ளார். இது குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி துணை பொதுச்செயலாளர் வன்னி அரசு இரங்கல் தெரிவித்து உள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டு இருப்பதாவது, 'வழக்கறிஞர் தடா சந்திரசேகர் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து துயருருகிறேன். என் மீது எப்போதும் அன்பை பொழிபவர். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கடத்தியதாக காவல்துறை என்னை கைது செய்த போது நீதிமன்றத்திற்கு வந்து ஆறுதலாக நின்றவர். கடவுச்சீட்டு முடக்கப்பட்ட போது





வழக்குக்காக ஆஜரானவர். அண்ணன் தடா சந்திரசேகர் அவர்களுக்கு எமது வீர வணக்கத்தை செலுத்துகிறேன்' என்று குறிப்பிட்டு உள்ளார்.

இதேபோல் திமுக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தியும் தடா சந்திரசேகர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் பதிவிட்டு இருப்பதாவது, 'எனது மூத்த வழக்கறிஞரும் நாம் தமிழர் கட்சியின் பொதுச்செயலாளர் ஆகிய பெரும் மதிப்பிற்குரிய வழக்கறிஞர் அண்ணன் தடா சந்திரசேகர் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்' என்று குறிப்பிட்டு உள்ளார்.

விடுதலை புலிகள் அமைப்பின் ஆதரவாளரான தடா சந்திரசேகர் இலங்கைக்கே சென்று ஈழத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டவர். தமிழ்நாட்டில் ஈழப்போர் குறித்தும், தமிழ் தேசிய விடுதலை குறித்தும் பேசி வந்தவர். தலைவர் பிரபாகரனே இவரை ஈழத்துக்கு அழைத்து நேரில் சந்தித்து பாராட்டி இருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலையை தொடர்ந்து விடுதலை புலிகள் அமைப்புக்காக ஆஜராகி வழக்கறிஞராக வாதிட்டவர் தடா சந்திரசேகர். பிரபாகரனின் பெற்றோர் வேலுப்பிள்ளை, பார்வதி அம்மாளும் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த போது சென்னை திருவான்மியூரில் உள்ள தடா.சந்திரசேகர் வீட்டில் தான் தங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

விடுதலை புலிகளின் வழக்கறிஞர் தடா சந்திரசேகரன் தமிழின மீட்சியே நாம் தமிழர் இலட்சியம். ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனித்தாயகத் தனியரசு அமைப்பது தான் என்றும் கூறியுள்ளார்.

தமிழீழத் தனியரசு அமைக்கப் போராடுவதே நமது இலட்சியம். இந்த உண்மை விரைவில் உலகத்திற்குத் தெரியவரும் என்று கூறிய வழக்கறிஞர் தடா சந்திரசேகர், தனிப்பட்ட முறையில் இலங்கை சென்று வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் சென்று பார்வையிட்டுள்ளார். மேலும், புதுமாத்தளன், ஆனந்தபுரம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளுக்குச் சென்று போரினால் கொல்லப்பட்ட போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தியிருந்தார்.



# அக்கினி

*ஐந்தில் ஒன்றானவள்..*
*பாரதியின் வரியில்*
*அக்கினிக்குஞ்சானவள்!*

*அக்கினிச் சிறகாய் பறந்தாய்*
*அப்துல் கலாம் எழுத்தில்.*
*வள்ளலாரின்*
*ஒளி வடிவம் ஆனாய்.*

*கண்ணகியின்*
*தோழியாய் நின்று*
*அநீதியை அழித்தவள்!*
*சீதையின்*
*கற்பை காத்தவள்!*

*நீரில் அசுத்தம் கலந்தால்*
*அசுத்த நீராகும்.*
*காற்றில் மாசு கலந்தால்*
*காற்று மாசாகும்..*

*நிலத்தில்*
*நெகிழியை போட்டால்*
*நிலமும் கெட்டுப் போகும்!*
*வாகனப் புகையால்*
*ஓசோனும்*
*தன்தன்மையை இழக்கும்!*

*ஆனால்*
*அக்கினி நீயோ..*
*உன்னில்*
*எது விழுந்தாலும்*
*நீ நீயாகவே இருப்பாய்!!*

*உன்னை நேசிக்க,*
*ரசிக்க*
*இதுவே காரணம்.*

*ஒரு*
*எரிகின்ற விளக்கால்*
*மட்டுமே*
*மற்றொரு விளக்கை*
*ஏற்ற முடியும்!!*

*அக்கினி போல்*
*நாமும்*
*அநீதியை அழித்து*
*அனைவரின் வாழ்விலும்*
*சிறு ஒளியாய் இருப்போம்!*

**முல்லை பாஸ்கர்**



# குழந்தைகளுக்காய் நேரம் ஒதுக்குதல் முக்கியமானது

சின்னச் சின்னக் குறும்புகளோடும் சண்டைகளோடும் விவாதங்களோடும் மட்டுமல்ல, அப்போதெல்லாம் என் வீடு மிக உச்சக் கலகலப்போடும், கும்மாளங்களோடும், வயிறு குலுங்கச் சிரிக்கும் நகைச்சுவைகளோடும் புன்னகைகளோடுமே அதிகம் நிறைந்திருந்தது.

புத்தகங்கள் வீடு முழுவதும் ஆங்காங்கே எறியப்பட்டுக் கிடக்கும், பென்சில்களும் கொப்பிகளும் திரும்பும் இடமெங்கும் அலங்கோலமாய் வீசப்பட்டுப்போய்க் காட்சியளிக்கும். கடந்த வாரம் துவைத்திருக்க வேண்டிய துணிமணிகளும் இரண்டு வாரத்துக்கு முந்தி துவைத்தெடுத்த உடுப்புகளும் என் படுக்கையறைக் கட்டிலிலும் மேசைகளின் மீதும் குவிந்து கிடக்கும்.

அவர்களை எப்போதுமே நான் கடிந்துகொண்டிருந்தேன். அவர்கள் அலங்கோலமாக்கிய என் வீட்டினை ஒழுங்குபடுத்தும் வரை என் சத்தத்தால் அவர்களை சங்கடப்படுத்தியிருந்தேன்.

தினமும் எனது காலைகளில்,

அம்மா! எனக்கு தேவையான புத்தகம் ஒன்றை இங்கு வைத்தேன் காணவில்லை! என ஒரு பிள்ளை எழுந்து புலம்பும்.

எனது வாசனைத் திரவியத்தை யார் எடுத்தது? என்று மற்றொன்று தொடங்கும். அம்மா நான் செய்த வீட்டுப் பாடப் புத்தகத்தை கண்டீங்களா? அடுத்தது அலறும். ஐயையோ! நான் வீட்டுப் பாடம் செய்ய மறந்துவிட்டேன். என இன்னுமொன்று ஒப்பாரி வைக்கும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தடவையும் தாம் தவறவிட்ட விடயங்கள் பற்றி என்னிடம் நச்சரிக்கும் போது நான் கூறுவது ஒன்றை மட்டும்தான். நீங்கள் எல்லோரும் வளர்ந்த பிள்ளைகள் தானே. நீங்கள் தான் உங்களுடையவைகளை பொறுப்பாக கவனமாக எடுத்து வைக்க வேண்டும்.

இன்று.

என் வீட்டு அறைக் கதவோரங்களில் நான் நின்று பார்க்கிறேன். என் கட்டில்களில் எந்த உடுப்புகளும் எறியப்பட்டிருக்கவில்லை. அது மிக அழகாக ஒழுங்காக இருக்கின்றது. எனது அலுமாரிகளை ஒருசில துணிகள் மட்டும் வைக்கப்பட்டிருக்கின்றது.

வாசனைத் திரவியங்களின் மணம் மாத்திரம் என்னைச் சுற்றியுள்ள காற்றில் இப்போது படர்ந்து விரிந்து கிடக்கின்றது.அவர்கள் எல்லோருக்கும் தனித்தனியான விசேட வாசனைத் திரவியங்கள் அப்போது இருந்திருந்தது.இனி அந்த மணங்களின் நினைவுகள் மட்டுமே என் வெறுமையான இதயத்தின் வலியை நிரப்பக் கூடியது என நம்புகின்றேன். இப்போதெல்லாம் என்னிடம் சில நினைவுகள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. அது அவர்களின் சிரிப்பொலிகளின் நினைவுகளாகவோ, சின்னச் சின்ன சண்டைகளின் நினைவுகளாகவோ, மீளக் காணக்கிடைக்காத குறும்புகள் பற்றிய ஞாபகங்களாகவோ, அவர்கள் தந்த மிகக் கணகணப்பான கட்டி அணைத்தல்கள் பற்றிய எண்ணங்களாகவோ தொடர்கின்றன.

இந்த வீடு இப்போதெல்லாம் மிகச் சுத்தமாக இருக்கின்றது. ஒழுங்கு குலையாமல் வைத்தது வைத்த இடத்திலேயே அப்படியே இருக்கின்றது.

ஒரு தியான மண்டபத்தைப்போல் மிக அமைதியாக காட்சி தருகின்றது. ஆனால், மனிதர்கள் வாழாத ஒரு பாலைவனத்தைப் போல் உணர்வுகளால், கொல்லக்கூடிய வெளிகளால் எல்லாச் சுவர்களும் நிறைந்திருக்கின்றன. உன் குழந்தைகள் உன் வீட்டினை அலங்கோலம் செய்வதையிட்டு நீ ஒருபோதும் அவர்களைக் கடிந்து கொள்ளாதே. ஒவ்வொரு தடவையும் அவர்கள் என்னைச் சந்திக்க என் வீட்டுக்கு வரும் போதும், என்னுடன் சிறிதளவு நேரம் செலவிடும் போதும், மீண்டும் புறப்படத் தயாராகி தமது கைப்பைகளை தோள்களில் போட்டுக் கொள்ளும் போதும் எனது மனது





வலிப்பதை இப்போதெல்லாம் நான் உணர்ந்து கொள்கிறேன்.

கதவுகளைப் பூட்டியபடி அவர்கள் விடைபெற்றுச் செல்லும் ஒவ்வொரு தடவையும், பூட்டப்பட்ட கதவின் உட்புறமிருந்து கண்ணீருடன் நினைத்துக் கொள்கிறேன். இந்த கதவுகளைப் பூட்டிவிட்டு வெளியே போய்வரும்படி எத்தனை தடைவைகள் முன்பெல்லாம் நான் அவர்களைக் கடிந்து கொண்டேனென்று.

இன்று எனது கதவுகளை எல்லாம் நானே பூட்டிக் கொள்கின்றேன்.என் கதவுகளைத் திறந்துவிட இப்போதெல்லாம் என் அருகில் யாரும் இல்லை.

அவர்கள் எல்லோரும் வெவ்வேறு நகரங்களுக்கும் வெவ்வேறு நாடுகளுக்கும் தத்தமக்கான வெவ்வேறு வாழ்க்கை அமைத்துப் போய்விட்டார்கள்.

எல்லோரும் இப்போது நன்றாக வளர்ந்துவிட்டார்கள். அவர்கள் எல்லோருமாக ஒன்றாக எப்போதும் இந்த வீட்டில் என்னோடு இருக்க வேண்டும் என என் மனம் இப்போது விரும்புகிறது.

என் இறைவனே!

அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களையும், அவர்கள் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள். அவர்கள் சந்தோசமாக வாழ வழி செய்.

உங்களுடைய குழந்தைகள் இப்போது அந்த சிறிய வயதில் இருந்தால், அதை அனுபவிக்க ஒருபோதும் தவறாதீர்கள். இந்த வீட்டை விட்டு அவர்கள் புறப்பட முன்னம் அவர்களுடன் சிரியுங்கள் மனசு கரையக் கரைய கதையுங்கள். கதைத்துக்கொண்டே இருங்கள். குதூகலங்களால் அவர்களை சீராட்டுவதை நிறுத்திக்கொள்ளாதீர்கள். அவர்களின் புன்னகைகளைப் புறக்கணிக்காதீர்கள். குறும்புகளோடு சந்தோஷிக்கத் தவறிவிடாதீர்கள்.

உங்கள் வீட்டை மிக விரைவாக அவர்கள் உங்களிடம் மீளக் கொடுத்துவிடுவார்கள்.ஒன்றை மட்டும் எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.

உங்கள் மண வாழ்வின் ஆரம்பத்தில் அவர்கள் உங்களோடு இருந்திருக்கவில்லை. இப்போது தான் உங்களுடன் வந்து இணைந்திருக்கிறார்கள். அவர்களை சந்தோசப்படுத்துங்கள்.

# சும்மா!... சும்மா!...

உலகில் தோன்றிய பல மொழிகள் அழிந்து இருந்த இடமே தெரியாமல் போயிருக்கின்றன.தமிழ் மட்டும் இன்றளவும் பேச்சிலும், எழுத்திலும் நீடித்து நிலைத்து தன்னையும், தான் சார்ந்த இனத்தையும் பெருமைப் படுத்திக் கொண்டி ருக்கிறது.

சும்மாசொல்லுவோம் தமிழின் சிறப்பை.

அடிக்கடி நாம் பாவிக்கும் வார்த்தை தான் இந்த ‘சும்மா’.

அது சரி ‘சும்மா’ என்றால் என்ன?

பேச்சு வழக்கு சொல்லாக இருந்தாலும் தமிழ் மொழியில் உள்வாங்கப்பட்டுள்ள ஒரு வார்த்தைதான் இந்த ‘சும்மா’.

‘சும்மா’ என்கிற இந்த வார்த்தைக்கு மட்டும் தமிழில் 15 அர்த்தங்கள் உண்டு என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?வேறு மொழிகளில் இல்லாத சிறப்பினைநாம் அடிக்கடி கூறும் இந்த ‘சும்மா’ எனும் வார்த்தை எடுத்துக் காட்டும்.

1. கொஞ்சம் சும்மா இருடா?
   (அமைதியாக/Quiet)
2.கொஞ்ச நேரம் சும்மாஇருந்து விட்டுப் போகலாமே?
   (களைப்பாறிக்கொண்டு/Leisurely)
3.அவரைப் பற்றி சும்மா சொல்லக்கூடாது?
   (அருமை/in fact)
4.இது என்ன சும்மா கிடைக்கும் என்று நினச்சியா?
   (இலவசமாக/Free of cost)
5. சும்மாகதை அளக்காதே?
   (பொய்/Lie)
6. சும்மாதான் இருக்கு.நீ வேண்டுமானால் எடுத்துக் கொள்.
   (உபயோகமற்று/Without use)
7. சும்மாசும்மாகிண்டல் பண்ணுறான்.
   (அடிக்கடி/Very often)
8.இவன் இப்படித்தான்.. சும்மாசொல்லிக்கொண்டே இருப்பான்.
   (எப்போதும்/Always)
9.ஒன்றுமில்லை. சும்மாசொல்கின்றேன்.
   (தற்செயலாக/Just)
10.இந்த பெட்டியில் வேறெதுவும் இல்லை. சும்மா தான் இருக்கின்றது.
   (காலி/Empty)
11.சொன்னதையே சும்மா சொல்லாதே.
   (மறுபடியும்/Repeat)
12.ஒன்றுமில்லாமல் சும்மா போகக் கூடாது.
   (வெறுங்கையோடு/Bare)
13. சும்மா தான் இருக்கின்றோம்.
   (சோம்பேறித்தனமாக/ Lazily)
14.அவன் சும்மா ஏதாவது உளறுவான்.
   (வெட்டியாக/idle)
15.எல்லாமே சும்மாதான் சொன்னேன்.
   (விளையாட்டிற்கு/Just for fun)

நாம் அன்றாடம் பாவிக்கும் இந்த ‘சும்மா’ என்கிற ஒரு சொல் நாம் பயன்படுத்தும் இடத்தின்படியும். தொடரும் சொற்களின்படியும்

பதினைந்து விதமான அர்த்தங்களைக் கொடுக்கிறது என்றால் அது சும்மா இல்லை.

சும்மாவாவது சிந்தித்தீர்களா இதனை..?

உலகில் உள்ள மற்ற மொழி அனைத்தும் வாயினால் பேச, செவிக்குக் கருத்தை உணர்த்துபவை. ஆனால் தமிழ் மொழி இதயத்தாலே பேசி இதயத்தால் உணர வைக்கும் மொழியாகும்.



மாலினி
கொட்டகலை
(இலங்கை)

# ரயில் பயண காதல்!

ரயில் பெட்டிகளை எண்ணிய படி எட்டி எட்டி பார்த்து தேடுகிறான் ஏக்கத்துடன் தன் காதல் கண்மணியை...
என் கண்களில் நிறைந்து என் பார்வையின் பகலிராவாய் வாழும் என்னவன் எங்கிருந்தாலும் என் கண்கள் வழியே நடமாடும் நாயகன் என்னை
தாண்டி எங்கு செல்ல முடியும்....

முதல் பெட்டி முடித்து மூன்றாம் பெட்டி கடைப்பதற்குள் கண்டுவிட்டேன் என்னவனை ....

என் கைகள் தானாக அவன் கண்கள் நோக்கி அசையகலவரத்தில் தொலைந்த குழந்தை போல் ஓடி வந்து
நிற்கிறான் அருகில்....

அதுவரை அவனை தேடி அலை மோதிய கண்கள் அமைதியாய் அவன் கண்கள் நோக்கி  வந்து விட்டாயா அன்பே?.... எனும் ஆனந்ததோரணையில்
ஆசுவாசம் கொள்கிறது...
மேலிருந்து கீழ் ஒரு பார்வை வீசி ரசித்து வைக்கிறோம் இருவரும்
ஒருவரை ஒருவர்......

சாரியில் மூடிய என் தேவதை இன்று வித்தியாசமாய் நான் விரும்பும் படி ஆடை அணிந்திருந்தாள்... என் கண்ணே பட்டு விடும் போல என ரசித்து கொண்டே திரும்பி பார்க்கிறேன்...உள்ளே இருந்த மொத்த ஊர் கண்களும்அவளை மொய்த்து கொண்டிருந்தது...
என்ன ஒரு பேரழகி என்னவள் என அவனுக்குள் கர்வம் கொள்வதை அவன் காதல் கண்கள் காட்டி
கொடுத்து விடுகிறது .....

பாதி கால்கள் தெரியும்படி இன்னும் பத்து வயது குறைந்த கல்லூரி பையன் போல் துரு துரு வென ஆணழகை மொத்தமாய் தன் பார்வையிலும் சிரிப்பிலும் பத்திரமாய் அள்ளி வீசும் ஒரே ஒரு ஆண்மகனாய் என்னை ஆட்கொள்ளும் ஆருயிரே இவனல்லவோ எனும் என் எண்ண ஓட்டங்கள் அவனுக்கு புரியாமல் இருந்திருக்க முடியாது...
மனதுக்குள் சொல்லிக் கொள்கிறேன்...

உன்னை விட என்னில் அன்பு செலுத்த என் தாய் தந்தைக்கு கூட தெரிந்திருக்க வில்லையே... உன்னால் எப்படி முடிகிறது என பேரானந்த பெருமூச்சை மெதுவாக இழுத்துக் கொள்கிறேன்...

நீயும் நானுமாய் என்று தனிமையில் அருகருகே அமர்ந்து ரயில்பயணத்தை ரசிப்பது என நீ உள்ளே முணகி கொள்கிறது என் மூளைக்குள் முக்கிய
செய்தியாய் வந்து விழுகிறது....

அன்று நீயும் நானும் அருகருகே இல்லை... ஆனால் என் நினைவுகள் உன்னருகே குடிக்கொள்ள, உன் நினைவுகள் எனக்குள்ளே வாழ்ந்த படி நம் பயணம் இன்னொரு முறை தொடரும் என்ற எதிர்பார்பில் இருவரும் இணைந்திருந்தோம் தனித்தனியாய்...

நம் கண்கள் இடைவெளி இன்றி ரசித்தப்படி நமக்குள் நாமாக பயணிக்கும் ஒரு ரயில் பயணம் நமக்காக வரும், அதுவரை காத்திருப்போம் என சொல்லிக்கொள்கிறது சற்று தொலைவில் ஒன்றை
ஒன்று பார்த்திருக்கும் நம் கண்கள்..

# புலவர் கணியன் பூங்குன்றனார்

சிவகங்கை மாவட்டம் நெற்குப்பையை அடுத்த மகிபாலன் பட்டி சாலையில் உள்ள ஒரு சிறு கிராமம் பூங்குன்றம். இங்கு பிறந்த கணியன் பூங்குன்றனார் எழுதிய பழமையான பாடல் இது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

இதன் முதல் வரி மட்டுமே பிரபலம்.பாடலின்எல்லா வரிகளும் வாழ்வின்முழு தத்துவத்தைச் சொல்கின்றன.

முழுப் பாடலும் அதன் பொருளும்கீழே

*‘யாதும் ஊரே யாவரும் கேளிர்,*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா,*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,*
*சாதலும் புதுவது அன்றே,*
*வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே,*
*முனிவின் இன்னாது என்றலும் இலமே*
*மின்னோடு வானம் தண்துளி தலைஇ ஆனாது*
*கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது*
*திறவோர்காட்சியின் தெளிந்தனம்*
*ஆதலின் மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே,*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே’*

இதன் பொருள்:

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றால்...

எல்லா ஊரும் எனது ஊர்.எல்லா மக்களும் எனக்கு உறவினர் என்று நினைத்து, அன்பே வாழ்வின் அடிப்படை, ஆதாரம் என்று வாழ்ந்தால், இந்த வாழ்வு நமக்கு எவ்வளவு இனிமையானது, சுகமானது.

தீதும் நன்றும் பிறர் தர வாரா

‘தீமையும் நன்மையும் அடுத்தவரால் வருவதில்லை’ எனும் உண்மையை உணர்ந்தால் சக மனிதர்களிடம் விருப்பு வெறுப்பு இல்லா ஒரு சம நிலை சார்ந்த வாழ்வு கிட்டும்.

நோதலும் தனிதலும்
அவற்றோ ரன்ன

துன்பமும் ஆறுதலும் கூடமற்றவர் தருவதில்லை. மனம்பக்குவப் பட்டால், அமைதி அங்கேயே கிட்டும்.

சாதல் புதுமையில்லை பிறந்த நாள் ஒன்று உண்டெனில், இறக்கும் நாளும் ஒன்று உண்டு.

இறப்பு புதியதல்ல. அதுஇயற்கையானது. எல்லோருக்கும் பொதுவானது.

இந்த உண்மையைஉணர்ந்தும், உள் வாங்கியும் வாழ்ந்தால் எதற்கும் அஞ்சாமல்வாழ்க்கையை வாழும் வரை ரசிக்கலாம்.

*வாழ்தல் இனிது எனமகிழ்ந்தன்றும் இலமே*
*முனிவின் இன்னாது என்றலும் இலமே*

இந்த வாழ்க்கையில் எது, எவர்க்கு, எப்போது, என்ன ஆகும் என்று எவர்க்கும் தெரியாது. இந்த வாழ்க்கை மிகவும்நிலை அற்றது. அதனால், இன்பம் வந்தால்மிக்க மகிழ்வதும் வேண்டாம். துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம்.வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்.

*மின்னோருவானம் தண்துளி தலை, ஆனாது*
*கல்பொருது இரங்கும்வ மல்லல்பேர்யாற்று*
*நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது*
*திறவோர் காட்சியின் தெளிந்தனம்*

இந்த வானம் நெருப்பாய்,மின்னலையும் தருகிறது. நாம் வாழ மழையையும் தருகிறது. இயற்கை வழியில் அது அது அதன் பணியை செய்கிறது. ஆற்று வெள்ளத்தில், கற்களோடு, அடித்து முட்டி செல்லும் படகு போல,வாழ்க்கையும், சங்கடங்களில் அவரவர் ஊழ்படி அதன் வழியில்அடிபட்டு போய்கொண்டு இருக்கும். இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்.

*ஆதலின்மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும்இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே*

இந்த தெளிவுபெற்றால்,பெரிய நிலையில் உள்ள பெரியவர் களைப் பாத்து மிகவும் வியர்ந்து பாராட்டவும் வேண்டாம். சிறிய நிலையில் உள்ள சிறியவர்களைப் பார்த்து ஏளனம் செய்து இகழ் வதும் வேண்டாம்.அவரவர் வாழ்வுஅவரவர்க்கு. அவற்றில் அவர வர்கள்பெரியவர்கள்.

இதை விட வேறு எவர் வாழ்க்கைப் பாடத்தை சொல்லித் தர முடியும்? தமிழ்தான் எவ்வளவு அழகிய மொழி!!





அங்கம்: 12

கொற்றவை

# வயல்

சாப்பாடு வந்து விட்டது என்ற குரல் கேட்டதும் 'அப்பாடா' என்றிருந்தது ஆனந்தனுக்கு. இன்று என்னவோ தெரியவில்லை ஒரே களைப்பாக இருந்தது. காய்ந்து போய்க் கிடந்த தரையைக் கொத்தியதும், மழுங்கிய கத்தியை வைத்துக் கொண்டு மரங்களைத் தறித்து துப்பரவாக்கியதும் காரணமாக இருக்கலாம் யோசனையுடன் கத்தி, பிக்கான் என்பவற்றை ஒரு ஓரமாக வைத்து விட்டு குரல் வந்த திசையை நோக்கி நடந்தான் ஆனந்தன்.

கூப்பிட்ட குரல் உரிமையோடு 'மச்சான்' என்று கூப்பிட்டது போல் இருந்தது. எங்கோ நன்கு பரிச்சயமான குரல். என்ன யோசித்தும் நினைவுக்கு வரவில்லை.

எல்லோரும் சாப்பிட வந்து குழுமிவிட்டார்கள். சாப்பாட்டைத் தான் காணவில்லை.

''வான் இங்கினை மட்டும் வராது...தெரியுந்தானே? ரெண்டுபேர் சாப்பாட்டை இறக்கப் போயிருக்கினம்.... வந்திடுவினம்...'' யாரோ சொன்னார்கள்.

பாதி இடிந்து கிடந்த வீடு அது. படிக்கட்டில் உட்கார்ந்தான் ஆனந்தன்.

''மையரிக் கிழங்கும் கட்டைச் சம்பலும்... சூப்பராயிரிக்கும் பிளெயின் ரீ ஒண்டையும் அடிச்சாக் காணும்... வேற எதுவும் வேணாம்... வாங்க....! வாங்க...!

ஆனந்தனுக்கு தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை.

'வெங்கி...! இவன் எங்க இங்க...?'

ஆனந்தன் பெரியவரிடத்தில் இணைந்த சமயத்தில் அங்கு இருந்தவன். அவனும் அண்மையில்தான் இணைந்திருந்தான். என்னவோ தெரியவில்லை. ஆனந்தனுக்கு அவனை மிகவும் பிடித்துப் போய்விட்டது.

ஒரே இடத்தில் இருந்த சமயங்களில் அவர்களை பிரித்துப் பார்க்கவே முடியாது. மற்றவர்கள் கேலி செய்யும் அளவிற்கு இருவரும் ஒன்றாகவே சுற்றுவார்கள்.

வெங்கி குறும்பன். அவனால் குழப்படி செய்யாமல் இருக்கவே முடியாது.

இதனால் அடிக்கடி விசாரணைக்கும் போக வேண்டியிருக்கும். அவனுடனே இருப்பதால் சிலதடவைகள் ஆனந்தனும் பிரச்சனையில் மாட்டியிருக்கிறான். வெங்கி இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். இவன் மட்டக்களப்பு படுவான் கரையில் நல்ல நிலபுலமுள்ள ஒரு குடும்பத்திலிருந்து வந்தவன். படிப்பு ஏறவில்லை. வயலில் இறங்கவும் கள்ளன் என்பார் இவனின் 'ஐயா'.

அந்தந்த வட்டார வழக்கில் பேசி அசத்துவான் வெங்கி. முகாம்களில் எந்த விழா வந்தாலும் அதில் கலந்து கொண்டு அசத்திவிடுவான்.





''வெங்கி...!! மச்சான்..!! நீ எப்பிடியடா இங்கை....? எங்கையோ நல்லா இருக்கிறாய் எண்டு நினைக்க... இது என்னடாப்பா கோலம்...?'' கண்ணீர் மல்க தனது உயிர் நண்பனை ஆரத்தழுவிக் கொண்டான் ஆனந்தன்.

'' நீ இங்க இரிக்க எண்டு தெரியும் மச்சான். அதான் வந்தனான். ஒரு முப்பது வரிசம் இரிக்கும் என்ன?''

இருவருக்குமாக அவித்த மரவள்ளிக் கிழங்கும் சம்பலும் ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு வந்து அருகில் அமர்ந்தான் வெங்கி. ஆனந்தனுக்கு இவ்வளவு காலம் கழித்துநண்பனைப் பார்த்த அதிர்ச்சியிலும் சந்தோசத்திலும் பசி பறந்துபோய் விட்டது.

''எங்கை இருக்கிறாய்? மட்டக்களப்பிலை இருந்து எப்ப வந்தனீ?.... எல்லாம் சொல்லு''

''சுருக்கமா சொன்னா வன்னிக்கு வந்து கனகாலம் ஆயிட்டு . இப்ப இந்த முதலாளி வேலை தாறன் எண்டு கூட்டி வந்திருக்காரு.... அவரிண்ட தோட்டத்தில எல்லாரும் இரிக்கம்... எனக்கு ஓடித்திரிஞ்சு செய்யிற வேலை கிடைச்சிரிக்கு...''

''எல்லாருமா...? அம்மா வந்திருக்காவா....? ஐயா போயிட்டார் எண்டு அப்பவே பெடியள் சொன்னாங்கள்... உண்மையா...?'' ஆனந்தன் வினவினான்.

''ஐயாவை சுட்டிட்டாங்கள்.... அது கனகாலம் அம்மாவும் வருத்தத்தில பொய்த்தா... என்னால வயல் செய்யேலா... உதவியும் இல்லை... அங்கை இரிக்க மனசு வரல்லை... சண்டைக்குப் பிறகு இங்க வந்து விளாத்திக்குளத்தில சின்னதா ஒரு கொட்டகை போட்டு இருந்தன்.... இப்ப இந்தா.... உன்டை இடத்துக்கே வந்திட்டன். மச்சான்!... இனி வாழ்க்கை நல்லாப் போகும்.... பாரன்...''

''அப்ப... எல்லாரும் எண்டால் ஆர்? அதுசரி! உன்டை கால் எப்பிடியிருக்கு? கஸ்டமாயில்லையோ ஓடியோடி வேலை செய்ய...?''

ஆனந்தன் வினவினான்.

வெங்கிக்கு காலில் வெடிபட்ட சண்டையில் ஆனந்தனும் இருந்தான். அந்த நேரத்தில் உடனடியாக சிகிச்சைக்கு வெளியேகொண்டுபோக முடியாதளவு உக்கிரமான சண்டை. தன்னைப் பார்க்காமல் சண்டையைப் பாருங்கள் என்று வெங்கி உறுதியாகச் சொல்லிவிட்டான். அப்படியிருந்தும் சரமாரியான அடி கொடுத்து முற்றுகையை உடைத்து வெளியேறி விட்டார்கள். கட்டையும் மீறி அதிகளவு இரத்தம் வெளியேறியிருந்தது வெங்கிக்கு. எலும்பு சில்லம் பொல்லமாக நொருங்கிப் போயிருந்தது. ஆனாலும் ஒரு சின்ன அனுக்கம் கூட இல்லை வெங்கியிடம். எவ்வளவோ முயன்றும் முழங்காலுடன் காலை எடுக்க வேண்டி வந்து விட்டது.

சில வருடங்கள் கழித்து, குடும்பச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பெரியவர் அவனை வீட்டுக்கு அனுப்ப வேண்டியிருந்தது. போக மாட்டேன் என்று அடம்பிடித்தவன் கண்ணீருடன் விடைபெற்ற அன்றுதான் ஆனந்தன் அவனைக் கடைசியாகப் பார்த்தது. அன்றைய தினம்,தன்னில் ஒரு பகுதி போய்விட்டது போல அவன் துடித்தது இன்னமும் ஞாபகம் இருக்கிறது.

''ஆர் ஆக்கள் இரிக்கினம் எண்டது சஸ்பென்ஸ்...'' வெங்கி முடிக்கவில்லை.... வேறு இடத்திலிருந்து வெங்கிக்கு அழைப்பு வந்துவிட்டது.

''போகணும் மச்சான்.... மறுகா பாப்பம்....''

மறுபடியும் வேலையில் இறங்கிவிட்டார்கள்.ஒரு காலத்தில் நல்ல செழிப்பாக இருந்த பிரதேசம். வீட்டுக்கு வீடு மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை என்று இல்லாத பழமரம் இல்லை. இப்போ எதையும் காணவில்லை. பெரிய பெரிய மரங்கள் எல்லாம் ஒன்றில் முறிந்து விட்டன அல்லது செல்லடியின் வடுக்களைத் தாங்கி நின்று கொண்டிருந்தன.

''பத்தைக்குள்ள பாம்பு இருக்கு. கருவளை நாகம் போல கிடக்கு. கவனம்!!'' யாரோ சத்தமிட்டுச் சொன்னார்கள்.

'மருந்தில்லாத காலத்தில கடிச்சா அவ்வளவுந்தான்.... கவனமா இருக்க வேணும்.'

சிறிது நேரத்தில் யாரோ கூக்குரலிட்டார்கள். எல்லோரும் அந்த இடத்திற்கு ஓடினார்கள். இடம் அமளிதுமளிப்பட்டது. ஒரு பெரிய பாம்பை அடித்துப் போட்டிருந்தார்கள். அது விசப் பாம்புதான் என்று யாரோ சொன்னார்கள்.

ஆனந்தன் துப்பரவாக்க தேர்ந்தெடுத்த வளவுநடுத்தர அளவானது. மதியச் சாப்பாடுவரை ஓய்வின்றி கடுமையாக வேலை செய்தான் ஆனந்தன்.

'ம்ம். ஓரளவுக்கு பாக்க நல்லாத்தான் இருக்கு....' தனது வேலையையிட்டு தனக்குள் பெருமிதம் கொண்டான் ஆனந்தன்.

'இந்த இடங்கள்ளை தென்னை, மா, பலா எண்டு வைக்க ரெண்டு மூண்டு வருசத்தில ஓரளவுக்கு செழிப்பா வந்திடும். வீடுவாசல், கழிவறைதான் எல்லாம் புதுசா கட்டவேணும்.. சரியான செலவுதான்...'

சாப்பாட்டு நேரத்தில் முதலாளி வந்திருந்தார்.

''கதைச்சு நேரத்தைப் போக்காட்டாதேங்கோ. வந்தமா வேலையைப் பாத்தமா எண்டு இருக்கோணும்...'' கண்டிப்பும் கறாராகவும் சொன்னார் முதலாளி. புதுப்பணக்காரத்தனம் அவரின் பேச்சிலும் நடையுடை பாவனைகளிலும் மிளிர்ந்தது. அவனை விடவும் அவருக்கு வயது குறைவாகத்தான் இருக்கும். வேலைக்கு வந்தவர்களில் பலர் வயது முதிர்ந்தவர்கள். முதலாளி அவர்களை எடுத்தெறிந்து பேசிய விதம் ஆனந்தனுக்கு சற்றும் பிடிக்கவில்லை. ஒன்றும் செய்யவியலாத நிலையில் மௌனமாக உணவருந்தினான் அவன்.





கட்டை ஒன்று நகத்தைக் கிழித்துவிட்டது. கட்டுப்போட துணி எதுவும் இல்லை. மண் பட்டவுடன் இரத்தம் வருவது நின்றுவிட்டது. ஆனந்தன் துப்பரவாக்கிய வளவின் கிழக்கு மூலையில் கிணறு ஒன்று இருந்தது. தென்னம் மட்டைகளும் குப்பை கஞ்சலுமாக தண்ணீர் கருகருவென்று இருந்தது. எட்டிப்பார்த்த சின்னராசு அண்ணர்,

''எக்கணம் உதைக் கலக்கி இறைக்கிறதுக்கிடையில சீவன் போப்போகுது. ஆழமோ என்ன இழவோ தெரியேல்லை... அடி தெரிய மாட்டுதாம்.. ஏன் தம்பி! இந்தப் பக்கங்கள்ள கிணறுகள் ஆழமே?''

''அவளவு ஆழமில்லை அண்ணை! நல்ல தண்ணி. சுப்பரான மண். நல்ல பச்சைப்பசேல் எண்டு இருந்த இடம். கொஞ்சம் வசதியான ஆக்கள். இப்ப பாருங்கோ...'' பெருமூச்சு விட்டான் ஆனந்தன்.

''இடந்தான் போனது... இங்கத்தையார் கனக்கப்பேர் வெளிநாட்டுக்கு ஓடீட்டினமாம்... இப்ப அவைதான் உடனை வீடு வாசலைத் திருத்த வேணும் எண்டு அவதிப்படுகினம் அதுதான் முதலாளியும் அவசரப்படுத்துறார்.... வெளிநாட்டுக்காரருக்கு காசு கழஞ்சு ஒரு பொருட்டில்லைப் பாரும்...'' கதை குடுத்தார் சின்ராசு அண்ணர்.

''காசை விடுங்கோ அண்ணை. சொந்த இடமல்லே...! ஆருக்கும் துடிக்கும் தானே? அதுகும் அவ்வளவு தூரத்தில இருக்கினம். தன்ரை வீடு எப்பிடி இருக்கெண்டு ஏங்க மாட்டினமோ...?''

கதைத்தாலும் காரியத்தில் கவனமாயிருந்தனர் இருவரும். பின்னேரமாகிவிட்டது. வேர்த்துக் களைத்துவிட்டான் ஆனந்தன். எப்போது வீட்டுக்குப் போவோம் என்றிருந்தது. யாரோ விறுவிறுவென்று நடந்து வந்தார்கள். தில்லைநாதன்தான் வந்துகொண்டிருந்தார். வேலை முடிய இன்னும் நேரம் இருந்தது. வானும் வரவில்லை.

'இவர் ஏன் இப்படி அரக்கப்பறக்க ஓடிவாறார்?.'

''ஆனந்தன்...! உன்னட்டை போன் இருக்கல்லேடாப்பா..? ஒருக்கா முதலாளிக்கு போட்டு உடனை வரச்சொல்லு.... கையோடை இந்தப்பக்கத்து விதானையையும் கூட்டி வரச் சொல்லு...'' மூச்சிறைத்தார் அவர்.

''ஏன்...? என்ன நடந்துது...? யாருக்கும் என்னவும் பிரச்சனையே...?'' சின்ராசு அண்ணர் பயத்துடன் வினவினார்.

''பிரச்சனைதான். ஆனா எங்களுக்கில்லை. அங்க மேற்கால ஒரு பங்குக் கிணறு கிடக்கு. கொஞ்சம் பெரிய கிணறு. மட்டையள், முறிஞ்ச மரத்தின்ர ஒரு பகுதி, கஞ்சல் கூளம் எண்டு நிரம்பிப்போய்க் கிடக்கு. எட்டி எடுக்கலாம்போல கிடந்துது.... நாளை நாளையிண்டைக்கு இடையில நாங்கள்தானே துப்பரவாக்க வேணும் எண்டு கொஞ்சத்தை இழுத்து எடுத்தம்.... ஒரு எலும்புக்கூடு வந்திருக்கடாப்பா.. எனக்கு கையும் ஓடேல்லை காலும் ஓடேல்லை.... மயக்கம் வருமாப்போலை கிடக்கு...''

போட்டது போட்டபடி விட்டுவிட்டு எல்லோரும் அங்கு ஓடிப் போனார்கள். ஈரமட்டைகளோடு மட்டையாய் ஒரு கையின் எலும்புக்கூடு கிடந்தது.

''இது மனிசக் கைதான். இதுதானோ இன்னும் கிடக்கோ?''

''கையை மட்டும் கழட்டியே போட்டிருப்பங்கள்...? முழு எலும்புக்கூடும் கிடைக்கும்... ஆர் கண்டது...? இன்னும் எத்தினை வருமோ....?''

''வீடு பாக்க வந்த ஆருமோ? இல்லை பிடிச்சவையை கொண்டு போட்டிட்டாங்களோ....?''

''இனி இப்போதைக்கு இங்க வேலை நடக்குமோ தெரியல்லை.''

''எனக்கு இங்க வரவே பயமாக் கிடக்கு. வேற வேலை பாக்கிறதுதான் நல்லம்....''

பல்வேறு வகையான கருத்துகளும் குரல்களும் கதம்பமாகக் கேட்டன.

''ஆ.... ஓமோம்...! இந்த இடந்தான். அங்க நடந்துவர ஒரு கால் மைல்ல மேற்கால ஒரு பெரிய கிணறு கிடக்கு..அதுதான் நாங்கள் எல்லாரும் அங்கதான் நிக்கிறம்....''

''ஆருக்கு போன் பண்ணி சொல்லுறீங்கள்...?'' யாரோ கேட்டார்கள். ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி...

''அவையள்ளை ஒருத்தரைத் தெரியும் அவையிட்டை சொன்னாத்தான் இதை பெரிசா எடுத்து வெளியில கொண்டுவருவினம். இவங்கள் மெதுவா மறைச்சாலும் மறைச்சிடுவினம்.''

முதலாளியும், விதானையாரும் வந்து சேர்ந்தார்கள். வேறு சில அதிகாரிகளையும் காவற்துறையினரையும் கூட விதானையார் வரவழைத்திருந்தார். வந்த கையுடன் காவற்துறையினர் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். வேலைக்கு வந்தவர்களையும் அங்கு நிற்கக்கூடாது என்று விரட்டினர்.

'விசயத்தை மூடி மறைக்கவோ.?'

கழுகுக்கு மூக்கில் வியர்த்தது போல சில செய்தியாளர்களும் அங்கு வந்துவிட்டார்கள். கட்சிக்காரர்களும் வந்திறங்கினர். இனி எதையும் மறைக்க இயலாது. அவர்களுடன் காக்கிச் சட்டைக்காரர் மல்லுக்கு நிற்க, வேலைக்கு வந்தவர்கள் வீட்டுக்குப் புறப்பட்டனர். வழமையைவிட இன்று அதிக நேரமாகிவிட்டது.

வீடு அமைதியாக இருந்தது.வழமையாக அவனுக்காக சாந்தி வெளித் திண்ணையில் காத்திருப்பாள். இன்று அவளைக் காணவில்லை. வீட்டினுள் நுழைந்ததும் வெண்ணிலா பதட்டமாக வந்தாள்.

''அப்பா!.. எத்தினை தரம் உங்களுக்கு கோல் எடுக்கிறது? ஏன் எடுக்கேல்லை...? அம்மாவுக்கு காய்ச்சல் நெருப்பாக் கொதிக்குது....''

தொடரும்....







**ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஆகஸ்ட் 30.**







